பக்கங்கள்: 24

THEEMPUNAL
# தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை

தீ : 02 புனல்:02 07.05.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053



மக்ரோனின் வெற்றி
ஐரோப்பாவின் நெருக்கடியைச் சீர்செய்யுமா?
ஐ.வி.மகாசேனன்
பக்கம் 07



மே 10 பேராசிரியர் கா.சிவத்தம்பியின் ௯0 ஆவது பிறந்த தினம்!
முருகபூபதி
பக்கம் 12





அ.நிக்சன்

# பௌத்த தேசியத்தைக் காப்பாற்ற மற்றுமொரு பலப்பரீட்சை

பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு போன்றவற்றால் பல பிரச்சினைகளை எதிர்கொண்ட பின்னரும் கூட சிங்கள அரசியல் கட்சிகள், இனப்பிரச்சினைக்கான தீர்வு விவகாரத்தில் அக்கறை செலுத்த வில்லை என்பதையே பிரதி சபாநாயகருக்காக வாக்கெடுப்பும் நியமனமும் கோடிட்டுக் காண்பித்துள்ளன.

அடுத்த நிகழ்ச்சி நிரலாக இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ள நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைத்தல் மற்றும் 20 ஆவது திருத் தச் சட்டத்தை இரத்துச் செய்து 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் புதுப்பித்து 21 ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவர் என்பதும் பட்டவர்த்தனம்.

மக்கள் எதிர்கொள்ளும் விலைவாசி உயர்வுப் பிரச்சினைகளைச் சாதகமாக்கி அரசாங்கமும் எதிர்க்கட்சியும் அதிகாரங்களை அப்படியே இடம் மாற்றுகின்ற சதுரங்க விளையாட்டில் ஈடுபடுகின்றனவேதவிர மக்களின் அன்றாட வாழ்வா தாரப் பிரச்சினைகள் குறித்துக் கவனம் செலுத்தப்படவில்லை.

கோட்டபாய ராஜபக்ஷ அரசாங்கத்தின் தற்போதைய தளம்பல் நிலையைச் சாதகமாக்கி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோர் தமக்கு வசதி யாக அரசியலமைப்பில் உள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையின் சில அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு மாற்றுவதிலும் ஜனாதிபதி ஆட்சி முறையைத் தொடர்ந்து பேணுவதிலுமே அதிக அக்கறை செலுத்துகின்றனர்.

ஆனாலும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை முற் றாக ஒழிக்க வேண்டுமென்பதில் ரணில், சஜித் ஆகியோருக்கு முழு உடன்பாடு இல்லை. ஏனெனில், ஜனாதிபதிப் பதவி என்பது அவர்கள் இருவரின் இலக்கு.

▶23





“யார் ஆட்சி செய்தாலும் பிரச்சினையில்லை. தமக்குரியவாறான ஆட்சியும் இலங்கை சீனாவின் பக்கம் சென்றுவிடக் கூடாது என்ற கோணத்திலுமே அமெரிக்க, இந்திய அரசுகள் நகருகின்றன. சீனா தனக்குரிய ஆட்சியை அமைக்க இலங்கையின் தற்போதைய நெருக்கடியை நன்கு பயன்படுத்துகின்றது.”



# கிழக்கு உக்ரைனை ரஷ்யாவுடன் இணைக்க முயற்சி

வானதி

உலக நாடுகளின் பலத்த எதிர்ப்பையும் மீறி உக்ரைன் மீதான தாக்குதலை புடின் ஆரம்பித்தார். உக்ரைனின் தலைநகரான கீவ்வைக் கைப்பற்றியதும் போர் முடிவுக்கு வந்து விடும் என்ற எதிர்பார்ப்புடன் புடின் தொடுத்த போர் ஆரம்பமாகியது. 10 வாரங்கள் கடந்தும் உக்ரைன் தலைநகரைக் கைப்பற்ற முடியாமல் ரஷ்யப்படை தடுமாறுகிறது.

ரஷ்யா எதிர்பார்க்காத வகையில் உக்ரைன் படைகள் பதில் தாக்குதல் நடத்துகின்றன. மேற்கத்தைய நாடுகள் உக்ரைனுக்குத் தேவையான ஆயுதங்களை வழங்குகின்றன. ரஷ்யாவின் ஆயுதங்களை அழிக்கக்கூடிய வலிமையான ஆயுதங்களை உக்ரைன் படைகள் சரியான முறையில் பாவிப்பதால் ரஷ்யப் படைகள் முன்னேற முடியாமல் பின்வாங்குகின்றன. ரஷ்யாவின் கொடூரத் தாக்குதலால் உக்ரைனின் நகரங்கள் உருக்குலைந்து போயுள்ளன.

யுத்தத்தை ஆரம்பித்தவர் புடின். அவர்தான் அதனை நிறுத்த வேண்டும். இன்றைய நிலையில் யுத்தத்தை நிறுத்தும் எண்ணம் புடினுக்கு இல்லை.

கிழக்கு உக்ரைனின் பெரும்பகுதியை இந்த மாத இறுதியில் இணைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக ஐரோப்பாவின் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பின் அமெரிக்கத் தூதர் மைக்கேல் கார்பெண்டர் தெரிவித்துள்ளார். கிரெம்ளின் தெற்கு நகரமான கெர்சனையும் ஒரு சுதந்திர குடியரசாக அங்கீகரிக்கும் என்றும் எந்த நடவடிக்கையும் அமெரிக்கா அல்லது அதன் நட்பு நாடுகளால் அங்கீகரிக்கப்படாது, என்றார்.

டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பிராந்தியங்களில் போலியான வாக்கெடுப்புக்களை நடத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளது, அது "ஜனநாயக அல்லது தேர்தல் சட்டபூர்வமான தன்மையைச் சேர்க்க முயற்சிக்கும்" மற்றும் நிறுவனங்களை ரஷ்யாவுடன் இணைக்கும் என கார்பெண்டர் கூறினார். கெர்சனில் ரஷ்யா சுதந்திர வாக்கெடுப்பை நடத்துவதற்கான அறிகுறிகள் இருப்பதாகவும் அவர் கூறினார்.



அங்குள்ள மேயர்களும் உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர்களும் கடத்தப்பட்டுள்ளனர். இணையம், செல்போன் சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. ரஷ்ய பள்ளிப் பாடத்திட்டம் விரைவில் திணிக்கப்படும் என்று கார்பெண்டர் கூறினார். ரஷ்யா தனது ரூபிளை அங்கு நாணயமாக அறிமுகப்படுத்தியதாக உக்ரைன் அரசு கூறுகிறது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தால் மேற்பார்வையிடப்பட்ட வார இறுதி வெளியேற்றத்திற்கு முன், சுமார் 1,000 பொதுமக்கள் உருக்கு ஆலையில் இருப்பதாக நம்பப்படுகிறது. அவர்களுடன் 2,000 உக்ரைனிய பாதுகாவலர்கள் சரணடைய வேண்டும் என்று ரஷ்யா விடுத்த கோரிக்கையை உக்ரைன் ஏற்றுக் கொள்ளவில்லை. 400,000 க்கும் அதிகமான மக்கள் மரியுபோலில் ஒட்டு மொத்தமாக 100, 000 பேர் இன்னும் இருக்கலாம். ரஷ்யப் படைகள் நகரத்தின் பெரும்பகுதியை இடிபாடுகளில் மூழ்கடித்துள்ளன, சிறிதளவு உணவு, தண்ணீர், மருந்து ஆகியன இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்றனர்.

மரியுபோல் உக்ரைனின் கிழக்கு தொழில்துறை மையப் பகுதியான இது டான்பாஸில் அமைந்துள்ளது. மேலும், கிழக்கில் ரஷ்யாவின் பிரச்சாரத்திற்கு முக்கியமானது. அதன்பிடிப்பு உக்ரைனின் முக்கிய துறைமுகத்தை இழக்கும், ரஷ்யா 2014 இல் உக்ரைனிலிருந்து கைப்பற்றிய கிரிமியன் தீபகற்பகத்திற்கு ஒரு நில வழித்தடத்தை நிறுவ முயற்சிக்கும்.

உக்ரைன் மக்களை ரஷ்யா தனது நாட்டுக்குக் கடத்துவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சுமார் 200,000 குழந்தைகள் உட்பட 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உக்ரைனில் இருந்து ரஷ்யாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் திங்களன்று கூறியது, அரசுக்குச் சொந்தமான செய்தி நிறுவனமான TASS தெரிவித்துள்ளது.

"உக்ரைனிய அதிகாரிகளின் பங்கேற்பு இல்லாமல்" 1,847 குழந்தைகள் உட்பட 11,550 பேர் உள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சக அதிகாரி மிகைல் மிஜின்ட்சேவ் கூறினார்.

அந்தச் மக்கள் "டோனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் மக்கள் குடியரசுகளின் ஆபத்தான பகுதிகளிலிருந்தும், உக்ரைனின் பிறபகுதிகளிலிருந்தும் ரஷ்யக் கூட்டமைப்பின் எல்லைக்கு வெளியேற்றப்பட்டனர்" என்று அறிக்கை கூறுகிறது. விவரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.

போர் தொடங்கியதில் இருந்து குறைந்தபட்சம் 220 உக்ரைனிய குழந்தைகள் ரஷ்ய இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 1,570 கல்வி நிறுவனங்கள் அழிக்கப்பட்டுள்ளன அல்லது சேதமடைந்துள்ளன என்றும் உக்ரைனிய பிரதமர் ஜெலென்ஸ்கி திங்களன்று கூறினார்.

தலைநகரான கீவ்வைக் கைப்பற்றத் தவறியதால், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது கவனத்தை டான்பாஸூக்கு மாற்றினார், அங்கு மாஸ்கோ ஆதரவு பிரிவினைவாதிகள் 2014 முதல் உக்ரைனியப் படைகளுக்கு எதிராகப் போரிட்டு வருகின்றனர்.

துருப்புக்கள் மற்றும் ஆயுதங்களின் குவிப்பு மற்றும் டான்பாஸூக்கு மேற்கே உள்ள சபோரிஜியா பகுதியில் செர்வோன் அருகே ஒரு வெடிமருந்து கிடங்கு உட்பட, பிராந்தியத்தில் உள்ள இராணுவ இலக்குகளைத் தாக்கியதாக ரஷ்யா கூறியது.

உக்ரைனிய மற்றும் மேற்கத்திய அதிகாரிகள் மாஸ்கோவின் துருப்புக்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், பல பொதுமக்களைக் கொன்றதாகவும் கூறுகின்றனர்.

கருங்கடல் கடற்கரையில் உள்ள ஒடேசா பிராந்தியத்தின் ஆளுநர் மக்சிம் மார்சென்கோ, திங்களன்று ரஷ்ய ஏவுகணைத் தாக்குதலால் இறப்பு மற்றும் காயங்கள் ஏற்பட்டதாக டெலிகிராமில் கூறினார். அவர் எந்த விவரமும் தெரிவிக்கவில்லை. இந்தத் தாக்குதலில் ஒரு தங்குமிடத்தை அழித்ததாகவும் 14 வயது சிறுவன் கொல்லப்பட்டதாகவும் ஜெலென்ஸ்கி கூறினார்.

புதனன்று 300 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பாழடைந்த உக்ரைனிய துறைமுக நகரமான மரியுபோல் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

முற்றுகையிடப்பட்ட அசோவ்ஸ்டல் எஃகு ஆலையை விட்டு வெளியேறி ஐந்து நாள் பாதுகாப்பான பாதை நடவடிக்கையின் போது சபோரிஜியாவை அடைந்த பொதுமக்களும் இதில் அடங்கும் என்று தொண்டு நிறுவனம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படைகள் மரியுபோலில் எதிர்ப்பின் கடைசி இடமான எஃகு ஆலையைத் தாக்கத் தொடங்கியுள்ளன.

புதன்கிழமை வெளியிடப்பட்ட ஒரு வீடியோவில், உக்ரைனிய அசோவ் படைப்பிரிவின் தளபதி டெனிஸ் ப்ரோகோபென்கோ, ஊடுருவல் இரண்டாவது நாளாக தொடர்ந்தது மற்றும் "கடுமையான, இரத்தக்களரி போர்கள் உள்ளன" என்றார். அசோவ்ஸ்டல் உக்ரைனிய இராணுவ எதிர்ப்பின் மிகப்பெரிய மையங்களில் ஒன்றாக உள்ளது மற்றும் பாரிய ரஷ்ய வான் வழி குண்டுவீச்சு மற்றும் ஷெல் தாக்குதல் நடத்தப்படுகிறது.




ரஷ்ய விமானங்களும் பீரங்கிகளும் கடந்த நாளில் நூற்றுக்கணக்கான இலக்குகளைத் தாக்கியுள்ளன. இதில் துருப்புக்களின் கோட்டைகள், கட்டளை நிலைகள், பீரங்கி நிலைகள், எரிபொருள் மற்றும் வெடிமருந்து கிடங்குகள் மற்றும் ரேடார் உபகரணங்கள் அடங்கும் என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் இகோர் கொனாஷென்கோவ் தெரிவித்தார்.

இதற்கிடையில், உக்ரைனிய அதிகாரிகள், நாடு முழுவதும் உள்ள ரயில் பாதை உள்கட்டமைப்பு இன்னும் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாகக் கூறினர். இராணுவம் அல்லாத இலக்குகளை ரஷ்யா தொடர்ந்து தாக்கி வருவதாக இங்கிலாந்தின் பாதுகாப்பு அமைச்சகம் தனது சமீபத்திய இராணுவ உளவுத்துறை புதுப்பிப்பில் கூறியுள்ளது.

குடியிருப்புகள், பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் போக்குவரத்து மையங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

உக்ரைனிய தீர்மானத்தைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் சிவிலியன் உள்கட்டமைப்பை குறிவைக்கும் ரஷ்யாவின் விருப்பத்தை இது காட்டுகிறது என்று MxD கூறியது.

"ஒடெச, முகெர்சொன், Mmupcn ghy போன்ற முக்கிய நகரங்களை இலக்கு வைப்பது கருங்கடலுக்கான அணுகலை முழுமையாகக் கட்டுப்படுத்தும் அவர்களின் விருப்பத்தை எடுத்துக் காட்டுகிறது. இது உக்ரைனின் கடல் தொடர்புகளைக் கட்டுப்படுத்த உதவுகிறது. இது அவர்களின் பொருளாதாரத்தை எதிர்மறையாக பாதிக்கிறது" என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. ■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL தீம்புனல்

# மக்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்திய அரசியல்வாதிகள்

இலங்கையை வங்குரோத்தாக்கிய அரசாங்கத்தையும் குடும்பத்தையும் அரசியல் அரங்கில் இருந்து விரட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் காலிமுகத்திடலில் மக்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

சுயாதீனமாகச் செயற்படப்போகிறோம் எனக் கூறிக்கொண்டு சிலர் வெளியேறியுள்ளனர். ஜனாதிபதியின் மீதும் அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இல்லை என்ற பிரேரணைகள் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எல்லாம் நல்லபடியாகத்தான் போய்க்கொண்டிருக்கிறதென மக்கள் நம்பி இருந்த வேளையில் தாம் அரசியல்வாதிகள் என்பதை மக்களின் பிரதிநிதிகள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளனர்.

பிரதி சபாநாயகர் தெரிவில் அரசியல்வாதிகள் குத்துக்கரணம் அடித்ததால் மக்கள் ஏமாளிகளானார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த பிரதி சபாநாயகரான சியம்பலாபிட்டிய இராஜினாமாச் செய்து அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுத்தார். புதிய தெரிவுக்காக அரசாங்கம் நிறுத்தும் பிரதி சபாநாயகருக்கு எதிராக எதிர்க் கட்சிகள் வாக்களிக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய 11 கட்சி உறுப்பினர்களும் ஆதரவளிக்க மாட்டார்கள் என மக்கள் நம்பிக்கையுடன் இருந்தனர். அந்த நம்பிக்கை எல்லாம் பதவி ஆசையின் முன்னால் பிசுபிசுத்துப்போய்விட்டது.

பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்த சியம்பலாபிட்டியை மீண்டும் அப்பதவியில் அமர்த்தி அரசாங்கத்தின் மூக்கை உடைக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விரும்பியது. சில நிபந்தனைகளுடன் எதிர்க் கட்சிகளும் அதற்கு ஆதரவு கொடுக்க உறுதியளித்தன. அரசாங்கம் சியம்பலாபிட்டியை ஆதரிக்க முடிவெடுத்ததால் எதிர்க் கட்சிகள் பாக்கீர் மாக்காரின் பெயரை முன்மொழிந்தது.

225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 148 பேர் அரசாங்க ஆதரவு வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களித்ததன் மூலம் ரஞ்சித் சியம்பலாபிட்டியவை துணை சபாநாயகராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதான மக்கள் சக்தி (SJB) வேட்பாளரான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் 65 வாக்குகளை மட்டுமே பெற்றார். மூன்றுவாக்குகள் நிராகரிக்கப்பட்டன. எட்டு உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

அரசாங்கத்திற்கு எதிராக முன்மொழியப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை அரசாங்கம் இலகுவாகத் தோற்கடிக்கும் என்பதை பிரதி சபாநாயகர் தெரிவு வெளிப்படுத்துகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரே ஒரு உறுப்பினரான ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் வேட்பாளரை ஆதரித்தார். அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்தது மட்டுமல்லாது பிரசாரம் செய்ததாகவும் தெரியவருகிறது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் கொடுத்த தண்டனையை அவர் மறந்துவிட்டார்.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இரவு, பகல், மழை, வெயில் என எதையும் பொருட்படுத்தாமல் இளைஞர்களும் யுவதிகளும் போராட்டக்களத்தில் முன் நிற்கிறார்கள். சிறுவர்களும் முதியவர்களும் அவர்களுக்கு ஆதரவுக்கரம் கொடுக்கிறார்கள்.

மக்களின் தொடர் போராட்டம், அரசியல் நெருக்கடி, பொருளாதார பின்னடைவு ஆகியவற்றின் காரணமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமாச் செய்யப்போவதாகச் செய்திகள் வெளியாகின. ஆனால், இராஜினாமாச் செய்வதில்லை என்பதில் மஹிந்த உறுதியாக இருந்தார். பிரதி சபாநாயகர் தேர்வு அவருக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் 225 உறுப்பினர்களின் கையில் உள்ளது. அரசாங்கத்துக்கு எதிராக எத்தனை உறுப்பினர்களின் கை உயரப்போகிறதென்பதை முன்னோட்டமாக மக்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டுள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சியான மக்கள் சக்தி, அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சமர்ப்பித்துள்ள போதிலும், அதற்கு ஆதரவாக எந்தளவு ஆதரவைத் திரட்ட முடியும் என்பது தற்போது தெளிவாகத் தெரியவில்லை.

மக்களுடன் இணைந்து போராடுவதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் பலர் தயாராக இல்லை.

இன்றைய அரசியல் கள நிலவரத்தின் அறுவடை அடுத்த தேர்தல் காலத்தில் தெரியவரும்.

■

---

# அரசியல்வாதிகளுக்கு எதிரான மக்களின் அறப்போராட்டம்

வர்மா

மிரிஹானாவில் ஆரம்பமான போராட்டம் கோல்பேஸில் நிலைகொண்டு நாடெங்கும் பரவி விட்டது. ஒரு மாதத்தை நெருங்கும் இந்தப் போராட்டம் தினமும் புது வடிவம் பெறுகிறது. அரசியல் கட்சிகள் நடத்திய போராட்டங்களில் மக்கள் கலந்துகொள்வதே இது வரை காலமும் நடைபெற்று வந்தது. அரசியல்வாதிகளை ஓரமாக ஒதுக்கி வைத்து விட்டு மக்கள் நடத்தும் போராட்டம் நாடெங்கும் வியாபித்துள்ளது.

அரசியல்வாதிகளுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டம் நடத்திய மக்கள் இப்போது அரசியல்வாதிகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகிறார்கள். போராட்டங்களை அடக்குவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்கம் முயற்சி செய்தது. அவை எல்லாவற்றையும் முறியடித்து போராட்டம் கனகச்சிதமாக நடைபெறுகிறது.

ஜனாதிபதி கோட்டபாய, பிரதமர் மஹிந்த ஆகியோரின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளதாக சுகாதார கொள்கை நிறுவகத்தின் (IHP) ஆய்வு தெரிவிக்கிறது. கொள்கைப் பகுப்பாய்வு மையத்தின் (CPA) மற்றொரு தேசிய கணக்கெடுப்பு, பதிலளித்தவர்களில் 87%க்கும் அதிகமானோர் ராஜபக்ஷ குடும்பமும் இலங்கை அரசியலில் இருந்து வெளியேற வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

இரண்டு கருத்துக் கணிப்புகளும் ராஜபக்ஷ எதிர்ப்புக் களமிறங்குவதற்குப் பொருளாதாரமே முக்கிய காரணம் என தெரிவிக்கின்றன. CPA கணக்கெடுப்பில், பதிலளித்தவர்களில் 90% பேர் தற்போதைய நெருக்கடியால் தங்களின் வருமானம் அல்லது உடனடி குடும்ப உறுப்பினரின் வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். 9% மட்டுமே தற்போதைய பொருளாதார மோதலிலிருந்து விடுபடுகின்றனர். 88% பேர் தாங்கள் அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினர் கடந்த மாதத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசையில் நிற்க வேண்டியிருந்தது என்று கூறுகிறார்கள். 4.4% மட்டுமே கொவிட் மற்றும் 2% தங்கள் பொருளாதார அவலத்திற்கு சர்வதேச பொருளாதாரத்தைக் குற்றம் சாட்டுகின்றனர். 62 வீதமானோர் கோட்டபாய அரசாங்கத்தின் பொருளாதார முறையற்ற நிர்வாகமே நாட்டிற்கும் அவர்களின் துன்பங்களுக்கும் காரணம் என்று குற்றம் சாட்டியுள்ளனர்.




இலங்கையை மீட்க வந்த குடும்பம் என ஒரு காலத்தில் கொண்டாடப்பட்ட குடும்பத்தை இன்று அரசியலில் இருந்து விரட்டுவதற்காக ஒன்றுகூடியுள்ளனர். மஹிந்த குடும்பத்தை தலையில் வைத்து கொண்டாடியவர்கள்தான் இன்று அவர்களை வெளியேற்றுவதற்கு வழி தேடுகின்றனர். தொடர் போராட்டங்களால் சலிப்படைந்து மக்கள் வெறுப்படைவார்கள் என அரசாங்கம் நினைக்கிறது.

மக்கள் போராட்டங்கள் ஒரு புறம் நடக்கையில் சுமார் 2000 தொழிற்சங்கங்கள் போராட்டக்களத்தில் கால் பதித்துள்ளனர். போராட்டம், ஹர்த்தால் என்ற முணுமுணுப்புகள் எழுவது வழமை. இன்றைய போராட்டங்களுக்கும் ஹர்த்தாலுக்கும் மக்கள் எந்தவிதமான எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பு மெல்ல மெல்ல கரைந்து கொண்டிருக்கிறது. எரிபொருளுக்காக மக்களும் வாகனங்களும் போட்டி போட்டு வரிசை கட்டுகின்றன. சுமார் 10 மணித்தியால காத்திருப்பு அரசாங்கத்தின் மீதான கோபத்தை அதிகரிக்கிறது.

அன்று தமிழ் மக்கள் பட்ட பாரிய துன்பங்களை அவர்கள் புறக்கணித்ததைப் போன்று, தற்போது தமது சொந்த சிங்கள பௌத்த ஆதரவாளர்கள் உட்பட அனைத்து இலங்கையர்களின் பெருகிவரும் அவல நிலையை மழுங்கடிக்கின்றனர். ஒரு காலத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு என்ன விலை கொடுத்தாலும் ஈழப்போரில் வெற்றி பெறுவதே அவர்களின் ஒரே குறிக்கோளாக இருந்ததைப் போல, இப்போது அவர்களின் ஒரே கவலை, அவர்களின் அடிப்படை உட்பட அனைத்து இலங்கையர்களுக்கும் என்ன விலை கொடுத்தாலும் முடிந்தவரை அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம்.

உள்நாட்டுப் போரின் போது அழிக்கப்படாது கட்டி எழுப்பப்பட்ட இலங்கையின் பொருளாதாரம் இரண்டு வருடங்களில் அரசாங்கத்தால் அழிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு வரிக்குறைப்பு செய்யப்பட்டபோது பொருளாதார நிபுணர்கள் எச்சரித்தனர். புள்ளி விபரங்களை வெளியிட்ட அரசாங்கம் அதனை மறுத்தது. மக்கள் அதனைப் பெரிதாகக் கணக்கில் எடுக்கவில்லை.

இன்றைய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பினால் அடுத்த அரசாங்கத்தைப் பொறுப்பெடுப்பது யார் என்பதில் குழப்பநிலை காணப்படுகிறது. இப்போதைக்கு அரசியல் ரீதியாக மஹிந்தவின் கை ஓங்கியுள்ளது.

■

# தீம்புனல் முதலாவது ஆண்டு விழாவும் விருது வழங்கும் நிகழ்வும்

## தீம்புனல் - 2022

## மங்கள விளக்கேற்றல்



















## விருது வழங்கல்



















முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022


முதலாம் ஆண்டு விருது வழங்கும் விழா
தீம்புனல் - 2022

# மக்ரோனின் வெற்றி ஐரோப்பாவின் நெருக்கடியைச் சீர்செய்யுமா?

ஐ.வி.மகாசேனன்



ரஷ்ய-உக்ரைன் மோதலும் ஐரோப்பிய நாடுகளின் எதிர்வினைகளும் சர்வதேச அரசியலில் ஐரோப்பிய நாடுகள் மீது அதிக கவனத்தைத் திருப்பியுள்ளது. ரஷ்ய-உக்ரைன் போரை அமைதிக்கு நகர்த்தக் கூடிய ஆற்றலும் வாய்ப்பும் ஐரோப்பிய நாடுகளின் முடிவுகளிலும் செயற்பாடுகளிலுமேயே தங்கியுள்ளது. இதனால் ஐரோப்பிய நாடுகளின் அரசியல் நகர்வுகள் சர்வதேச அரசியல் ஆய்வாளர்களாலும் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றது. இந்நிலையிலேயே பிரான்ஸில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் இரண்டாம் முறையும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பிரான்ஸ் ஐரோப்பிய ஒன்றியத்திலும் தீர்மானமெடுக்கும் சக்தியாக காணப்படுவதனால் பிரான்ஸின் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் முழு உலகினதும் கவனத்தையும் பெற்றுள்ளதுடன், சர்வதேச அரசியலில் பிரதான ஆய்வுப் பொருளாகவும் உருவாகியுள்ளது. இக் கட்டுரையும் மக்ரோனின் இரண்டாம் கட்டத்தின் அரசியல் நகர்வுகளைத் தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் வாக்காளர்கள் ஏப்ரல்-24 அன்று ஜனாதிபதித் தேர்தலின் போது தங்கள் நாட்டிற்கான இரண்டு வித்தியாசமான தரிசனங்களுக்குள் தங்கள் தெரிவை வெளிப்படுத்தியுள்ளார்கள். ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் நடந்த வாக்கெடுப்பின் முதல் சுற்றில் முறையே முதல் மற்றும் இரண்டாவது இடத்தைப் பிடித்த, மக்ரோன் மற்றும் லு பென் ஆகியோர் ஏப்ரல்-24 அன்று நடைபெற்ற இரண்டாம் நிலைப் போட்டிக்கு முன்னேறினர். மையவாத ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தனது தீவிர வலதுசாரி எதிரியான மரின் லு பென்னின் சவாலைத் தடுக்கும் போட்டிக்களத்தை தேர்தலில் எதிர்கொண்டார். 53 வயதான லு பென், இரண்டாம் உலகப் போரின் முடிவில் இருந்து பிரான்ஸ் எடுத்துள்ள திசையில் இருந்து ஒரு அடிப்படை மாற்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பொருளாதார தேசியவாத, மிகவும் உள்நோக்கிய தளத்தை முன்வைத்துள்ளார். எனினும் மக்ரோன் ஐரோப்பிய ஒன்றிய கட்டமைப்பினூடாக பிரான்ஸை உயர்த்தும் உலகமயமாக்கப்பட்ட பிரான்ஸில் ஒரு தசைநார் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவராகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.




பிரான்ஸ் வாக்காளர்களின் எண்ணங்களை லு பென்னின் தேசியவாத கருத்துகளைத் தாண்டி மக்ரோனின் பிரான்ஸை நெறிப்படுத்தும் ஆளுமை கவரப்பட்டுள்ளது. ஆதலாலேயே இரு தசாப்தங்களுக்குப் பின்னர் பதவியில் இருக்கின்ற ஜனாதிபதி ஒருவர் இரண்டாவது தடவையாகவும் போட்டியிட்டு வெற்றி பெற்ற தலைமையாக மக்ரோன் உயர்ந்துள்ளார். இரண்டாவது சுற்றில் மக்ரோன் 57.6 சதவீத வாக்குகளால் வென்றிருக்கிறார். மரின் லூ பென்னுக்கு 42.4 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன.

பிரான்ஸின் எதிர்கால திசை ஆபத்தில் உள்ளதாகவே சர்வதேச அரசியல் அவதானிகளின் கருத்துக்கள் அமைகிறது. ஏப்ரல்-24 அன்று, இம்மானுவேல் மக்ரோன் பெரும்பான்மையுடன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் ஐரோப்பாவிற்கான தனது நன்கு அறியப்பட்ட அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு முன்னோக்கிச் செல்லும் பாதை அகலமாகத் திறக்கப்படலாம் என்ற எண்ணங்களுடன் அனைத்து ஐரோப்பிய தலைநகரங்களிலும் நிம்மதிப் பெருமூச்சு இருந்தது. ஆயினும் கூட, மக்ரோன் இரண்டாவது காலம், 2017 இல் அவர் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டதை விட மிகவும் சிக்கலான அரசியல் நிலப்பரப்பை எதிர்கொள்ளும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அதைச் சுற்றியுள்ள உலகின் புவிசார் அரசியல் யதார்த்தங்கள் ஒரு முழுமையான மாற்றத்திற்கு உட்பட்டுள்ளன. இந்த அடிப்படை மாற்றங்கள் பிரெஞ்சு ஜனாதிபதியின் அபிலாஷைகளைச் சிக்கலாக்கக்கூடும். மக்ரோன் 2.0 இல் உள்ள பிரான்ஸ் களநிலவரங்களை உன்னிப்பாக அவதானிப்பதும் அவசியமாகிறது.

ஒன்று, பிரான்ஸ் கொள்கையளவில் இருதுருவ தோற்றப்பாட்டை இம்முறை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளது. நடைபெற்று முடிந்த தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் மதிப்பாய்வில், அமெரிக்காவைப் போலவே பிரான்ஸூம் இரு வேறு துருவ அரசியல் பாதைகளில் பிளவுண்டு உள்ளது. மக்ரோன் தலைநகர் பாரிஸிலும் நாட்டின் மேற்கு, தென்மேற்கு, மத்திய பகுதிகளிலும் ஆதரவைப் பெற்றிருக்கிறார். மரின் லூ பென் நாட்டின் வடக்கே கைத்தொழில் மையப் பிராந்தியங்களிலும் தெற்கு மத்தியதரைக்கடல் பகுதிகளிலும் கடல் கடந்த நிர்வாகப் பிராந்தியங்களிலும் அமோக ஆதரவைப் பெற்றிருக்கிறார். பெருநகரங்களின் மையப்பகுதி வாக்காளர்கள் மற்றும் உயர்-நடுத்தர வர்க்கத்தினர், வயோதிபர்கள் மத்தியில் மக்ரோன் மிகுந்த செல்வாக்கைப் பெற, கிராமப்புற வாக்காளர்களும் குறைந்த வருமானம் பெறுகின்ற வர்க்கத்தினரும் மரின் லூ பென்னுக்கு வாக்குகளை வழங்கியுள்ளனர். “நாட்டின் மிகப் பெரிய பிளவை கிராமங்கள், நகரங்கள் என இரண்டு வகைக்குள் கற்பனை செய்வது தவறாகும். உண்மையில் பிளவு சமூகங்களுக்குள்ளும் தலைமுறைகளுக்கு இடையிலேயுமே ஏற்பட்டுள்ளது.” என்று பிரான்ஸின் IPOSOS தேர்தல் மதிப்பாய்வு மையத்தின் பணிப்பாளர், பிரான்ஸ்-24 செய்திச் சேவைக்குத் தெரிவித்திருக்கிறார்.




இரண்டு, மக்ரோன் 2017 தேர்தலில் பெற்ற 66.10 சதவீத வாக்குகளை விட 8.5 வீதம் குறைவான வாக்குகளையே வென்றிருக்கிறார். மக்ரோன் இளம் வாக்காளர்களது ஆதரவைப் பெற்றுக் கொள்ளவும் தவறியுள்ளார். IPSOS பகுப்பாய்வுத் தரவுகளின் படி, 18- 24 வயதுக்கு இடைப்பட்ட வாக்காளர்களில் 61 வீதமானோர் லூ பென்னுக்கே வாக்களித்துள்ளனர். அதே வயதுப் பிரிவினரில் 41 வீதம் பேர் எந்த வேட்பாளருக்கும் வாக்களிக்கவில்லை. மரின் லூ பென்னின் வாக்கு அதிகரிப்பு மக்ரோனின் வெற்றியை விடவும் லூபென்னின் தோல்வி மீதே கவனத்தைக் குவித்துள்ளது. பிரபல லூ மொன்ட் (LeMonde) பத்திரிகை மக்ரோனின் வெற்றியை “உகவை இல்லாத வெற்றி” என்றே குறிப்பிட்டுள்ளது. ஜூனில் நடைபெறவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் மக்ரோனுக்கு அதிபர் தேர்தலின் மூன்றாவது சுற்றுப் போன்றது என்று எதிரணியினர் விமர்சிக்கின்றனர். மரின் லூ பென்னைத் தோற்கடிப்பதற்காக மக்ரோனுக்குச் செலுத்தப்பட்ட வாக்குகள் தவிர்க்கமுடியாத தெரிவிற்கு உட்பட்டவை. ஆனால், நாடாளுமன்றத் தேர்தலில் அவ்வாறான நிலைமை இருக்கப்போவதில்லை. மக்ரோனின் கட்சி பெரும்பான்மை இழக்கவும், தீவிர வலதுசாரிகளும் இடது சாரிகளும் சபையின் பெரும்பான்மையாக நிறைப்பதற்கும் இம்முறை வாய்ப்பிருக்கிறது என்ற உரையாடல் தேர்தல் முடிவுகளின் பின்னர் சிலாகிக்கப்படுகிறது.

மூன்று, உக்ரைனில் ரஷ்யாவின் படையெடுப்பின் விளைவாக ஏற்பட்டுள்ள நெருக்கடியை நிர்வகிப்பதில் மக்ரோனுக்கு சிறப்பு கவனம் தேவைப்படும். ஏனெனில் மோதலின் முதல் மாதங்களில் ஐரோப்பிய நாடுகளால் நிரூபிக்கப்பட்ட நோக்கத்தின் ஒற்றுமை மற்றும் செயற்பாட்டின் வேகம் ரஷ்யாவிற்கு எதிரான எரிசக்தி தடைகள் பிரச்சினையில் விரிசல் ஏற்பட தொடங்கியுள்ளது. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளான ஜேர்மனி, ஹங்கேரி, ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகள் புடினின் எச்சரிக்கைக்கு பணிந்து ரஷ்ய நாணயமான ருபீளில் எரிவாயுவைக் கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளதாக செய்திகள் உலாவுகிறது. அதுமட்டுமன்றி ரஷ்ய-உக்ரைன் மோதல் ஆரம்பிக்கப்பட்டதற்கு பிற்பட்ட மூன்று மாத காலப்பகுதிக்குள் ரஷ்யாவிலிருந்து அதிக எரிபொருட்களைக் கொள்வனவு செய்த நாடாக ஜேர்மனியே காணப்படுகின்றது. இவ்முரண்பாட்டு நிலைகள் மக்ரோனின் ஐரோப்பிய எழுச்சி என்ற எண்ணங்களுக்குப் பெரும் சவாலான விடயமாகக் காணப்படுகிறது. ரஷ்யா-உக்ரைன் மோதல் வியத்தகு முறையில் ஐரோப்பிய சிந்தனையையும் செயல் முறையையும் மாற்றுகிறது

எனவே, மக்ரோனின் இரண்டாம் பயணம் மிகவும் நெருக்கடிக்குள்ளேயே ஆரம்பமாகிறது. தேர்தல் வெற்றிக்குப் பின்னரான ஈபிள் கோபுர உரையில், “நாம் ஒன்றாக இணைந்து பிரான்ஸை மேலும் சுதந்திரமானதாகவும் ஐரோப்பாவை மிகவும் வலிமையானதாகவும் மாற்ற முடியும்” என மக்ரோன் தெரிவித்திருந்தார். எனினும் மக்ரோனின் எண்ணங்கள் ஈடேறுவதில் அதிக சிக்கல்கள் காணப்படுகிறது. மக்ரோன் வலியுறுத்தும் ஒற்றுமை என்பது பிரான்ஸிலும், ஐரோப்பிய நாடுகளிடையேயும் அதிக அச்சுறுத்தலுக்குள்ளாகியே காணப்படுகிறது. இவ்வாறான சூழலில் பிரான்ஸின் சுதந்திரத்தையும், ஐரோப்பாவின் வலிமையையும் பேணுவது மக்ரோனின் இரண்டாவது ஆட்சிப் பருவத்தில் சவாலானது என்பதுவே அரசியல் ஆய்வாளர்களின் எண்ணங்களாக உள்ளது. ■



# அரசியலில் நண்பர்களும் எதிரிகளும்!

# திரிசங்கு சொர்க்கத்தில் உழலும் பிரதமர்!

அவதானி



அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை. நிரந்தர எதிரிகளும் இல்லை என்று சொல்லப்படுவதுண்டு!

அத்துடன், எதிரிக்கு எதிரி நண்பன் என்பதும் சமூக வழக்காகிவிட்டது. சமகாலத்தில் இலங்கை அரசியலில் தோன்றியிருக்கும் நெருக்கடி பாராளுமன்றத்திலிருக்கும் 225 பேருக்கும், இவர்களையெல்லாம் தனது நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் கட்டுப்படுத்திவைத்திருக்கும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கும் பெரிய தலையிடியைத் தந்திருக்கிறது.

இந்தப்பதிவை எழுதும்போது, கொழும்பு காலி முகத்திடலில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்ட போராட்டம் 25 நாட்களையும் கடந்துகொண்டிருக்கிறது.

இதே வேளை, வடக்கிலும் கிழக்கிலும் போர்க்காலத்தில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ச்சியாக நடத்தி வரும் அறப்போராட்டம் ஆயிரத்து ஐந்நூறு நாட்களைக் கடந்துவிட்டது. அவர்களில் பத்துக்கும் மேற்பட்டவர்கள், ஏங்கி ஏங்கியே தங்கள் இன்னுயிரையும் விட்டுவிட்டனர்.

இலங்கையில் தோன்றியிருக்கும் பிரச்சினை, பாராளுமன்றில் ஆசனங்களைச் சூடாக்கிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகளுக்கு நெருக்கடியை மட்டுமன்றி, அவர்களின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கியிருக்கிறது. அவர்களில் சிலர் வாரிசு அரசியல் கனவிலும் மிதந்தவர்கள். தமக்குப்பின்னர் தமது மனைவி, மகன், மகள் மற்றும் இரத்த உறவுகளைப் பாராளுமன்ற அரசியலில் இணைத்துக் கொள்ளும் உள்ளார்ந்த எண்ணங்களில் வாழ்பவர்கள்.



மகேந்திர பேர்ஸி ராஜபக்ஷ என்ற இயற்பெயரைக் கொண்டிருக்கும் தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவராக அரசியலில் பிரவேசித்து, 1970 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் தென்னிலங்கையில் பெலியத்தை தொகுதியிலிருந்து தேர்வாகி பாராளுமன்றம் சென்றவர்.

1945 ஆம் ஆண்டு பிறந்தவர். இவருடைய குடும்பமும் அரசியல் பின்னணி கொண்டிருந்தது அரை நூற்றாண்டு கால (சுமார் 52 வருடங்கள்) பாராளுமன்ற அரசியல் அனுபவம் பெற்றிருந்த மகிந்தர், இக்காலப்பகுதியில் எம்.பி. ஆக, அமைச்சராக, பிரதமராக, இரண்டு தடவை ஜனாதிபதியாக, எதிர்க்கட்சித் தலைவராக, மீண்டும் பிரதமராக வந்திருப்பவர்.

குறிப்பிட்ட 52 வருட காலத்தில் அவர் படிப்படியாகத் தனது சகோதரர்கள் மற்றும் செல்வப்புதல்வன் நாமல் ராஜபக்ஷவையும் அரசியலுக்குள் அழைத்து வந்துவிட்டார். தம்பி கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியும் தனது கனவுகளை நனவாக்கிக் கொண்டவர்.

ஆனால், இலங்கை மக்களின் எதிர்காலக் கனவுகளை நனவாக்குவதற்கு அவர் தவறிவிட்டார். அதன் விளைவுதான் இன்று அவரும் அவரது குடும்பத்தினரும் பொது மக்களிடம் செல்வதற்கும் முடியாத பரிதாபகரமான நிலை!

ஈழப்போராட்டத்தை நடத்தி, நெருக்கடியை ஏற்படுத்திய தீவிரவாதிகளை அடக்கிய அனுபவம் தமக்கு இருப்பதனால், தற்போது தோன்றியிருக்கும் பொருளாதார நெருக்கடியையும் தன்னால் சமாளித்து கடந்து செல்ல முடியும் என்று இறுமாப்புடன் சொல்கிறார்.

ஈழப்போராட்டம் ஏன் நடந்தது? தற்போது மக்கள் தொடங்கியிருக்கும் தன்னெழுச்சிப்போராட்டம் ஏன் நடக்கிறது? என்பதை படிப்பறிவற்ற பாமரர்களும் தெளிவாகச் சொல்வார்கள். அதற்கு அரசியல் ஞானமோ, பொருளாதாரம் குறித்து துறைசார் அறிவோ அவசியம் இல்லை.

“Gotha Go Home” என்ற கோஷத்துடன் தொடங்கிய தன்னெழுச்சிப்போராட்டம், “முழு ராஜபக்ஷ குடும்பமுமே வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்று மாறியது. அத்துடன் இதுவரையில் கொள்ளையடித்து சூறையாடிய பணத்தையும் மீள ஒப்படைத்துவிட்டுச் செல்லவேண்டும் என்றும் பரிமாணம் பெற்றதுடன், பாராளுமன்றிலிருக்கும் 225 பேருமே போய்விட வேண்டும்” என்று மற்றும் ஒரு புதிய வடிவத்தையும் எடுத்துள்ளது.

அரசை அமைத்த மொட்டு கட்சிக்குள்ளும் முரண்பாடுகள் வெடித்திருக்கிறது. அதற்கு துணை நின்ற இதர உதிரிக்கட்சிகளுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மத்தியிலும் வாதப்பிரதிவாதங்கள் தொடருகின்றன. அமெரிக்கா சென்ற பசில் ராஜபக்ஷவை இறக்குமதி செய்தமைதான் இத்தனை நெருக்கடிக்கும் காரணம் என்று அவரை காகத்திற்கு ஒப்பிட்டுப் பேசுபவர்களும் இவர்களிடையே காணப்படுகின்றனர். இதுவரையில் அமைச்சரவையில் எத்தனையோ மாற்றங்கள் நடந்துவிட்டன. அதேசமயம் மக்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகளிலும் மாற்றங்கள் வந்து விட்டன. அதுதான் விலைவாசி உயர்வு. அரசுக்கு எதிரான போராட்டங்கள் தொடங்கிய கடந்த மாதங்களுக்கு முன்பிருந்த விலைவாசிகள் தற்போது இல்லை. அவையும் முன்னெடுப்போதுமில்லாத வகையில் உயர்ந்துள்ளன.



நெருக்கடிகளுக்குத் தீர்வாக அமைச்சரவையை முதலில் மாற்றிய ஜனாதிபதி கோட்டபாய, பின்னர் தேசிய அரசாங்கம் அமைக்கும் யோசனையை முன்வைத்தார். அதன்பின்னர் அரசின் மீது அதிருப்தி தெரிவிக்கும் எதிரணியினர் 113 பேர் முடிந்தால் ஒன்றிணைந்து வந்தால் இடைக்கால அரசுக்கு வழிசமைக்கின்றேன் என்றார்.

இதுஇவ்விதமிருக்க, இலங்கை அரசியலில் தங்களது செல்வாக்கினையும் இருப்பினையும் எப்பொழுதும் தக்க வைத்துக் கொள்ள விரும்பும் பௌத்த பிக்குகளான மகாநாயக்க தேரர்கள், தேசிய இணக்கப்பாட்டு அரசை உருவாக்குங்கள் என்று வலியுறுத்தினர்.

ஆனால், அதற்கு சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியும் அனுரகுமாரவின் மக்கள் விடுதலை முன்னணியும் சம்மதிக்கவில்லை.

ஜனாதிபதி உட்பட அனைத்து ராஜபக்ஷாக்களும் வெளியேற வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்துக் கொண்டிருக்கும் இக்கட்சிகள், மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ஏறிப் பயணிக்க விரும்பவில்லை. மாற்று அரசாங்கம் அமைக்கப்படும், அவ்வாறு அமையும் பட்சத்தில் பிரதமர் பதவிக்கு வேறு ஒருவரும், எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு மற்றும் ஒருவரும் வரக்கூடும் என்றும் அரசியல் அவதானிகள் ஆருடம் கூறிவருகின்றனர்.

அரசுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானம், ஜனாதிபதியிடமிருக்கும் கூடுதல் அதிகாரங்களைக் குறைத்தல், முதலான விவாதங்கள் பாராளுமன்றில் வந்தால், இந்த அரசியலில் யார் எதிரி..? யார் நண்பன்...? யார் மதில்மேல் பூனை...? என்பதும் தெரிந்துவிடும் !

இச்சந்தர்ப்பத்தில் எமது தமிழ் சமூகம் அடிக்கடி சொல்லும் திரிசங்கு சுவர்க்க நிலையின் மூலக் கதையைச் சொல்லலாம். திரிசங்கு என்பவன் தனது பூதவுடலுடன் சொர்க்கம் செல்ல விரும்புகின்றான். திரிசங்குவின் இயற்பெயர் சத்தியவிரதன் . அவன் தர்ம நெறியோடு வாழாமல், அநியாயச் செயல்களால் அயோத்தியை ஆண்ட தந்தையான திரியருணியால் நாடு கடத்தப்பட்டான். அவனின் நாடு கடத்தலுக்குக் காரணமான முனிவர், கோபமுனி என்று அழைக்கப்படும் வசிஸ்டர். சொர்க்கத்துக்குச் செல்வதற்காக அவன் மேற்கொண்ட முயற்சிக்கு எவரிடமிருந்தும் உதவி கிடைக்கவில்லை. விகார ரூபத்தையும் சாபமாகப் பெற்றவன்தான் அவன்.

அவனை அந்த ரூபத்துடனேயே சொர்க்கத்துக்கு அனுப்புவதற்காக, மற்றும் ஒரு முனிவர் விசுவாமித்திரர் யாகம் நடத்துகிறார். இவ்வேளையில் குறுக்கிடும் இந்திரன் திரிசங்குவை கீழே தள்ளுகிறார். அதனால் கோபம் கொண்ட விசுவாமித்திரர் அவனை ஆகாயத்திலேயே அந்தரத்தில் நிறுத்தி அவனைச் சுற்றி இன்னொரு சொர்க்கம் படைக்க ஆரம்பிக்கிறார். அதனைக்கண்டு பயந்து விட்ட இந்திரனின் சபையிலிருக்கும் தேவர்கள், அவரிடம் வந்து மன்னிப்புக் கேட்டு, அவனை அப்படியே விட்டுவிடுமாறு கெஞ்சுகிறார்கள். அவ்வாறு அமைந்ததுதான் அந்த சொர்க்கம். அதுதான் திரிசங்கு சொர்க்கம். அதாவது பூமியும் இல்லை, சொர்க்கமும் இல்லை.

இந்தக்கதையைப் படிக்கும் வாசகர்கள், இலங்கை அரசியலில் யார் திரிசங்கு..? யார் விசுவாமித்திரர்..? - யார் வசிஸ்டர் ...? யார் இந்திரன்...? யார் தேவர்கள்...? என்பதை புரிந்துகொள்வார்கள் !

■

# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 20

## முன்பள்ளிக் கல்வியும் ஆரம்பக் கல்வியும்!

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 12

**பகுதி - 01**

சரிந்து கொண்டிருக்கும் கட்டுரைத்தொடர் பல்வேறு தளங்களில் எங்கள் கல்வித்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பேசிவந்துள்ளதுடன், நிமிர்வுக்கான வழிமுறைகளையும் ஒவ்வொரு பதிவிலும் அலசி வந்துள்ளது. அந்தவகையில் அத்தியாயம் 12, எங்கள் மாணவர்கள் முன்பள்ளிக் கல்வியிலும் ஆரம்பக் கல்வியிலும் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சற்று ஆழமாகவும் யதார்த்தபூர்வமாகவும் ஆராய இருக்கின்றது. அத்துடன் அதற்கான தீர்வுகள் பற்றியும் நீண்டகால அடிப்படையில் எடுக்கப்படவேண்டிய முயற்சிகள் பற்றியும் அலச இருக்கிறது.

இலங்கையில் ஒக்ரோபர் முதல் வாரத்தில் சிறுவர் தினம் கொண்டாடப்படுவது வழமை! அந்த வகையில் பல நிகழ்வுகள் கடந்த வாரமும் நடந்தேறின. சில சிறுவர்கள் சந்தோசமாகக் கொண்டாடி மகிழ்ந்தனர். ஆனால், வடக்குக் கிழக்கு மற்றும் மலையகச் சிறார்களை உள்ளடக்கி ஒட்டு மொத்த அளவில் பார்க்கும் போது, எவ்வாறான சிறப்புகளை இன்றைய களநிலைகளில் எல்லா சிறார்களுக்கும் கொடுத்திருக்கிறோம் என ஆராய முற்பட்டால் மனது ரணமாகிவிடும். பல சிறுவர்களுக்கான வாய்ப்புகள் முடங்கியிருக்கின்றன அல்லது முடக்கப்பட்டு இருக்கின்றன என்பது கசப்பான உண்மை.

வடக்குக் கிழக்கின் பல பிரதேச சிறார்களின் முன்பள்ளி / ஆரம்பக் கல்வி வளமான நிலையில் வழங்கப்படவில்லை. மலையகத்தில் இன்றும் பல சிறார்கள் லயங்களில் / பிள்ளை மடுவங்களில் முடக்கப்பட்டே உள்ளனர்.

முதலில் சில புள்ளி விபரங்களைப் பேசிவிடலாம். முன்பள்ளிக் கல்வி என்று வரும் போது 3 வயதில் இருந்து 5 வயது வரை உள்ள சிறுவர்களை உள்வாங்கிவிடலாம். இந்தப் பிரிவில் கிட்டத்தட்ட 75000- 80000 சிறுவர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மட்டும் உள்ளனர். கடந்த காலங்களில் இந்த எண்ணிக்கை 90000 ஐ விட அதிகமாக இருந்தாலும் போரின் பின்னரான தாக்கங்கள், 3 அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளும் விகிதம் குறைந்து செல்கின்றமை, நிகழ்கால வேலைசார்ந்த பிறமாவட்டங்கள்/நாடுகள் சார்ந்த இடப்பெயர்வுகளால் பல தமிழ் பேசும் சிறார்கள் எண்ணிக்கை குறைந்து செல்கிறது.




இயங்கு நிலையில் உள்ள முன்பள்ளிகள் என்ற வகையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மட்டும் கிட்டத்தட்ட 6000 இற்கு மேற்பட்ட முன்பள்ளிகள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. பல முன்பள்ளிகள் பதிவு செய்யப்படாமலே இயங்குவதால், சரியான எண்ணிக்கையைப் பெற முடியவில்லை.

2018/2019 கல்வி அமைச்சு சுற்றுநிருபப்படி, முன்பள்ளி ஆசிரியர்களின் தகுதி குறைந்தபட்சம் க.பொ.த உயர்தரம் முடித்திருக்கவேண்டும் மற்றும் முன்பள்ளி கற்பித்தலுக்கான டிப்ளோமா முடித்திருக்க வேண்டும் என்றும் உள்ளது. ஆனால், எங்களின் முன்பள்ளி ஆசிரியர்கள் பலர் அந்தத் தரத்தில் அடங்கவில்லை. போதிய ஆசிரியர்களும் இல்லை.

முன்பள்ளி ஆசிரியர் நியமனத்திற்கு வழங்கப்படும் வெறும் 4000 ரூபாய் படியில் வேலைசெய்ய பலர் தயாரில்லை. அதில் நியாயமும் உண்டு.

2019 ஆரம்பத்தில் இடம்பெற்ற ஆய்வு ஒன்றின் படி, முன்பள்ளிக் கல்வித் தரத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களே இலங்கையின் இறுதி நிலையில் உள்ளதாக விரிவுரையாளர் ஒருவரின் கட்டுரை மூலம் அறிந்து கொண்டபோது எங்கள் சரித்திரத்தின் சரிவுகளின் அத்திவாரங்களை இடுவதில் விடப்படும் பிழைகளும் பங்குகொண்டிருப்பதை உணரமுடிந்தது.




மறுபுறம் ஆரம்பப் பிரிவு மாணவர்களை எடுத்துக்கொண்டால், வடக்குக் கிழக்கு மாகாணங்களை மட்டும் எடுத்துக் கொண்டாலே கிட்டத்தட்ட 200000 மாணவர்கள் உள்ளனர்.

ஆக, கிட்டத்தட்ட 275000 மாணவர்களுடைய கல்வி நிலைக்கான அத்திவாரத்தை உறுதியாகப் போடவேண்டிய மிகப்பெரிய பணி இந்த முன்பள்ளி / ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களின் செயற்பாடுகளில் உள்ளது.

ஏன் இந்த முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வி அதிமுக்கியம்? என நீங்கள் கேட்கலாம். விஞ்ஞான பூர்வமாக ஒரு மனிதனுடைய மூளை 3 வயதிற்குள் 80% பூரணப்படுத்தப்படுகிறது. 7 வயதிற்குள் 90% மூளை பூரணமடைகிறது. ஆரம்பப் பிரிவுக்குள்ளேயே 80% சிறார்களின் மூளை ஓரளவு பூரணமாகிவிடுகிறது.

ஆக, இறுதி 10% இற்குள்தான் காலப்போக்கில் இடைநிலை தொடக்கம், வாழ்நாள் உயர்கல்வி தாண்டி, இறுதி செய்யப்படுகிறது.

அதனால் இந்த முன்பள்ளி/ ஆரம்பக் கல்வி சார்ந்த மாணவர்களின் கல்வி மேம்பாடு மிக முக்கியமானது.

உதாரணபூர்வமாக இன்னொரு விடயத்தையும் விளக்குகிறேன். இன்றும் பல மாணவர்கள், இடைநிலைப்பிரிவில் மொழி பேசக்கூடியவர்களாக இருந்துகொண்டும் போதிய மொழியாழுமை (எழுதல், வாசித்தல்) இல்லாமல் இருப்பது தொடர்பாக உங்கள் ஆசிரிய நண்பர்கள் மூலம் அறிந்திருப்பீர்கள். இந்த மொழி சார்ந்த அடிப்படை விடயங்கள் இந்த முன்பள்ளி / ஆரம்பப் பிரிவுகளில் மூளையுள் போடப்படுவது இலகு! ஆனால், அந்த 10 வயதைக் கடந்து விட்டால், பல்வேறு புதிய விடயங்கள் மாணவர்களைச் சூழ்ந்திருக்கும் நிலையில் இந்த அடிப்படை விடயங்களைத் திணிப்பது கடினம்!

வளர்ச்சியடைந்த நாடுகளில் 6 மாதக் குழந்தை முதலே, குழந்தைகள் காப்பகங்கள் போன்ற இடங்களில் வளர்கின்றன. அவ்வாறான சூழலில் கற்றல் செயற்பாடுகள் மிகச்சிறுவயதிலேயே ஆரம்பிக்கிறது. ஆனால், அவர்களுக்கு வேறு ஒரு பிரச்சினை தலைதூக்கிவிடுகிறது.

பெற்றோருடன் பிள்ளைகள் இருக்கும் நேரம் குறைவதால், எங்கள் பண்பாட்டின் பல அடையாளங்கள் அங்கு ஊடுகடத்தப்பட முடியாமல் போய்விடுகிறது. குடும்ப, சமூக அம்சங்கள் (traditional social values) பாசப் பிணைப்புகள் குறைந்து விடுகிறது / அற்றுப்போகிறது. இது பிள்ளைகளைத் தன்னியக்கமாக (Independent) வளர்க்க உதவினாலும் தமிழர்களுக்கு உரித்தான கலாசார, பண்பாட்டு விழுமியங்களை ஊடுகடத்துவதில் எம்மவர்கள் பலர் தோற்று விடுகிறார்கள்.

ஆக, இந்த முன்பள்ளி வயதில் இரண்டு விடயங்கள் ஊடுகடத்தப்பட வேண்டியது அவசியம்.

**1.அடிப்படைக்கல்விசார் விடயங்கள்.**

**2. சமூக கலாசார பண்பாட்டு விழுமியங்கள்.**

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இன்றும் பல பெற்றோர் மிகக்கவனமாக இந்த இரண்டு விடயங்களையும் பொருத்தமான வயதில் ஊடுகடத்துவதில் வெற்றி பெற்றும் வருகிறார்கள்.

முன்னோர்கள் சொன்ன பழமொழி "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது".

இதுவே நான் இன்று பேசிக்கொண்டிருக்கும் யதார்த்தம். அண்மையில் சிங்கப்பூரில் இடம் பெற்ற ஆய்வு ஒன்றில், இந்திய சமூகத்தில் முன்பள்ளியில் கல்வி கற்காமல் ஆரம்பப் பிரிவுக்கு உள்வாங்கப்பட்டவர்களையும் முன்பள்ளியில் கல்வி கற்று ஆரம்பப் பிரிவுக்கு உள்வாங்கப்பட்டவர்களினதும் வினைத்திறனை ஆராய்ந்த போது, முன்பள்ளிகளில் கற்று ஆரம்பப் பிரிவினுள் உள்வாங்கப்பட்டவர்கள் அதிகம் வினைத்திறனுடன் வேகக் கற்றலில் ஈடுபட முடிந்தமை அறியப்பட்டது. அதனைத்தொடர்ந்து SINDA எனப்படும் சிங்கப்பூர் இந்திய சமூக அமைப்பு இந்திய சிறார்கள் அனைவரும் பகுதிநேர முன்பள்ளிகளில் உள்வாங்கப்படுவதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பித்து இருந்தது.

இலங்கையில் அவ்வாறான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான விபரங்கள் கிடைக்கவில்லை.

இலங்கைச் சமூகத்தில் உள்ள சிறார்களில் இந்த சவால் இன்னொரு பரிணாமத்தில் உள்ளது.

அதாவது, சர்வதேச தரத்திலான சில முன்பள்ளிகள், வியாபார நோக்குடன் இயங்கும் முன்பள்ளிகள், சமூக முன்பள்ளிகள், கிராமிய/ தனிப்பட்டவர்களின் வட்டார முன்பள்ளிகள் எனப் பல்வேறு வகைகள் எங்கள் சமூகத்தில் உண்டு. இவற்றில் வெவ்வேறு தரத்திலான ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள். முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சிகளை வழங்கி அவர்களை தற்கால மாணவர்களின் திறன்/ களநிலைகளுக்கு ஏற்ப கற்பித்தலை மேற்கொள்ளக் கூடிய ஆசிரியர்களை உருவாக்கும் பயிற்சிக்கூடங்கள் சில காலம் முன்னர் வரை இல்லை. முன்பள்ளிகளுக்குச் செல்லாத பல சிறார்களும் எங்கள் பின்தங்கிய பிரதேசங்களில் உண்டு.

ஆக எங்களது சிறார்களை பல்வேறுபட்ட தரத்தில் தயார்ப்படுத்துகிறோம் என்பது எங்கள் கல்வித் திட்டத்தில் உள்ள மிக முக்கிய குறைபாடு. தவிர, ஆரம்பப் பிரிவுக்கு உள்வாங்கப்படும் இந்த மாணவர்கள் அனைவருக்கும் ஒரே தரத்திலான கல்வியை வழங்குகிறோமா? என்றால் "இல்லை" என்பதுதான் கசப்பான பதில். இதை விளக்க வடக்கு மாகாணக் கல்வி அமைப்பில் உள்ள ஆரம்பப் பிரிவு ஆசிரிய குழாத்தைச் சற்று ஆராய்ந்த போது தெரிய வந்த விடயங்கள் அதிர்ச்சியூட்டின.



இப்போது வடமாகாணத்தில் ஆரம்பப் பிரிவில் கிட்டத்தட்ட 4800+ ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

அவர்களில் கிட்டத்தட்ட 2500 பேர், தொண்டர் ஆசிரியர் நியமனம் மூலம் உள்வாங்கப்பட்டிருப்பதாக உள்ளக ஆய்வு ஒன்றில் தெரிய வந்தது. தொண்டர் ஆசிரியர்களைத் தரமற்ற ஆசிரியர்களாகக் காட்ட முயல்கிறேன் என்று யாராவது சண்டைக்கு வரக்கூடும். அது என் நோக்கம் அல்ல.

தொண்டர் ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டவர்களில் பல தரமான ஆசிரியர்கள் உள்ளனர்.

**அத்தியாயம் தொடரும்...**

சிலம்பு

# சித்ராவின் தற்கொலையில் முன்னாள் அமைச்சருக்கும் தொடர்பா?

சின்னத்திரை ரசிகர்களின் கனவுக்கன்னியான சித்ராவின் தற்கொலை அனைவருக்குமே மிகப்பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. தமிழ் சீரியலில் ஒளிபரப்பாகிய வேலுநாச்சி சீரியலில் சித்ரா தனக்கென்ற ஒரு அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டார். அதன்பிறகு பாண்டியன் ஸ்டோர்ஸ் மெகா தொடரில், முல்லையாக நடித்து ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தார். இயற்பெயரான சித்ரா என்பதையே மறந்து செல்லுமிடமெல்லாம் “முல்லை” என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டார்.

நடிகை சித்ரா தற்கொலை வழக்கில் அரசியல் பிரமுகர்களுக்கும் தொடர்பு இருப்பதாக அப்போதைய விசாரணையில் தெரியவந்தது. அவர் தற்கொலை செய்து கொண்ட நேரத்தில் அப்போதைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவருக்குத் தொடர்பு இருப்பதாகத் தகவல் வெளியான நிலையில், இந்த வழக்கை கிடப்பில் போடப்பட்டது. தற்போது சித்ராவின் கணவர் ஹேம்நாத், பொலிஸ் கமிஷனரிடம் கொடுத்த புகாரைத் தொடர்ந்து, இந்த வழக்கை மீண்டும் விசாரிக்க பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

சித்ரா தற்கொலை செய்வதற்கு முன்பு, பெரம்பலூரில் ஒரு கடை திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இதனைத்தொடர்ந்து, அப்போதைய கைது செய்யப்பட்டார். 2021 மார்ச் 2 ஆம் திகதி பிணையில் வெளியே வந்தார்.




சித்ரா நடிப்பதைக் கணவர் விரும்பவில்லை என்பதால் இருவருக்கும் இடையிலான பிரச்சினையில் சித்ரா தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகம் ஏற்பட்டது. கணவனின் கைது சந்தேகத்தை உறுதிப்படுத்தியது. கணவர் பிணையில் விடுவிக்கப்பட்டதால் சித்ராவின் தற்கொலை விவகாரம் தேக்கமடைந்தது.

இந்நிலையில், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் சித்ராவின் கணவர் ஹேம்நாத் ஒரு புகார் கொடுத்துள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

ரில் தெரிவித்துள்ளார். இதுகுறித்து உரிய விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

சித்ராவின் கணவர் ஹேம்நாத்தின் புகாரினால் அந்த முன்னாள் அமைச்சர் யார் என்ற கேள்வி எழுந்தது.

சின்னத்திரை நடிகை சித்ரா தற்கொலை வழக்கில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் எம்.எல்.ஏ ஒருவருக்குத் தொடர்பு இருப்பதாகத் தகவல் வெளியான நிலையில், மறு விசாரணை நடத்த எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும், மடியில் கனம் இல்லை, அதனால் வழியில் பயம் இல்லை. குற்றவாளிகளைக் காவல்துறையினர் கண்டுபிடிக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்தார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் கிடப்பில் போடப்பட்ட வழக்குகள் மீண்டும் உயிர் பெற்றுள்ளன. அந்த வரிசை



அ.தி.மு.க எம்.எல்.ஏ ஒருவர் தொடர்ந்து கொடுத்த தொந்தரவின் காரணமாகத் தற்கொலை என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்ததாக கூறப்படுகிறது.

தற்போது ஆட்சி மாறியதால், முன்னாள் எம்.எல்.ஏவை விசாரிக்க பொலிஸார் திட்டமிட்டுள்ளதாகவும் தற்போதைய அரசு இந்த வழக்கை விசாரிக்க முழு சுதந்திரம் கொடுத்ததும் இந்த வழக்கு மீண்டும் சூடு பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரபல சின்னத்திரை நடிகையான சித்ரா கடந்த 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி சென்னை பூந்தமல்லி அடுத்த நசரத் பேட்டையில் உள்ள ஹோட்டலில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து நசரத் பேட்டை பொலிஸார் வழக்கு பதிவுசெய்து விசாரணை நடத்தினர். மகள் மரணத்தில் மர்மம் இருப்பதாக சித்ராவின் தந்தை, காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். சித்ரா தற்கொலைக்கு அவரது கணவர் ஹேம்நாத்தான் காரணம் என்று கூறப்பட்ட நிலையில், அவர் 2020 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி



“நானும் என் மனைவி சித்ராவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தோம். சித்ரா இறந்த உடனே நானும் இறந்துவிடலாம் என்ற நோக்கில் இருந்தேன். ஆனால், நான் நிரபராதி என்பதை நிரூபிக்கவே உயிரோடு இருக்கிறேன். அரசியலில் முக்கிய அந்தஸ்தில் உள்ள சிலருக்கு சித்ராவின் மரணத்தில் தொடர்பு உள்ளது. சித்ராவின் தற்கொலைக்குப் பின்னால் பணபலம், அரசியல்பலம் கொண்ட மாஃபியா கும்பல் இருக்கிறது. அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தினால், என் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாக அந்த கும்பல் மிரட்டுகிறது. என் மீது சுமத்தப்பட்ட பழியை போக்கும் வரை நான் உயிரோடு வாழ விரும்புகிறேன். எனவே, எனக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்” அவர் புகா

யில் சித்ராவின் தற்கொலை வழக்கும் மீண்டும் உயிர் பெற்றுள்ளது. அரசியல்வாதி கொடுத்த நெருக்கடியே சித்ராவின் தற்கொலைக்குக் காரணம் என அவரது கணவர் உறுதியாக நம்புகிறார். அந்த உண்மை வெளிவந்தால் தனது உயிருக்கு ஆபத்து எனவும் பொலிஸில் புகார் செய்துள்ளார். ஒரு சின்னப் பிரச்சினைக்கும் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. சி.பி.ஐ விசாரணை வேண்டும் என குரல் கொடுக்கும் எதிர்க் கட்சிப் பிரமுகர்கள் கள்ள மௌனம் காட்டுகிறார்கள்.

2013ஆம் ஆண்டு மக்கள் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தொகுப்பாளராக அறிமுகமானவர் சித்ரா. ஜீ தமிழ், ஜெயா ரிவி, கலர்ஸ் தமிழ் உள்ளிட்ட பல்வேறு தொலைக்காட்சிகளில் பணியாற்றியுள்ளார். சரவணன் மீனாட்சி, சீசன் 2 சீரியலில் சிறிய கதாபாத்திரத்திலும் இவர் நடித்திருந்தார். சித்ரா விளம்பரங்களிலும் நடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது

பாண்டியன் ஸ்டோர்ஸ் முல்லை பாத்திரம் மூலம் ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தார் சித்ரா. சித்ரா என்ற பெயர் மறைந்து முல்லை எனும் பெயர் முன்னிலை வகித்தது. தொலைக்காட்சித் தொடரில் முல்லை அழுதால் ரசிகர்கள் அழுவார்கள். முல்லை சிரித்தால் ரசிகர்கள் சிரிப்பார்கள்.

அந்த முல்லையை பிடுங்கி எறிந்தவரை அடையாளம் காண ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.

புலோலியூர் வேல்நந்தன்

# புனைவுகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள சில புனைவுசாராப் பிரதிகள் – ஓர் பார்வை

## புதுப்புனல் – 29

தீம்புனலின் இவ்வாரப் புதுப்புனல் பகுதியில் புனைவுகளை மையமாகக் கொண்ட சில புனைவு சாராப் பிரதிகளை நோக்க இருக்கிறோம். பரந்து விரிந்த தளங்களில் நூற்பிரதிகள் குறித்து எழுதவேண்டுமென ஆசை இருந்தாலும் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாமை கருதி தொடர்ந்தும் சில குறுகிய வட்டங்களுக்குள்ளேயே நிற்க வேண்டியுள்ளது.

அந்த வகையில் இவ்வார தீம்புனலின் புதுப்புனலில் முதலில் நாம் பார்க்க இருப்பது செ.அன்புராசா அடிகளாரால் எழுதப்பட்ட அதிர்வுகள்-03 என்ற நூலாகும். முருங்கன் முத்தமிழ்க் கலாமன்ற வெளியீடாக 2020 மார்கழியில் இந்நூல் வெளிவந்துள்ளது. ஏற்கெனவே வெளிவந்த அதிர்வுகள் 01, 02 என்பதன் தொடர்ச்சியாக இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூலுக்கான சிறப்பானதொரு அணிந்துரையை 'ஞானம்' ஆசிரியர் ஞானசேகரன் வழங்கியுள்ளார். அன்புராசா அடிகளார் மதங்கடந்து எல்லோருடனும் அன்பாகப் பழகும் மனிதநேயம் மிக்கவர் அண்மையில் மறைந்த இவரது தந்தையார் செபமாலை மன்னாரில் புகழ்பூத்த ஒரு நாட்டுக் கூத்துக் கலைஞர். அன்புராசா அடிகளாரும் மன்னார் பிரதேச நாட்டுக் கூத்துக்களை ஆய்வு செய்து முது தத்துவமானிப்பட்டம் பெற்றுள்ளார். இந்நூலில் எல்லாமாக பதின்மூன்று கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அவ்வகையில் உயிரை மாய்க்க எவருக்கும் உரிமையில்லை, குப்பைகளை நீக்கவழி அவற்றை அகற்றுவதுதான், உணவுக்கு உப்புப் போல் உறவுக்கு நட்பு போன்ற கட்டுரைகள் தனிமனித ஆளுமை சார்ந்த கட்டுரையாக அமைந்துள்ளது.

சமூகம் சார்ந்தவைகளாக மரணமும் மறைபொருளே, நாய்களும் நாங்களும், கல்வி அடைவு மட்டத்தை அதிகரிக்க போன்ற கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அரசியல் சார்தவைகளாக புலிக்கதை தொடரப் போகிறது. உயிர்த்த ஞாயிறு மானிடம் மரித்த ஞாயிறு போன்ற கட்டுரைகளைக் குறிப்பிடலாம். இக்கட்டுரைகள் அனைத்தும் தான் வாழ்ந்த சூழலின் அதிர்வுகள் ஏற்படுத்திய உணர்வின் அறிவு மொழிகளாக அமைந்து சிறப்புப் பெறுகின்றன. ஒவ்வொரு கட்டுரைகளும் வெறும் கருத்துக் கோவையாக அமையாமல் புனைவு ஒன்றின் வழி சொல்லப்படும் உத்தியானது சிறப்புக்குரியதாய் வாசகரை ஈர்க்கக் கூடியதாய் அமைந்துள்ளது. பன்முகப் படைப்பாளுமை கொண்ட அன்புராசா அடிகளாரின் இலக்கியப் பணி தொடர தீம்புனலின் புதுப்புனல் வாழ்த்தி மகிழ்கிறது.

இப்பத்தியிலே அடுத்து நாம் நோக்க இருப்பது கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீட விரிவுரையாளராக, படைப்பாளராக தமிழியல் ஆய்வாளராக விளங்கும் அ.பௌநந்தியின் வலியும் வழியுமாக கவிஞர் சோ. பத்மநாதன் கவிதைகள் என்ற நூலாகும். அண்மையில் இடம் பெற்ற ஜீவநதிப் பதிப்பகத்தின் புத்தகக் கண்காட்சியில் இந்நூல் வெளியிடப்பட்டது. இந்நூலுக்கான அணிந்துரையை கவிஞர் இ.சு. முரளிதரன் வழங்கியுள்ளார். அவர் சோ.ப சேரின் கவிதைச் சிறப்புக்களை எடுத்துக் கூறியுள்ளதுடன் தனக்கும் அவருக்குமான உறவு பற்றியும் கூறி ஆய்வாளர் பௌநந்தியின் இந்நூல் ஆய்வுச் சிறப்புக்களையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

என்னுரையிலே நூலாசிரியர்தான் யாழ் பல்கலைக்கழக தமிழ் மன்றத் தலைவராக இருந்த காலத்தில் வெளியிடப்பட்ட சோ.ப வின் வடக்கிருத்தல் என்ற தொகுதி சார்ந்தும் சோ.ப வின் கவிதை சார்ந்தும் கவிதைகள் சார்ந்தும் தனக்குரிய ஈடு பாடுகளை எடுத்துக்கூறி முதற்கலைப்பட்ட ஆய்வாக இதனை மேற்கொண்ட தன்மையையும் ஜீவநதி பரணீயின் முயற்சியால் இது நூலுருப் பெறுவதையும் குறிப்பிட்டுள்ளார். இந்நூலானது பல அத்தியாயங்களாக நகர்ந்து செல்கிறது. முதலாவது அத்தியாயத்தில் சோ.ப வின் வாழ்க்கை வரலாறு, ஆளுமை பரிமாணம், கவிதைக்கு வருவதற்கான பின்னணிச் சூழல் என்பன விளக்கப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ் இந்துக்கல்லூரி அவருக்குப் பல வழிகளிலும் வழி காட்டியது. இவ்வகையில்

**அட கவிதை உனக்கு வரும் எழு(து)**
**எதுகை தளை சீர் மோனை**
**யாவும் இவை எனக் காட்டி கற்றோர் முன் என் கவியைத்**
**தான் பாராட்டும்**
**தேவன் உயர் பண்பாளன் கார்த்திகேயன் பாதம்**
**சென்னி வைப்பேன்**

என யாழ் இந்துவில் தமிழ் கற்பித்து தன்னை கவி உலகில் ஏற்றிவிட்ட ஏணியாம் வித்துவான் கார்த்திகேயனை நினைவில் கொள்கிறார்.

வடக்கிருத்தல் என்ற இக்கவிதைத் தொகுப்பின் உள்ளடக்கங்கள் வழி அதனைப் பகுத்துப் பல பொருத்தமான கவிதை உதாரணங்களை எடுத்துக் காட்டி நகர்கிறது இவ் ஆய்வு. இதன் வழி சோ.ப வின் அக உலகத் தரிசனங்களையும் அரசியல், சமூக, பண்பாட்டு நோக்கினையும் எம்மால் உணர முடிகிறது.

சுயம், அகம், புறம் என்ற அடிப்படையில் இத் தொகுப்பிலேயே ஒரு பிரிப்பை செய்துள்ள அவரது கவிதைகள் வழி பல்வேறுபட்ட தரிசனங்கள் வெளிப்படுகின்றன.

**"வீட்டில் வீதியில் கோயிலின் வாசலில்**
**வேலை பார்க்கும் இடத்தில் பயணத்தில்**
**காட்டில் கடலிலும் காலன்றன் தூதுவர்..."**

என்ற வரிகளிலும்

**"தீய அவுணர்கள் மாய நெடுமரம்**
**சாய வருமொரு வடிவேலா**
**கோயில்களில் அழகான வடிவுள**
**கோலம் அமைநல்லை அமர்வோனே...."**

என்ற வரிகளிலும் சிலவற்றைத் தரிசிக்கலாம். இதே போல இவரது மற்றொரு படைப்பாகிய நல்லூர் முருகன் காவடிச் சிந்து என்ற இலக்கிய இசை பாடற் தொகுப்பு குறித்தும் விரிவான முறையில் இந்நூலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளமையும் சிறப்புக்குரியதாகும். எடுத்துக்காட்டாக

**"அவலும் வன்னித் தேனும் பாலும்**
**சுவை கொள் மோதகம் கதலி வாழைப்**
**பழமும் எள்ளுப் பொரியும் கொண்டு போனேன்**
**சந்தம் பயிலும் சிந்தில் கவி செய்திடல் ஆனேன்"**

என்ற பாடலைச் சுட்டலாம். நிறைவாக சோ.ப வின் ஒரு சந்தக் கவிதையை கூறி இப்பிரதி பற்றிய தரிசனத்தை நிறைவு செய்கிறேன்.

**பயிர் வீடு பசு மாடு பனை வேலி தீயும்**
**பல கால சேமிப்பு பறிபோகக் கூடும்**
**கலிகால நமன் வானில் ஹெலிகொப்ரர் ஏறும்**
**கண்மூடித்தனமாக சன்னங்கள் தூவும்**

அடுத்து நாம் நோக்க இருப்பது தன்னுடைய வைத்திய அனுபவங்களை, நோயாளிகளது நிலையில் நின்று புனைவாக்கி வழங்கியுள்ள டொக்டர் எம்.கே முருகானந்தன் எழுதிய டாக்டரின் தொணதொணப்பு என்ற நூலாகும். ஈழத்து வைத்திய படைப்பாளிகளின் வரிசையில் முக்கியமான ஒருவராக விளங்குபவர் டாக்டர் கே.முருகானந்தன் ஆவார். மல்லிகை காலத்தில் இருந்து தொடர்வது அவரது இலக்கியப்பணி இன்று முகநூல் போன்ற நவீன வெளிகளிலும் அது தொடர்கிறது. படைப்பாளி, ரசிகர், விமர்சகர், பத்தி எழுத்தாளர் எனப் பன்முகம் கொண்டது அவரது இலக்கியப் பயணம் அதில் அண்மைக் கால அறுவடையே ஜீவநதியின் 202 ஆவது வெளியீடாகிய டாக்டரின் தொணதொணப்பு என்ற படைப்பாகும். இதற்குரிய ரசனைக் குறிப்பை அறிவோர் கூடல் முன்னோடி புத்தக சோலை இ.து குலசிங்கம் வழங்கியுள்ளார். அவர் தம் உரையில் ஓரிடத்தில் இந்த தொண தொணப்புக்கள் கற்பனையான புனைவுகள் அல்ல காத்திரமான அனுபவ வெளிப்பாடுகள் ஒரு மருத்துவ நூலை வாசித்து அறிந்து கொண்ட உணர்வுதான் எனக்கு கிடைத்தது என்கிறார். மிக இயல்பான நகைச்சுவையுடன் கடினமான விடயங்களை இங்கு பதிவு செய்துள்ளார் என்கிறார். இதே உணர்வுதான் எனக்கும் ஏற்பட்டது அதனால்தான் புனைவை மையப்படுத்திய புனைவு சாரா படைப்பு வெளிக்குள் வைத்து இந்நூலையும் தரிசிக்க முடிகிறது.

நுழைவாயில் தொணதொணப்பு என்பதில் டாக்டர் இந்நூலில் உள்ள நகைச்சுவையின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்துள்ளதுடன் இங்கு பேசப்படும் கருத்துகளே உண்மையானவை அவற்றை மனதில் பதிய வைப்பதற்காக தேவைக்கேற்ப கற்பனையால் பிரசவித்தும் எழுதியிருக்கிறேன் என்று கூறியிருப்பதும், இது புனைவை மையப்படுத்திய புனைவு சாரா பிரதி என்பதையே காட்டுகிறது. தொண தொணப்பு என்ற கிராமிய பேச்சு வழக்குச் சொல்லை டாக்டருடன் இணைத்து வைக்கப்பட்டுள்ள இத் தலைப்பே வாசகரை ஈர்க்கிறது. ஜீவநதியில் தொடராக வெளிவரும் போதும் இத்தலைப்பிலேயே வெளி வந்துள்ளது. அத்துடன் இதில் இடம் பெறும் சில கட்டுரைகள் வீரகேசரியிலும் தினக்குரலிலும் வெளி வந்தவை. சின்ன வயதில் சந்தித்தது என்ற கொழும்பு அலட்டலோடு இப் படைப்பு தொடங்குகிறது. டாக்டரின் வாழ்வு என்பதும் பருத்தித்துறைக்கும் கொழும்புக்குமான வாழ்வாக இருந்த போது அந்தக் கால பழைய நினைவுகளை நோயாளி வழி பேசும் ஒரு படைப்பாக இது விளங்குகிறது.

தியானம், யோகாசனம் என்பதை வலியுறுத்துவதாக மூச்சுத் திணறலுக்கு மருந்தில்லா சிகிச்சை என்ற கட்டுரை அமைகிறது. டாக்டரின் மருந்துச் சிட்டை மகத்துவம், நகைச்சுவை கலந்த டாக்டரின் எழுத்துக்களின் மகத்துவத்தைப் பேசுகிறது. ஆஸ்மாவும் மதுவும் என்பது மது பழக்கத்தில் கொடுமையையும் அதனை கைவிட்டு திருந்திய மனங்களையும் பேசுகிறது. கடவுளிலும் மேலானவர்கள் என்ற கட்டுரை நோயாளிக்கு நம்பிக்கையூட்டும் உள சிகிச்சைக்கு உதவும் இறை வழிபாடு பற்றியும் மத குருமார்களின் பிரார்த்தனை பற்றியும் மதம் குறித்தான சில விமர்சனங்களோடும் நம்பிக்கையின் வலிமையை பேசுகிறது. இதே போல எலி எலியை கடித்து விட்டது, கண்டதும் தின்று "குண்டு" கையானான் போன்ற கட்டுரைகளிலும் புனைவை நகைச்சுவையோடு கலந்து மருத்துவ விளக்கம் தரும் நுட்பம் சிறப்பாக பேச்சு மொழியையும் இணைத்து தரப்பட்டுள்ளது. டாக்டரின் இத்தகைய அனுபவங்களை இன்னமும் வேறுபட்ட வடிவங்களின் படைபாக்க எதிர் பார்க்கிறோம். இதனை அறிமுகம் செய்வதில் தீம்புனலின் புதுப்புனல் அக மகிழ்வடைகிறது. மீண்டும் அடுத்த தொடரில் சந்திப்போம்.

■









"நாங்கள் சமூகத்துக்கு எவ்வளவைக் கொடுக்கின்றோமோ அவ்வளவைத்தான் நாங்கள் பெற்றுக்கொள்ள முடியும்" எனச் சொல்லி வந்தவர்தான் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி. அவர் தமது இறுதிக் காலத்திலும் உடல் உபாதைகளையும் பொருட்படுத்தாமல் அயராமல் இயங்கிய ஆளுமை.

பேராசிரியர் சிவத்தம்பியை முதல் முதலில் கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் **1972** இல் நடந்த பூரணி காலாண்டிதழ் வெளியீட்டு நிகழ்வில்தான் சந்தித்தேன். அந்நிகழ்விற்கு அவர்தான் தலைமைதாங்கினார். அப்பொழுது அவர் தமது குடும்பத்தினருடன் பொரளை கொட்டா ரோட்டில் முன்னாள் நிதியமைச்சர் என்.எம்.பெரேராவின் வீட்டிற்கு அருகில் வசித்துவந்தார்.



# மே 10 பேராசிரியர் கா.சிவத்தம்பியின் 90 ஆவது பிறந்த தினம்!

முருகபூபதி

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் உருவானதும் அதற்குத்தலைவராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் கைலாசபதி **1976** இல் தமிழ்நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கை இரண்டு நாட்கள் ஒழுங்கு செய்திருந்தார். அச்சமயம் அங்கு விரிவுரையாளராகவிருந்த எனது இனிய நண்பர் நுஃமானின் அறையில் தங்கியிருந்து ஆய்வரங்கு நிகழ்ச்சிகளுக்குச் சென்றேன்.



சிவத்தம்பியுடன் கலந்துரையாடுவதற்கு அந்தச் சந்தர்ப்பம் உதவியாகவிருந்தது. ஆய்வரங்குகள் முடிந்த பின்னரும் நான் யாழ்ப்பாணத்தில் நிற்க நேர்ந்தது. ஒருநாள் மாலை யாழ். பஸ்நிலையத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக நின்றபொழுது, சிவத்தம்பி வல்வெட்டித் துறையிலிருந்து வந்த பஸ்ஸில் வந்திறங்கினார். அவர் அன்று வேட்டி அணிந்து மெதுவாக நடந்து புத்தகக்கடைப் பக்கம் வந்தவர், அங்கு நின்ற என்னைக்கண்டுவிட்டு, " என்னடாப்பா இன்னும் ஊருக்குத்திரும்பவில்லையா?" எனக்கேட்டார். அவரது அந்த என்னடாப்பா என்ற உரிமையும் உறவும் கலந்த குரலை **2011** இல் அவர் மறையும் வரையில் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் கேட்கமுடிந்தது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் விரிவுரைப்பணி மற்றும் இலக்கிய விமர்சனத்துறை சார்ந்த அயராத எழுத்துப்பணிகளுக்கு அப்பால், தனது உடல் உபாதைகளையும் பொருட்படுத்தாமல் வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு, வடபிரதேச பிரஜைகள் குழு, யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு முதலானவற்றில் மிகுந்த அர்ப்பணிப்புடன் இயங்கியதை **1983 - 1987** களில் அவதானித்திருக்கின்றேன்.

ஒரு புறம் ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்களின் இயக்கங்கள் மறுபுறம் அரசாங்கத்தின் ஆயுதப்படைகள். இவை இரண்டுக்கும் இடையே சிக்கித்துன்பங்களை அனுபவித்த அப்பாவித்தமிழ் மக்கள்.

பேராசிரியர் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கமே நின்றார். அதனால், இரண்டு தரப்பினதும் கண்காணிப்புக்கும் ஆளானார்.

ஒவ்வொரு செயலுக்கும் எதிரொலி இருப்பது போன்று தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களின் போது அதன் எதிரொலியாக இயக்கங்களின் செயல்களும் அமைந்த காலத்தில், பொறுப்பான மக்கள் நலன் சார்ந்த பிரஜைகள் குழு பதவியிலிருந்து கொண்டு சாதுரியமாக இயங்கினார்.

அவரது சாதுரியங்கள் கடும் விமர்சனங்களுக்கும் உட்பட்டது. குமுதினி படகில் நடந்த மனிதப்பேரவலம், பொலிகண்டி நூலகத்துக்குள் பல அப்பாவி மக்கள் தடுத்துவைக்கப்பட்டு குண்டுவைத்து கொல்லப்பட்ட சம்பவம், முல்லைத்தீவு ஒதிய மலைச்சம்பவம் உட்பட பல கொடுமைகளை பேராசிரியர் ஆவணப்படுத்தி ஊடகங்களுக்குத்தந்தார். மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அரசுக்கும் ஆயுதப்படை அதிகாரிகளுக்கும் உடனுக்குடன் எடுத்து உரைத்தார்.

சிவத்தம்பி பேராசிரியராகவும் இருந்தமையால் அவருக்கு இரண்டு தரப்பிலும் ஒரு கனவானுக்குரிய மதிப்பும் மரியாதையும் இருந்தது. பேராசிரியர் கூரிய கத்தியின் மேல் நடக்கும் நிலைக்கும் ஆளானார்.

அக்காலப் பகுதியில் வீரகேசரியில் நான் ஆசிரிய பீடத்தில் பிரதம ஆசிரியர் - செய்தி ஆசிரியரின் பணிப்பின் பேரில், போர் சம்பந்தப்பட்ட செய்திகளைச் சேகரித்து எழுதிக்கொண்டிருந்த போது யாழ்.மாவட்ட நிருபர்கள் ஊடாகக் கிடைத்த பல செய்தி ஆவணங்களுக்குப் பின்னால் சிவத்தம்பி இயங்கியிருந்தார்.

சிவத்தம்பியின் ஆதாரங்களுடனான ஆவணங்களே தமிழரின் துயரங்களைப் பாராளுமன்றத்தில் தமிழர் தரப்பில் சொல்வதற்கு உதவின.

அவருக்கு **1992** ஆம் ஆண்டு மணிவிழா நடந்தபோது நான் பாரிஸ் ஈழநாடு இதழில் அவரைப் பற்றி எழுதி அதன் பிரதியை பிறந்தநாள் வாழ்த்து மடலுடன் அவருக்கு அனுப்பியிருந்தேன். அதனைப் பார்த்து உள்ளம் பூரிக்க தனது நன்றியைச் சொன்னார்.

அவுஸ்திரேலியா தேசிய வானொலி SBS தமிழ் ஒலிபரப்பில் அவரது விரிவான நேர்காணல் இடம்பெற வேண்டும் என்று அந்த வானொலி ஊடகவியலாளர் ரெய்சலிடம் நான் கேட்டுக்கொண்டபோது அவர் அதற்கு ஏற்பாடு செய்து தந்தார். மெல்பன் ஒலிப்பதிவு கூடத்திலிருந்து சிவத்தம்பியை தொலைபேசி ஊடாகப் பேட்டிகண்டேன். இரண்டு வாரங்கள் அந்த நேர்காணல் SBS தமிழ் ஒலிபரப்பில் ஒலித்தது.

அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் அதனை செவிமடுத்த பேராசிரியரின் பல மாணவர்கள் அவருக்கு தொலைபேசி ஊடாக வாழ்த்துத் தெரிவித்தனர் என்ற தகவலை பின்னர் எனக்குச்சொல்லி அகம் மகிழ்ந்தார்.

சிவத்தம்பி அவர்கள் நீண்டகாலமாகப் பல்வேறு உடல் உபாதைகளுடன் போராடினாலும் அவரது சிந்தனைகள் மிகவும் கூர்மையுடன் பதிவாகிக் கொண்டிருந்தன. அந்திம காலத்தில் கண்பார்வை குறைந்தபோதிலும் எதுவித தடுமாற்றங்களும் இன்றி தனது கருத்துகளைத் தெளிவாகச்சொல்லி மற்றவர்களைக்கொண்டு எழுத்தில் பதியவைத்தார். அந்தவகையில் அவரது சுறுசுறுப்பான இயக்கம் அனைவருக்கும் முன்னுதாரணமானது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியைக் குறிப்பாகவும் தமிழ் இலக்கியத்தை பொதுவாகவும் நோக்குமிடத்து பேராசிரியர் சிவத்தம்பியின் பங்கும் பணியும் விரிவானது ஆழமானது. அவரது வாழ்வும் பணிகளும் தமிழர் நலன் சார்ந்தே விளங்கின. அவர் விமர்சனங்களுக்கும் ஆளானார். அதற்காக அவர் தமிழ் ஆய்வுத்துறைக்காக மேற்கொண்ட கடின உழைப்பைக் குறைத்து மதிப்பிட முடியாது.

அவரது வாழ்வு இலங்கையில் வடமராட்சியில் கரவெட்டியில் தொடங்கி, சர்வதேச ரீதியாக வியாபித்து வளர்ந்து படர்ந்திருந்தது. பேராசிரியர் சிவத்தம்பி அவர்களால் ஏற்பட்டுள்ள வெற்றிடம் நிரப்பப்படவேண்டியது. அவரது இழப்பு ஈடு செய்யப்படவேண்டியதே.

■





# எது தேவை.....?

வே.தபேந்திரன்

பிரமாண்டமான அந்தக் கோயிலின் திருவிழாவுக்குச் சென்று மதிய நேரப் பூசையில் கலந்து கொண்டேன். உற்சவத்தை நடத்தி வைத்த குருக்கள், சுவாமி உள்வீதி சுற்றும் நேரம் ஓடி வந்து வெளியே சில நிமிடங்கள் தரித்து நின்று விட்டு திரும்ப உள்ளே சென்றார். இப்படியாகச் சில தடவைகள் அவர் நடந்து கொண்டார்.

ஏனய்யா, என்ன விசயமெனக் குருக்களைப் பக்குவமாகக் கேட்டேன். தம்பி இந்தக் கோயிலைப் பாலஸ்தாபனம் செய்து 14 வருடங்களாகக் காற்றோட்டம் எதுவும் உள்ளே வராதபடி மூடிக் கட்டி விட்டார்கள்.

பிரமாண்டங்களில் கவனம் செலுத்தும் பக்தர்கள் வருடத்தின் முக்கால் பங்கு காலம் வெப்பமுள்ள எமது நாட்டில் வெளிச்சமும் காற்றும் உள்ளே வரக் கூடியதாகக் கட்ட வேண்டுமெனச் சிந்திக்கவில்லை.

இதன் விளைவு நோயாளிகளை அதிகம் உற்பத்தி செய்யும் நிலையங்களாக அல்லது இருக்கின்ற நோய்களைக் கூட்டும் இடமாகக் கோயில்கள் மாறப்போகின்றன எனக் கூறிய குருக்களின் அந்தச் சொல் மனதைத் தைத்தது.

வெளிநாடுகளில் புலம் பெயர்ந்த எம்மவர்கள் குளிருக்குள் விறைத்து விறைத்து உடலை வருத்தி உழைக்கும் காசுகள் கோடான கோடி செலவில் கோயில் கட்டுமானங்களில் செல்கிறது.

பத்துக் கோடி ரூபா மதிப்பீடு முதல் நூறு கோடி ரூபா வரையில் கோயில் புனரமைப்புகள் நடைபெறுகின்றது. ஒரு தேர் போதாது என்று பஞ்சரதங்கள் (ஐந்து தேர்) செய்கின்றனர். ஒரு கோபுரம் போதாது என்று நாலு புறமும் கோபுரங்கள் கட்டுகின்றனர். கடற்கரைக்கு ஊர் கூடி ஊர்வலமாகச் சென்று தீர்த்தமாடும் பழக்கத்தை நிறுத்தி தீர்த்தக்கேணியும் கட்டுகின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு உற்பத்தித் திறனற்ற வகையில் பெரும் செல்வம் முடங்குகின்றது என்பது ஒரு பக்கம்.

பழைமையும் வரலாற்றுப் பெருமையும் கூறும் கட்டடங்களை அழித்து வரலாற்றை இல்லாமல் செய்வது ஒரு புறம்.

பிரமாண்டம் என நினைத்துக் காற்றுக் கூடப் புக முடியாத கட்டடங்களைக் கட்டுவது தூர நோக்கற்ற பக்கம்.

மூடிக் கட்டிய ஒரு கோயிலின் நிர்வாக சபையின் தலைமை உறுப்பினர்களிடம் உட்புறம் காற்றோட்டம் இல்லாத நிலையைச் சுட்டிக் காட்டினேன். ஆ.. அப்படியா அப்படியானால் மின்விசிறி போட்டால் போச்சு எனச் சிம்பிளாகச் சொன்னார்.

தற்போதைய நீண்ட நேர மின்வெட்டு நிலையைச் சொன்னேன். பெரியதொரு ஜெனரேட்டர் எடுத்தாப் போச்சு. கோயிலுக்குத் திருப்பணி செய்யவெனப் பக்தர்கள் குறிப்பாக, வெளிநாடுகளில் உள்ள பக்தர்கள் போட்டிக்கு நிற்கின்றனர். இது ஒரு சின்ன விசயம் என்றார்.



இப்படியெல்லாம் செலவழிக்கும் பக்தர்கள் உள்நாட்டில் வறுமை காரணமாக காணி இல்லாதோர், வீடு இல்லாதோர், பாடசாலை செல்வதற்குச் சைக்கிள் இல்லாதோர், கல்விச் செலவுக்குக் காசு இல்லாதோர் போன்ற வகையினருக்கு உதவி செய்யும் வீதம் மிகவும் குறைவானது. இந்த வருந்தத்தக்க வரலாறு தொடருகின்றது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு அரசாங்கத்தின், தொண்டு நிறுவனங்களின் வீட்டுத் திட்டங்கள் தொடர்கின்றது. இத் திட்டங்களைப் பெறும் பயனாளிகள் மணல் பெறுவதற்குப் படாத பாடு பெறுகின்றனர்.

பொருட்களின் அதிகரித்த விலையுடன் போட்டி போட்டுக் கட்ட முடியாமல் அவதிப்படுகின்றனர்.

அது போல அரசாங்கத்தினதும் தனியார் துறையினரதும் உற்பத்தித் திறன் வாய்ந்த கட்டுமானங்கள் பல மணல் உட்பட மூலப் பொருட்கள் பெறும் பிரச்சினைகளால் மிகவும் பாதிக்கப்படுகின்றன.

கோயில் கட்டுமானங்கள் கூட பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை போன்ற உள்ளூராட்சி அதிகார சபைகளிடம் அனுமதி பெற்றுத் தான் நிகழ்கின்றது.

அனுமதி பெறாமல் நிகழ்ந்தால் கூடக் கும்பிடும் தெய்வ சந்நிதானம் கட்டுவதற்கு அனுமதி ஏது? என இருக்கலாம். ஆனால், வழிபட வரும் பக்தர்களது ஆரோக்கியமும் அதனை விட ஒரு நாளின் பெரும் பகுதியை ஆலய வளாகத்தில் செலவழிக்கும் குருக்களின், நிர்வாக சபை உறுப்பினர்களின் ஆரோக்கியமும் முக்கியமானது.

நாட்டின் சுவாத்தியத்தைக் கருத்தில் எடுத்துக் கட்டுமானங்களைச் செய்ய வேண்டியது மிகவும் கவனத்திற்கு உரியது. காற்றுப்புக முடியாத, வெளிச்சம் எட்டிப் பார்க்க முடியாத பிரமாண்டமான கோயில் கட்டுமானங்கள் பரவலாக நிகழ்கின்றன.

நாம் யார்? எமது நாடு எத்தகையது ? போன்ற விழிப்புணர்வற்ற கட்டுமானங்கள் தவிர்க்கப்படல் வேண்டும். இது தொடர்பாக ஊடகக் கவனிப்பு தேவையானது.

சமூக சமயப் பெரியார்கள், அரச நிர்வாகிகள் இது தொடர்பான உயர் கவனத்தைக் கொள்ள வேண்டும். மனிதனது உடல் ஆரோக்கியத்தைச் சீரழிக்கும் கோயில்களின் பிரமாண்டங்கள் தேவையானதுதானா? என்பது இன்றைய காலத்தின் கேள்வியாகும்.

■



செ.வெவோகா
இறுதி வருட சிறப்புக்கற்கை
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை

# தற்கால சூழலில் யோகாசனமும் உடல் உள ஆரோக்கியமும்

யோகாசனம், யோகம்+ஆசனம் அதாவது மனதை அலைபாய விடாமல் ஒருநிலைப்படுத்தி செய்யப்படும் உடற்பயிற்சி என்று பொருள். மனதை அலைபாயாமல் தடுப்பதற்கே பெரும்பாலான யோக உடற்பயிற்சிகளில் கண்களை மூடிக்கொள்கின்றனர்.
யோகதத்துவத்தினை "மன விஞ்ஞானம்" (Science of mind) எனக் கூறுவர். சிவனும் பரம்பொருளும் இணைதலாகிய ஆன்மீகப் புணர்ப்பினை (Spiritual Union) யோகமெனும் சொல் சுட்டித்து நிற்பதாக ஞாக்யவல்கியர் எடுத்தாள்கின்றார். இங்கு யோகம் என்பது "ஸித்த விருத்தி நிரோதக" என்று எடுத்தாளப்பட்டிருக்கின்றது. "Yoga is restraining the mind - stuff (-chitta) from taking various forms (-Vrittis) என்று சுவாமி விவேகானந்தர் இதனை மொழிபெயர்த்திருக்கக் காணலாம்.

யோக தத்துவத்தில் மந்திர யோகம், இலய யோகம், ஹட யோகம், இராஜ யோகம் முதலியன முதன்மைக்குரியனவாகப் பேசப்படுகின்றன. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், ப்ரத்தியாஹாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அட்டாங்க யோகமுறைமைகளும் யோகதத்துவத்தில் முதன்மை பெறுகின்றன.

**"இயம நியமமே எண்ணிலா ஆதனம்**
**அயமுறும் அட்டாங்கம் ஆவதும் ஆமே"**

என்கிறது திருமந்திரம். பதஞ்சலியும்,

**"யம நியமாஸன பிராணாயாம ப்ரத்தியாஹார**
**தாரணா த்யான ஸமாதயோ அஷ்டாவங்கானி"**

என எடுத்தாள்கின்றார். பகவத் கீதை கர்ம யோகம், பக்தி யோகம், இராஜயோகம், ஞான யோகம் முதலிய நால்வகை யோகங்களை எடுத்தாள்கின்றது. யோகத்தின் அங்கங்களாகச் சொல்லப்பட்டனவற்றை அப்பியாசம் செய்து மனமாசுகளை அகற்றுகின்ற போது, அங்கே மெய்மையின் விழிப்புணர்வை வளர்க்கின்ற ஆன்மா சார்ந்த பிரகாசம் மேலெழும் என்கிறது பதஞ்சலி சூத்திரம்.



இது ஒரு உடல் மட்டத்தில் மட்டுமல்ல, மன மற்றும் ஆன்மீக மட்டத்திலும் நமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியும் என்பதைப் பரவலாகக் காட்டுகிறது. இது தோரணைகளால் ஆனது (ஆசனங்கள்), தளர்வு (சவாசனா), தியானம் (dhyana), சுவாசம் (பிராணயாமா), கிரியாக்கள் (சுத்திகரிப்பு), முத்ராக்கள் (ஆற்றல் முத்திரைகள்), கீர்த்தன் (மந்திரங்கள்), மந்திரம் அல்லது சடங்குகள். ஒரு உடற்பயிற்சி பலருக்கு நல்வாழ்வையும் உள் அமைதியை நாடுபவர்களிற்கு அமைதியையும் மற்றும் நெறிமுறை வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதில் ஈடுபடும் ஒரு வாழ்க்கை முறையை குறிக்கும் வாழ்க்கை முறை அல்லது வாழ்க்கை கொள்கைகள் மற்றும் போதுமான ஊட்டச்சத்தாகக் காணப்படுகின்றது.

**1. மன அழுத்தத்தைக் குறைத்தல்**

மேற்கத்திய சமூகங்களின் வாழ்க்கை முறை பலரை மன அழுத்தத்திற்கு இட்டுச் சென்று மனச்சோர்வு, பதற்றம் போன்ற உளவியல் சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்தும். யோகா சிகிச்சை மன அழுத்தத்திற்கு விடையிறுக்கும் ஹார்மோனான கார்டிசோலின் அளவைக் குறைக்கிறது, கார்டிசோல் உடலுக்கு அவசியமானது, ஏனெனில் இது மன அழுத்த சூழ்நிலைகளில் அதன் ஆற்றலைக் கட்டுப்படுத்துகிறது மற்றும் திரட்டுகிறது, ஆனால், நம்மிடம் அதிகமாக இருந்தால் அல்லது நமக்குத் தேவையில்லாத சூழ்நிலைகளில் அது அதிகரித்தால், அது பல பக்க விளைவுகளை உருவாக்குகிறது. யோகா பயிற்சி செய்வதன் மூலம் இந்த ஹார்மோனின் அளவைக் குறைக்கலாம், எனவே மன அழுத்தத்தைக் குறைக்கலாம்.

**2. தூக்கத்தை மேம்படுத்துங்கள்**

செரோடோனின் (5-HT) என்பது ஒரு அமினோ அமிலத்திலிருந்து பெறப்பட்ட ஒரு நரம்பியக்கடத்தி ஆகும் டிரிப்டோபன். இது மூளைக்குள்ளும் நரம்பு மண்டலத்தின் மூலமாகவும் செய்திகளை அனுப்புகிறது. மேலும், மனநிலை அல்லது பசியைக் கட்டுப்படுத்துவது போன்ற பல செயல்முறைகளில் பங்கேற்கிறது. கூடுதலாக, அதன் முக்கிய பணிகளில் ஒன்று மெலடோனின் உற்பத்தியை அதிகரிக்கும், தூக்க சுழற்சிகளை ஒழுங்குபடுத்தும் ஹார்மோன். அமைதியான ஓய்வு பெற, செரோடோனின் மன அழுத்தம் மற்றும் உடல் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துவதில் தலையிடுகிறது. "யோகா பயிற்சி செரோடோனின் அளவை அதிகரிக்கிறது, எனவே இது உங்களுக்கு நன்றாக தூங்க உதவுகிறது" என்று டியூக் பல்கலைக்கழகத்தின் ஆய்வின் ஆசிரியர் டாக்டர் முரளி டோரைஸ்வாம் விளக்குகிறார், இதில் யோகா குறித்த 100 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பாய்வு செய்தது குறிப்பிடத்தக்கது.

**3. மனநிலையை மேம்படுத்துகிறது**

கப்ரால், மேயர் மற்றும் அமெஸ் (2011) நடத்திய விசாரணையில், யோகாவின் வழக்கமான பயிற்சி மனச்சோர்வு மற்றும் பதற்றம் உள்ள நோயாளிகளுக்கு செரோடோனின் அதிகரிப்புக் காரணமாக உடல் ரீதியான உடற்பயிற்சிக்கு ஒத்த வழியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை உருவாக்குகிறது. இதில் ஒரு பாத்திரத்தை வகிக்கும் மற்றொரு நரம்பியக்கடத்தி காபா ஆகும். பாஸ்டன் பல்கலைக்கழகம் மற்றும் உட்டா பல்கலைக் கழகத்தின் சமீபத்திய ஆய்வு இந்த நரம்பியக்கடத்தியின் அதிகரிப்பு யோகா பயிற்சியாளர்களிடமும் நிகழ்கிறது என்பதைக் காட்டுகிறது.

**4. ஆயுளை நீட்டிக்கிறது மற்றும் சீரழிவு நோய்களைத் தடுக்கிறது**

ஹார்வர்ட் யுனிவர்சிட்டி ஸ்கூல் ஆஃப் மெடிசின் மற்றும் மார்சூசெட்ஸ் பொது மருத்துவமனையின் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள், ஒரு ஆய்வுக்குப் பிறகு, யோகா மற்றும் தியானம் டெலோமியர்களின் அளவை அதிகரிக்கின்றன, குரோமோசோம்களின் முனைகளில் அமைந்துள்ள கட்டமைப்புகள் மற்றும் முதிர்ச்சியான, நேரடியாகத் தொடர்புடையவை, சிலவற்றின் வளர்ச்சி நோயியல் மற்றும் முன்கூட்டிய மரணம் என்பவற்றிற்குக் காரணமாகக் காணப்படுகின்றன. ஆரோக்கியமான மற்றும் பெரிய டெலோமியர்ஸூக்கும் நீண்ட ஆயுளுக்கும் சீரழிவு நோய்களைத் தடுப்பதற்கும் மக்களின் ஆரோக்கியத்திற்கும் இடையே ஒரு நேர் மறையான தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது.

**5. செறிவு மேம்படுகிறது**



யோகா பயிற்சியாளர்கள் செறிவினை மேம்படுத்த, ஒருங்கிணைப்பு, எதிர்வினை நேரம், நினைவகம், கற்றல் மற்றும் சிக்கல்களைத் தீர்க்கும் திறனைக் காட்டுதல் போன்றவற்றை மேற்கொள்ள செய்கின்றனர். இதனை டெட்ராய்டில் உள்ள வெய்ன் மாநில பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான நேஹா கோத்தே மேற்கொண்ட ஆய்வின்படி அவர்களின் ஆராய்ச்சியின் படி, ஆரோக்கிய இதழில் வெளியிடப்பட்ட "செறிவை மேம்படுத்த 9 குறிப்புகள்" என்ற கட்டுரையில் "உடல் செயற்பாடு மற்றும் தீவிரமான உடல் செயற்பாடுகளின் ஒரு அமர்வை விட ஒரு நாளைக்கு 20 நிமிட யோகா அறிவாற்றல் மட்டத்தில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்." எனக் குறிப்பிட்டிருப்பதானது நோக்கத்தக்கது.

**6. உறவு மற்றும் பாலியல் உறவை மேம்படுத்துகிறது**

உடற்பயிற்சிக்கான அமெரிக்க கவுன்சிலின் உடற்பயிற்சி உடலியல் நிபுணரும் தனிப்பட்ட பயிற்சியாளருமான பீட் மெக்காலின் கூற்றுப்படி, "யோகா சிறந்த உடலுறவை ஏற்படுத்தும், ஏனெனில் இது உங்கள் நெகிழ்வுத்தன்மைக்கு உதவும் மற்றும் உங்கள் இடுப்பு தசைகளை வலுப்படுத்தும்." பாலியல் மருத்துவ இதழில் வெளியிடப்பட்ட யோகா ஒரு ஆய்வு பாலியல் திருப்தியை மேம்படுத்த முன்கூட்டிய விந்துதள்ளல் பிரச்சினைகளிற்குச் சிகிச்சையளிக்க முடியும் என்று அறிவுறுத்துகிறது கூடுதலாக, பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பிற ஆராய்ச்சிகள் குறிப்பிடுவதைப் போல, யோகா பயிற்சி மூலம் மன அழுத்தத்தைக் குறைப்பது, ஆண்மை மற்றும் பாலியல் சக்தியை அதிகரிக்கிறது. எனவே, உங்கள் பாலியல் வாழ்க்கையை வெவ்வேறு வழிகளில் மேம்படுத்துவதன் மூலம், உங்கள் உறவும் பயனடையக்கூடும் எனக் குறிப்பிடுகிறது..

**07.சிதறாத கவனம்**

இது ஒரு மிக முக்கியமான உளவு முறை. இந்த உளவு முறையை, கற்றுக் கொள்ள நீண்ட நாட்கள் பிடிக்கும். ஆனால், இதைக் கற்றுக் கொள்ள மிகச் சிறந்த வழி, ஒவ்வொரு தேவையான நுணுக்கங்களையும் சிறிது சிறிதாக வடிவமைத்து, ஒன்றன் பின் ஒன்றாக கற்றுக் கொள்ள வேண்டும். இதனை யோகாவின் ஊடாக சிறப்பாக கற்றுக்கொள்ளலாம். ஒருவிடயத்தில் எமக்கு கவனச்சிதறல் ஏற்படுமாயின் அவ் விடயமானது சரியாகச் செய்து முடிக்கவியலாது போய்விடும்.

இவ் உளநலன்களினையும் உடல்நலன்களினையும் கருத்தில் கொண்டு தற்காலத்தில் உலகநாடுகள் அனைத்தும் யோகாவினை பின்பற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. வருடத்திலுள்ள ஒவ்வொரு நாட்களையும் நைமித்ய (விசேட) நாட்களாக உலகம் நினைவு கூர்ந்து வருகின்றது. இந்த விசேட நாட்கள் அவற்றைப் பேணுவதன் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்தி நிற்கின்றது. இதன் புரிதல்களும், ஞாபகப்படுத்தல்களும் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கான முயற்சிகளாகவே அமைகின்றன. இதற்கு உடலாகிய புறமும், மனமாகிய அகமும் ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். மனம் வலுவுற்று உடல் வலுவற்று, மாறாக மனம் வலுவற்று உடல் வலுவுற்றுக் காணப்பட்டால் அது ஆரோக்கியமான வாழ்வுக்கு உகந்தது அல்ல. இந்த அவசியத்தை உணர்ந்து கொண்ட உலகம், உடலுள நல மேம்பாட்டுப் பேணலுக்கு ஒரு வழியைத் தேடியது. அவ்வழியினூடாக விழிப்புணர்வினை ஏற்படுத்தி ஆரோக்கியமான சூழலை தோற்றுவிக்க முனைந்தது. அதுவே ஜூன் 21 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சர்வதேச யோகா தினமாகும். இது காலம் தாழ்த்திய கண்டுபிடிப்பு. ஆனாலும் அவசியமானதொன்றாகும். ■

# வாழ்க்கைப் போராட்டத்தில் உதித்த செந்தாமரை “செல்லமுத்து”

ம.பிரசாலினி

மேலைநாட்டு இலக்கியம் தமிழுக்கு அளித்த கொடைகளுள் ஒன்றாக நாவல் திகழ்கிறது. வாழ்வோடு நெருங்கிய கதைப் பின்னல்களால் கோர்க்கப்பட்ட இலக்கிய வடிவம் என்ற பெருமைக்குரியது. இலங்கைத் தமிழ் நாவல் இலக்கியத்துக்கு சிறப்பினை வழங்கும் வகையில் எழுதப்பட்ட நாவலாக “செல்லமுத்து” அமைந்துள்ளது. வன்னி மண்ணினை குவியமாகக் கொண்டு யோ.புரட்சியால் எழுதப்பட்ட நெடுங்கதையாகும். முல்லைத்தீவு மாவட்டம் வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த யோ.புரட்சி “1000 கவிஞர்கள் கவிதைகள்” என்ற தொகுப்பின் ஊடாக பிரபல்யம் அடைந்தவர். பெண் ஒருத்தியின் வாழ்க்கைப் போராட்டத்தினை இனங்காட்டுவதாக ‘செல்லமுத்து’ காணப்படுகின்றது. முகவுரை, அணிந்து, என்னுரை பின்னிணைப்பு என்பவற்றோடு 140 பக்கங்களில் அமைந்துள்ள நாவல் செல்லமுத்து வெளியீட்டகத்தால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது. பேராசிரியர் சி.மௌனகுரு முகவுரையினையும், ந.பார்த்தீபன் அணிந்துரையினையும் வழங்கியுள்ளனர்.

கிராமத்து வாசனை வார்த்தை எங்கும் வீச கதை எழுதப்பட்டுள்ளது. தோட்ட வேலையைச் செய்யும் கிராமத்துப் பெண்ணின் உடல் வலியை நாமும் உணரும் வகையிலே கதை தொடங்குகிறது. குடும்பச் சுமையோடு கணவனையும் சுமந்து செல்லமுத்து கண்ணீரை வர வைக்கிறாள். தியாகம் என்ற உணர்வு நாவல் எங்கும் பரந்துள்ளது. வன்னி மண்ணில் இருந்து இன விடுதலை குறித்த நாவல்கள் எழுகின்ற போது, மாறுபட்ட வகையிலே சமூக விடுதலை பற்றி யோ.புரட்சி சிந்தித்துள்ளார்.

கைராசிக்காரியாக, வைத்தியம் பார்ப்பவளாக, ஊர்ப் பிரச்சினைகளுக்கு முதலில் நிற்பவளாக, பணிவுடையவளாக செல்லமுத்து அமைந்துள்ளாள். இவள் கணவனோ குடிகாரனாக திருட்டுப் புத்தி உள்ளவனாக, பிறரிடம் கடன் பெற்று திருப்பிக் கொடுக்காதவனாகக் காணப்படுகிறான். கதையானது வள்ளுவர்புரம், பாட்டாளிபுரம், சேனைபுரம், தங்கபுரம் போன்ற கிராமங்களில் நகர்த்தப்பட்டுள்ளது. “கிராமங்களை அழகு என சொல்வது அங்குள்ள இயற்கையை வைத்து மட்டுமல்ல இதயங்களை வைத்தும்தானே” என்று கதாசிரியரே ஓரிடத்திலே குறிப்பிடுகின்றார்.

கிராமத்து நம்பிக்கைகள், கோயிலில் நிகழும் சாமி ஆட்டம், கை வைத்தியம், பிள்ளைப் பேறு போன்றவற்றை நாவல் சிறப்பாக வெளிப்படுத்துகின்றது. எண்ணற்ற துன்பங்களைச் சகித்துக் கொண்டு குடும்பத்துக்கு தலைமை ஏற்று பெரும் கொடுமைகளை எதிர் கொள்ளும் “செல்லமுத்து” என்ற கதாப் பாத்திரத்தையே அனைத்து இடங்களிலும் காண்கின்றோம். அவளது சமையல் முறையைக் கதாசிரியர் நுட்பமாக வெளிப் படுத்துகின்றார். மேலும், ஒரு காலத்தின் ஆவணமாகவும் நாவலை மாற்றியுள்ளார். “ஒரு சிறிய ஜாம் போத்தலினுள் அரைவாசி அளவிற்கு உப்பு இடப்பட்டு சிறிதளவு தேங்காய் எண்ணெய் இடப்பட்டிருக்கும் உப்பினுள் அமிழ்ந்திருக்கும் திரியானது மேல் உள்ள எண்ணெயினைக் கடந்து ஒரு சிறு தகட்டுடன் இணைக்கப்பட்டிருக்கும். இதுதான் செல்லமுத்து வீட்டு சிக்கன விளக்கு” என வருணிப்பது குறிப்பிடத்தக்கது.




உயர்வான தாய்மையினை நாவலியே காணமுடிகிறது. கண்ணாவைப் படிக்க வைக்கப்படுகின்ற துன்பங்கள், வேலை செய்ய விடாது செல்லப் பிள்ளையாகப் பார்ப்பது, மகனது காதல் உணர்வுகளை ஏற்பது என்றவாறாக பல சந்தர்ப்பங்களில் உயர்ந்து விளங்குகின்றாள். காளியப்பனுக்கு உண்டான நோய் கருதி வேதனைப் படுதல், கணவன் நுரையினைத் துடைத்தால் போன்ற நேரங்களில் நல்லதொரு தாரத்தினையும் காண்கிறோம். செல்லமுத்து, காளியப்பன், கண்ணா, சாந்தி, வள்ளி, மாரிமுத்து, கண்மணி, சிங்கராயர், மங்களம், மயிலு சாஸ்திரி, சின்னப் பண்ணையார் சுந்தரத்தார் போன்ற பாத்திரங்களால் இந் நாவல் கட்டமைக்கப்பட்டுள்ளது. கதையின் முடிவு அனைவரிடமும் கண்ணீர்த் துளிகளை ஊற்றெடுக்கச் செய்யும் வகையிலே அமைந்துள்ளது. மகனின் வெற்றிச் செய்தியினை அறிய முன்னரே செல்லமுத்து உயிர் துறப்பது இளகிய இதயங் கொண்ட வாசகரை பெருந் துன்பத்திற் குள்ளாக்கி விடுகின்றது.

இந்நாவல் வெறும் புனைவாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. நாவல் ஆசிரியரின் வாழ்க்கைச் சம்பவங்களின் கோர்வை என்றே எண்ணுகிறேன். தான் சந்தித்த அனுபவங்களை மண் வாசனையோடு சிறப்பான நாவலாக எழுதி யோ. புரட்சி தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார். ■




# இயற்கையின் அற்புதங்களில் ஒன்றான “மகா ஓயா சுடுநீர் கிணறு”

எஸ்.ஐ.எம்.நிப்ராஸ்

இலங்கையில் பல்வேறு பகுதிகளில் காணப்படும் வெந்நீர் கிணறுகளின் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக மகா ஓயா சுடுநீர் கிணற்றைக் குறிப்பிடலாம். கொழும்பிலிருந்து சுமார் 300 கிலோ மீற்றர் தூரத்தில் அதே போல் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 59 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்படுகின்றது.

மகா ஓயா நகரத்திலிருந்து 2 கி.மீற்றர் தூரத்தில் சுடுநீர் கிணறு காணப்படுகிறது. இங்கு உள்நுழைவுக் கட்டணமாக 50 ரூபா பணம் அறவிடப்படுகின்றது.

வாகனங்களில் வருபவர்களுக்கு வாகனத் தரிப்பிட வசதிகளும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தினந்தோறும் காலை 6.00 மணி முதல் திறக்கப்பட்டு மாலை வரை இங்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றார்கள்.

இங்கு 7 வகையான சுடுநீர் கிணறுகள் காணப்படுகிறது அவைகள் ஒவ்வொன்றும் மாறுபட்ட வெப்பநிலைகளைக் கொண்டதாக சுமார் 45 டிகிரி செல்சியஸ் முதல் 85-90 வரை வெப்பமாகக் காணப்படுகிறது. இதில் குறிப்பாக, ஒரு சில கிணறுகளில் நீர் கொதிநீர்க்குமிழிகள் உருவாகுகின்றது.

இங்குள்ள கிணறுகள் மற்றும் சுற்றுச்சூழல்கள் சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறுவதற்கான ஏற்பாடுகள், மலசல கூட வசதிகள் என்பன இங்கு திறன்பட பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் சுடுநீர் கிணற்றில் குளிப்பதற்கு வாளி போன்றவைகளும் வழங்கப்படுகின்றது. இதில் இரு கிணற்று நீர் சாதாரணமாக வெப்பநிலை கொண்டதாகக் காணப்படுகிறது. இவ்வெந்நீர் கனிமக் கலவைகளின் மாறுபாடுகளின் காரணமாக ஊற்றில் குளிப்பதன் மூலமாக தோல் நோய்கள், மூட்டு நோய்களை இவ்நீர் குணப்படுத்துவதாக மூதாதையர்களினால் நம்பப்படுகின்றது. ■













# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

## 17

கதாநாயகனுக்கு ஈடாக நடித்த ஒரே நடிகை கே.ஆர்.விஜயா மட்டும்தான். 250 படங்களில் கதாநாயகியாக நடித்து கதாநாயகர்களுக்கு சவால் விட்டவர். சிவாஜிக்குப் போட்டியாக நடித்த நடிகைகளில் கே.ஆர். விஜயாவும் ஒருவர். சிவாஜி, எம்.ஜி.ஆர், ஜெமினி, முத்துராமன், ஜெய்சங்கர், சிவகுமார், ரவிச்சந்திரன் போன்ற அன்றைய கதாநாயகர்கள் அனைவருடனும் ஜோடியாக நடித்தவர். கே.ஆர். விஜயாவுக்காக கதை எழுதி படம் தயாரித்தார்கள்.

நமது தமிழ்ச் சினிமாவில் நாயகியர்களாக வந்தவர்களில் கதாநாயகர்களுக்கு நிகராக தனக்கென்று தனிக்கம்பனி, தனிக்கதையாசிரியர்கள், டைரக்டர்கள் என்று உருவாக்கி படங்களை எடுத்தவர் கே.ஆர்.விஜயா. மதுரை திருமாறன், பாலமுருகன், ஆரூர்தாஸ், வியட்நாம் வீடு சுந்தரம் போன்றவர்கள் கே.ஆர். விஜயாவுக்காக கதை எழுதினார்கள். இவர்களில் சிலரை கே.ஆர்.விஜயா இயக்குநராக்கினார்.

கே.ஆர்.விஜயா நடித்து அறிமுகமான படம் ‘கற்பகம்’. இந்தப் படத்தில் நடிப்பதற்கு துணை நடிகர் ஏஜெண்ட் அச்சுதன் டைரக்டர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணனிடம் அறிமுகப்படுத்தினார். ஒரு நாடகத்தில் நடந்த நடன நிகழ்ச்சியில் பங்குபெற்ற கே.ஆர். விஜயாவைப் பார்த்த ஜெமினி கணேசன் ‘கற்பகம்’ கேரக்டருக்கு இவர் பொருத்தமானவராக இருப்பார் என்று டைரக்டர் கே.எல்.கோபாலகிருஷ்ணனிடம் கே.ஆர்.விஜயாவை சிபாரிசு செய்தார். டைரக்டர் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் ‘கற்பகம்’ படத்தில் இவரை கதாநாயகியாக அறிமுகப்படுத்தினார். கே.ஆர்.விஜயாவின் 100 ஆவது படமான ‘நந்தையில் முத்து’ படத்தையும் டைரக்டர் கே.எஸ்.ஜியே இயக்கினர்.

கே.ஆர்.விஜயா முன்னணி கதாநாயகியாக வளர்ந்துகொண்டிருக்கும் போது வேலாயுதம் நாயரைத் திருமணம் செய்து கொண்டார். அதன் பிறகு சினிமாவில் நடிப்பதைத் தவிர்த்து ஒதுங்கிய வரை சாண்டோ சின்னப்பா தேவர் வேலாயுதம் நாயரை நேரில் சந்தித்துப் பேசி தனது ‘அக்கா தங்கை’ படத்தின் மூலம் மறுபடியும் நடிக்க வைத்தார்.

நல்ல கதாபாத்திரங்கள் உள்ள படங்களில் மட்டும்தான் நடிப்பேன் என்று மீண்டும் ஒதுங்கி நின்றவரை தனது ‘தீர்க்க சுமங்கலி’ படத்தின் மூலம் மறுபடியும் வரவழைத்து நடிக்க வைத்தவர் டைரக்டர் ஏ.சி.திருலோகசுந்தர். நடிகர் கே. பாலாஜி தயாரிப்பாளராகி ஒரு படத்தைத் தயாரித்தார். அந்தப்படம் படுதோல்வியடைந்தது. துவண்டு போன அவருக்கு பைனான்ஸ் உதவி செய்து படங்களைத் தயாரிக்க வைத்தார் கே.ஆர்.விஜயா. மறுபடியும் சுஜாதா சினி ஆர்ட்ஸ் என்ற நிறுவனத்தைத் தொடங்கி சிவாஜி - கே.ஆர்.விஜயா நடித்த ‘தங்கை’ படத்தை ஹிந்தியிலிருந்து தமிழில் ரீமேக் செய்தார். அந்தப்படம் வெற்றிப்படமானது அதிலிருந்து அவருடைய படங்கள் ஹிந்திப்படங்களைத் தழுவி எடுக்கப்பட்ட படங்களாகத்தான் வெளிவந்தன.

கே.ஆர்.விஜயாவின் அப்பா ராமச்சந்திரன் ஆந்திராவிலுள்ள சித்தூரைச் சேர்ந்தவர். அம்மா கல்யாணி கேரளாவிலுள்ள திருச்சூரைச் சேர்ந்தவர். இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்கள்.

அப்பா இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தவர். ஓய்வு பெற்றதும் வைர வியாபாரம் செய்யத் தொடங்கினார் அதில் நஷ்டம் ஏற்படவே குடும்பத்தை பழனிக்கு அழைத்துவந்தார்.

அம்மன் கோயிலில் நடந்த நாடகத்தில் கே.ஆர். விஜயாவை நடிக்க வைத்தார். கே.பி.தங்கமணி என்பவரின் நாடகக் குழுவில் சேர்ந்துவிட்டு பல ஊர்களுக்குப் போய் நாடகம் நடிக்க வைத்தார்.

ஜீபிடர் பிக்சர்ஸ் ‘அபிமன்யூ’ படத்தில் நடித்த நடிகர் எஸ்.எம்.குமரேசன் பொருட்காட்சியில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தார். அதில் நடிக்க கே. ஆர்.விஜயாவிற்கு சிறியவேடம் கிடைத்தது.

அங்கு வந்திருந்த நடிகர் கே.ஏ.தங்கவேலும் மெட்ராஸுக்கு வாங்க நடிப்பதற்கு வாய்ப்பு வாங்கி தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். பிரபல கதாசிரியர் விருதை ராமசாமி நாடகக்குழு நடத்திய நாடகங்களிலும் நடித்திருக்கிறார். ‘முத்துமண்டபம்’, ‘விளக்கேற்றியவள்’ படங்களில் துணை வேடங்களில் நடித்திருக்கிறார்.

பி.ஏ.குமார் தயாரித்த ‘மகளே உன் சமத்து’ படத்தில் சிறிய வேடத்தில் நடித்தார். அப்பொழுதுதான் நடிகவேல் எம்.ஆர்.ராதாவின் அறிமுகம் ஏற்பட்டிருக்கிறது. உன்பேர் என்னம்மா என்று அவர் கேட்டிருக்கிறார். அதற்கு தெய்வநாயகி என்று இவர் கூறியிருக்கிறார். ‘அதென்னம்மா தெய்வநாயகினு பேர் வெச்சிக்கிட்டு சினிமாவுக்கு அது பொருந்திவராது விஜயானு பேர் வெச்சிக்கோ’ என்று கூறியிருக்கிறார். அதையே அவரது தந்தையின் இனிசலையும் சேர்த்து கே.ஆர்.விஜயா என்று பெயரை மாற்றிவிட்டார். அன்றுமுதல் கே.ஆர். விஜயா என்ற பெயரிலேயே நடித்து பிரபலமானார்.




எம்.ஜி.ஆருடன் ‘விவசாயி’, ‘பணம் படைத்தவன்’, ‘தாழம் பூ’, ‘தொழிலாளி’, ‘நான் ஆணையிட்டால்’, ‘நான் ஏன் பிறந்தேன்’, ‘நல்லநேரம்’ போன்ற படங்களில் ஜோடியாக நடித்தார்.

சிவாஜியுடன் ‘செல்வம்’, ‘தங்கை’, ‘திருடன்’, ‘இருமலர்கள்’, ‘ஊட்டி வரை உறவு’, ‘ராமன் எத்தனை ராமனடி’, ‘தவப் புதல்வன்’, ‘ரிஷிமூலம்’, ‘எதிரொலி’, ‘நான் வாழ வைப்பேன்’, ‘கிரகப் பிரவேசம்’, ‘பாரத விலாஸ்’, ‘தங்கப்பதக்கம்’, ‘திரிசூலம்’ போன்ற படங்களில் இணைந்து நடித்து பொருத்தமான ஜோடி என்று அனைவரின் பாராட்டுகளைப் பெற்றார்.

ஜெமினியுடன் ‘கற்பகம்’, ‘ராமு’, ‘சங்கமம்’, ‘குறத்தி மகன்’, ‘மாணிக்கத் தொட்டில்’, ‘தேன்மழை’ போன்ற படங்களில் இணைந்து நடித்தார்.

ஜெய்சங்கருடன் ‘கௌரி கல்யாணம்’, ‘பஞ்சவர்ணக் கிளி’, ‘பெண்ணை வாழவிடுங்கள்’, ‘பட்டணத்தில் பூதம்’, ‘சூதாட்டம்’, ‘வாயாடி’, ‘திருடி’, ‘அஸ்திவாரம்’, ‘மேயர் மீனாட்சி’ போன்ற படங்களில் நடித்தார்.

நடிகர் ரவிச்சந்திரனுடன் ‘இதயக்கமலம்’, ‘நினைவில் நின்றவள்’, ‘சபதம்’ போன்ற படங்களிலும், நடிகர் ஆர்.முத்துராமனுடன் ‘சர்வர்சுந்தரம்’, ‘நாணல்’, ‘நம்ம வீட்டு தெய்வம்’, ‘கண்ணம்மா’, ‘முருகனடிமை’, ‘சொந்தம்’, ‘இதோ எந்தன் தெய்வம்’, ‘கண்ணே பாப்பா’, ‘நத்தையில் முத்து’, ‘தீர்க்க சுமங்கலி’, போன்ற படங்களிலும், ஏவி.எம்.ராஜனுடன் ‘துணைவன்’ படத்திலும், சிவகுமாருடன் ‘கந்தன் கருணை’ படத்திலும், கே.பாலாஜியுடன் ‘காட்டுரோஜா’, ‘அக்கா’ படத்திலும், எஸ்.எஸ்.ஆருடன் ‘கைகொடுத்த தெய்வம்’ படத்திலும், நாகேடன் ‘கல்யாண ஊர்வலம்’ படத்திலும் இணைந்து நடித்திருக்கிறார். நாகேடன் நடித்த சர்வர் சுந்தரம் என்றைக்கும் மறக்க முடியாத படம்.

அத்தைமடி மெத்தையடி’, ‘தேடினேன் வந்தது’, ‘மலர்கள் நனைந்தன பனியாலே’, ‘வெள்ளி மணி ஓசையிலே’, ‘தமிழுக்கு அமுதென்றுபேர்’, ‘முத்துச் சிப்பி மெல்ல மெல்ல திறந்துவரும்’, ‘சிலை எடுத்தான் ஒரு சின்னப் பெண்ணுக்கு’, ‘ஆசை மனதில் கோட்டைகட்டி’, ‘மல்லிகை என் மன்னன் மயங்கும்’ இந்த இனிமையான பாடல்களை கேட்கும் போது புன்னகை அரசி கே.ஆர்.விஜயா கண் முன்னே காட்சியளிப்பார்.

தமிழ்ச் சினிமாவிலேயே தனது மகளின் திருமணத்தின் போதும், ‘நத்தையில் முத்து’ 100 ஆவது படம் நடித்து முடித்த போதும் அதற்கான விழாவெடுத்து அந்த விழாவில் கலந்து கொள்வதற்காக பத்திரிகையாளர்களை நேரில் சென்று வரவழைத்து கலந்து கொண்டவர்களுக்குப் பரிசுகள் வழங்கி கௌரவித்தவர் நடிகை கே.ஆர்.விஜயா மட்டும்தான்.

தமிழ்ச் சினிமா கதாநாயகியர்களில் வீட்டிற்குள்ளே தியேட்டர், நீச்சல் குளம், ரேஸ்குதிரைகள், பைனான்ஸ் கம்பெனி, தயாரிப்பு நிறுவனம், சொந்தமாக விமானம் வைத்திருந்தவர் கே.ஆர். விஜயா மட்டும்தான்.

■

# கல்யாணக்கனவு

தொடர் கதை

கனவு 22

யாழ் சத்யா

“நீ கதையை மாத்தாதை. நான் உன்னைக் கேள்வி கேட்க, நீ அதுக்குப் பதில் சொல்லாமல் என்னைக் கேள்வி கேட்கிறாய்... முதல்ல நீ சொல்லு. நீ எப்ப இருந்து லவ் பண்ணத் தொடங்கினனீ?” சில நொடிகள் பழைய நினைவுகளில் ஆழ்ந்தவன், தூரத்தே தெரிந்த மலை முகடுகளை வெறித்தபடி சொல்ல ஆரம்பித்தான்.

“இந்தப் படங்களில எல்லாம் ஒரு சீன் காட்டுவாங்கள் பார்த்திருக்கிறியா? வழக்கமான கஸுவல் உடுப்பில பார்க்கிற பொண்ணை சாரியிலயோ அல்லது ஹாப் சாரியிலயோ கலாசாரமா குடும்பப் பாங்கான பொண்ணாப் பார்க்கிற நேரம் இந்த ஹீரோக்கள் எல்லாம் மயங்கிடுவாங்க.

எனக்கு இப்படியான சீனைப் பார்த்தாலே சிரிப்பு வரும். என்னடா இது சாரி கட்டிக் கொஞ்சம் மேக்கப் போட்டால் வழக்கமான வடிவை விடக் கொஞ்சம் கூட இருக்கிறது சரிதான். அதுக்காக எல்லாம் இப்பிடி ரொமான்டிக் லுக் விடுறதெல்லாம் ஓவர் இல்லையோ? அது எப்பிடி சாரில பார்த்ததும் லவ் பொத்துக்கொண்டு வருது என்று.

ஆனா, நானே அப்படியொரு சந்தர்ப்பத்தை உணர்ந்தேன் வைஷு. நாங்கள் அப்ப ஏ.எல் ரெண்டாம் வருசம். அன்றைக்குப் பள்ளிக்கூடத்தில சோசல். (உயர்தர மாணவர்கள் ஒன்று கூடல்) நான் சைக்கிளைக் கொண்டு போய் ஸ்டான்ட்டில விட்டிட்டு நிமிர்ந்து பார்க்கிறன்...

ஸ்...அப்பப்பா...! நான் தேவதையை எல்லாம் நேரில பார்த்ததில்லை. ஆனா, அன்றைக்கு சாரில பார்த்த கோலம்தான் எனக்கு இன்றை வரைக்கும் தேவதை என்ற சொல்லுக்கு மனசில வாற வரி வடிவம். பொதுவா எல்லாப் பிள்ளையளும் பட்டுச் சாரியும் சில்க் சாரியுமாகக் கட்டியிருக்க வெள்ளை நிறத்தில பிங்க் கலர் கரை போட்ட கொட்டன் சாரி கட்டி, காதில ஒரு சின்ன முத்துச் சிமிக்கியும் கழுத்தில மெல்லிய முத்துச் சங்கிலியுமா இடுப்புக்குக் கீழ நீண்ட ஒற்றைப் பின்னலும் பின்னித் தலை நிறைய மல்லிகைப் பூவும் வைச்சு, நெத்தில சின்னதா ஒரு மரூன் நிற முக்கோணப் பொட்டும் வைச்சுக் கொண்டு...

அப்பிடியே சாகிற வரை பார்த்துக் கொண்டிருக்கலாம் போல ஒரு உணர்வு. அந்த செக்கன்தான் மனசில தோணிச்சு. நான் வாழும் காலம் பூராக இவளை என் கூடவே பத்திரமாக வைச்சிருக்க வேணும் என்று. அந்த எண்ணம் தோன்றின அந்த நிமிசம் என்ர மனசில தோன்றின உணர்வுகளை வெறும் வார்த்தைகளால சொல்ல முடியாது வைஷு.

வயித்தில இருந்து தொண்டை வரை ஏதோ உருண்டு புரளுற உணர்வு. இதயம் திடீரென்று வேகமா துடிக்கத் தொடங்கிச்சு. இதயம் ஏதோ என்ர காதுக்குப் பக்கத்திலே வந்தது போல லப்டப் சத்தம் என்ர காதுக்கயே கேட்கத் தொடங்கிட்டுது.

அதுவும் அப்படியே அந்த நீளக் கண்ணை அகல விரிச்சுச் சிரிச்சுக் கொண்டே ‘அழகா இருக்கிறனா?’ என்று கேட்ட அந்த நிமிசம், இப்பவும் என்ர மனசில இருக்குடி. நான் சாகிற வரைக்கும் அதை என்னால மறக்கவும் முடியாது வைஷு. நீ என்னைத் தப்பா நினைச்சாக் கூடப் பரவாயில்லை. ஆனா அதுதான் உண்மை.

அந்த ஒரு நொடியில தோன்றின உணர்வுக்குப் பேர்தான் காதல் என்றால்... நானும் காதலிச்சன் வைஷு... இந்த நிமிசம் வரைக்கும் காதலிச்சுக் கொண்டு தான் இருக்கிறன். நான் சாகிற அந்தக் கடைசி செக்கனில கூட என் காதல் இருக்கும்.



சின்ன வயசில இருந்து சேர்ந்து விளையாடிக் கூடித் திரிஞ்சிட்டு நான் காதலிச்சது சரியா? தப்பா? என்றெல்லாம் எனக்குத் தெரியாது வைஷு. ஆனால், உன்னட்ட இதைச் சொல்லாமல் விட்டது பெரிய தப்புத்தான். அதுக்காக என்னை மன்னிச்சிடுடி... ப்ளீஸ்... நான் வேணுமென்றே மறைக்கல வைஷு. நீயே யோசிச்சுப் பார்... ஏ.எல்க்குப் பிறகு நானும் நீயும் சரியாகக் கதைக்கவே சந்தர்ப்பம் அமையலயே... அப்புறம் எப்பிடி நான் இதையெல்லாம் உன்னட்டச் சொல்லுறது...?

என்னால இந்த நினைவுகளையெல்லாம் மறந்து வேறையொரு பெண்ணை பொண்டாட்டியாக ஏத்துக் கொள்ள முடியும் போலத் தோணேல்ல வைஷு. கடைமைக்குக் கல்யாணம் செய்து இன்னொரு பொண்ணோட வாழ்க்கையைக் கெடுக்கவும் விரும்பலடி. அதுதான் காலம் பூரா இப்பிடியே தனியாக இருந்திடுற பெட்டர் போலப் பட்டுச்சு...

நானும் சாதாரண மனுசன்தானேடி. எனக்கும் உணர்வுகள் இருக்குத் தானே. ஏதோ ஒரு நொடில ஹோர்மோன் செய்த வேலையோ, அந்த பதினெட்டு வயசுக்குரிய வயசுக் கோளாறோ, எப்பவுமே கூட இருக்கும் நீ முரளி மேல லவ் லவ் என்று பைத்தியமாகத் திரிஞ்சதிலயோ எனக்கும் அந்தக் காதல் என்ற உணர்வை அனுபவிச்சுப் பார்க்கணும் என்று தோணிட்டுப் போல.

சத்தியமா எனக்குச் சரியாகச் சொல்லத் தெரியேல்லடி... இது காதல் தானா என்று கூட எனக்குத் தெரியேல்ல. ஆனா, என்னால எதையுமே மறக்க முடியலையே... சின்ன வயசில இருந்து அந்தப் பழகின நாட்கள் எதுவுமே என் மனசை விட்டுப் போகுதில்லையே... ஒரு சின்னப் பூச்சியைப் பார்த்தால் கூட முதலாம் வகுப்புப் படிக்கேக்க பொன்வண்டு தேடிப் பிடிச்சு நெருப்புப்பெட்டிக்க போட்டுக் கொண்டு வந்து குடுத்த ஞாபகம் வரும்.

சின்னப் பிள்ளைகள் சைக்கிள்ல போறதைக் கண்டால் நான் சைக்கிள் ஓடப் பழக்கிவிட்டது ஞாபகம் வரும். இப்படி ஒவ்வொரு சின்ன விசயத்திலயும் பழைய ஞாபகங்கள் வந்து கொண்டே இருக்கும் போது நான் எப்பிடி வைஷு கல்யாணத்தைப் பற்றி யோசிக்கிறது? என் வாழ்க்கை தான் இப்பிடிக் கானல் நீராப் போச்சு. நீயாவது சந்தோசமாக இருக்கிறாய் என்று பார்த்தால் கடைசியில நீயும் இப்பிடித் தனி மரமாக நிக்கிறியே வைஷு. விதி ஏன்தான் இப்பிடி எங்கட வாழ்க்கையிலே விளையாடுதோ தெரியேல்லையே...”

கூறியவன், ஆண்கள் அழக் கூடாது என்று எங்கள் சமூகம் சொல்லிச் சொல்லி வளர்த்திருந்ததாலோ என்னவோ அழவில்லை என்றாலும் கண்கள் சிவந்து குரல் தளுதளுத்திருந்தது. மனப் பெட்டகத்தில் இத்தனை வருடங்களாய் பூட்டி வைத்திருந்தவற்றை அவன் கொட்டி விட்டிருக்க, அவன் கொட்டிய பாரம் அவள் மனதில் ஏறியமர, அவள் கண்களிலிருந்து அருவி ஊற்றெடுக்க ஆரம்பித்தது.

வாழ்க்கையின் அர்த்தம் புரியாத இளம் வயதில் காதல் எனும் மாயையில் சிக்கிய இவர்கள் வாழ்வு சீராகுமா? இல்லை சிக்கலாகுமா?

**அவள் கனவு நனவாகுமா...?**



> **“சின்ன வயசில இருந்து சேர்ந்து விளையாடிக் கூடித் திரிஞ்சிட்டு நான் காதலிச்சது சரியா? தப்பா? என்றெல்லாம் எனக்குத் தெரியாது வைஷு. ஆனால், உன்னட்ட இதைச் சொல்லாமல் விட்டது பெரிய தப்புத்தான். அதுக்காக என்னை மன்னிச்சிடுடி... ப்ளீஸ்... நான் வேணுமென்றே மறைக்கல வைஷு. நீயே யோசிச்சுப் பார்... ஏ.எல்க்குப் பிறகு நானும் நீயும் சரியாகக் கதைக்கவே சந்தர்ப்பம் அமையலயே... அப்புறம் எப்பிடி நான் இதையெல்லாம் உன்னட்டச் சொல்லுறது...? என்னால இந்த நினைவுகளையெல்லாம் மறந்து வேறையொரு பெண்ணை பொண்டாட்டியாக ஏத்துக் கொள்ள முடியும் போலத் தோணேல்ல வைஷு. கடைமைக்குக் கல்யாணம் செய்து இன்னொரு பொண்ணோட வாழ்க்கையைக் கெடுக்கவும் விரும்பலடி. அதுதான் காலம் பூரா இப்பிடியே தனியாக இருந்திடுற பெட்டர் போலப் பட்டுச்சு...”**



சிறுகதை

# பல்லவன் கரை

ஆதவன்

உனக்கு சிங்கப்பூரில் செந்தோசா தீவின் கடற்கரைகள் புதிது இல்லை. ஒன்று சிலோசா மற்றது பல்லவன். இரண்டிலும் கடந்த நான்கு வருடங்களாக வாரக் கடைசி நாட்களை செலவு செய்திருக்கிறாய். பெரும்பாலும் சனிக்கிழமை மாலைப் பொழுதுகளே உனக்குப் பிடித்தமானது. இன்றைக்கும் சனிக்கிழமைதான். ஆனால், இதுவரை இல்லாத தவிப்பு இன்றைக்கு இருக்கிறது. தவிப்பு என்பதை விட வெறுமையை உணர்கிறாய். இந்த வெறுமை தனிமையால் வந்ததாக இருக்கலாம். எல்லா தனிமைகளும் வெறுமையாக இருப்பதில்லைதான். எழுத்தாளனின் அல்லது இலக்கியவாதியின் தனிமை கற்பனைகள் எண்ணங்களால் நிறைந்திருக்கும். அதை நிறைவான தனிமை என்று சொல்லலாம் ஆனால், அதற்கு முன்பாகவே அனுபவத்தை சேமித்திருப்பான். பின்னர், மனதில் அதைச் சுற்றி கிளைகளும் கொடிகளுமாகக் கற்பனைகள் துளிர்விடும். வீரியமாக வளரும்.

உனக்கு நான்கு வருடங்கள் தந்தவைகள் அனுபவமாக இருந்தாலும் நீ எழுத்தாளனோ இலக்கியவாதியோ இல்லைதானே. அப்படியிருந்தால் அனுபவத்தைச் சுற்றிக் கற்பனைகளை படரவிட்டிருப்பாய் என்று சொல்லலாம்.

நீ சாதாரணமானவன். இயல்பானவன். இன்றைக்கு நேரத்தை அடிக்கொரு தடவை பார்ப்பது நேரம் போகவில்லை என்பதாலா? அல்லது எஸ்வி வருவாள் என்ற நம்பிக்கையா? ஆனால், நீ ஒரு பிடிவாதக்காரன் உன்னைத் தேடி அவள் வரட்டும் என்ற பிடிவாதம் அடிமனதில் இன்னும் வைத்திருக்கிறாய். வேண்டாம் என்று முடிவெடுத்த பிறகு தேடி வரட்டும் என்று சற்று இறங்கி வந்திருக்கிறாயா? அப்படிச் சொல்லி நீ தப்ப முடியாது ஏனெனில் அவள் உன்னை வெறுக்கவில்லை. உனது கறைபடிந்த எண்ணம் அதை வெளிப்படுத்திய முறையால் உண்மையில் நீதான் இறங்கி வரவேணும்.

பல்லவன் கடற்கரையோ களை கட்டியிருந்தது வழமையான வாரக் கடைசி போல. இதமான இளங் காற்று ஆரத்தழுவிச் செல்கிறது. மாலைச் சூரியனின் இளம் மஞ்சள் ஒளி கடற்கரை முழுதும் படர்ந்திருந்தது உனக்குப் பழைய நினைவுகளை மீட்ட இலகுவாக இருக்கும். எஸ்வியும் மஞ்சள் கலந்த வெள்ளை வதனம் கொண்ட பிலிப்பைன்ஸ் நங்கை. நீ இந்தியாவில் இருந்து வந்தது முதல் கட்டட நிர்மாணத் துறையில் மேற்பார்வையாளர் பதவியில் கிழமைக்கு ஐந்தரை நாட்கள் வேலை செய்ய வேண்டியிருந்தது. உனது முக நளினம் சுருண்ட தலைமுடி அவளை கவர்ந்தது போலும். முதன் முதல் லக்கி பிளாசாவில் உனது அறை நண்பன் முத்துவை அழைத்துக் கொண்டு போனதும் ஞாபகம் இருக்கலாம். பிலிப்பைன்ஸ் நாட்டில் இருந்து பணிப்பெண்களாகவும் மற்ற வேலைகளுக்கும் வரும் அந்த நாட்டு பெண்கள், ஆண்கள் அனைவருக்கும் லக்கி பிளாசாதான் பிரபல்யமான இடம். வீட்டுக்கு காசு அனுப்புவதைப் பல முகவர்கள் குறைந்த செலவில் செய்வது முக்கியமானது. புதிய நண்பர்களைக் கண்டுபிடிக்க இதைவிட சிறந்த இடம் அவர்களுக்கு இல்லை. வேற்று நாட்டு ஊழியர்கள் பிலிப்பைன்ஸ் பெண்களை நண்பிகளாக ஆக்குவதற்கும் இங்கேதான் வருவார்கள்.

முத்துவின் தூண்டுதலில் போனாய் என்பது உண்மையில்லை. உனக்கு ஒரு ஆறுதல் தேவைப்பட்டது. ஆகவே, அவனைச் சாட்டாக வைத்து இரண்டு வாரவிடுமுறைகளை லக்கி பிளாசாவில் கழித்தனி. அந்த நாள் உனக்கு மறக்காது இருக்கலாம். பல நவநாகரிக நங்கைகளை இரசித்துக் கொண்டு இருந்த போது பக்கத்தில் இருந்து ரோசாவின் நறுமணம் திடீர் என்று வந்தது. அதுவரை இல்லாத புதிய சுகந்தம் நாசியை வருடியது. நீ திரும்பும் போது சற்றுத் தூரத்தில் அந்தப் பெண் முதுகை காட்டிக் கொண்டு நின்றாள். தலைமுடி மண்ணிற சாயம் மெலிதாகப் பூசி தோள் மட்டத்தில் நறுக்கி விடப்பட்டிருந்தது. தலை சற்று குனிந்து கைபேசியில் ஏதோ தேடியதைப் போல இருந்தது. இறுக்கமான வெள்ளை மிடியில் கருமை நிற பூ அலங்காரம், முதல் பார்வையிலேயே உன்னைக் கவர்ந்தது. பக்கவாட்டில் தெரிந்த பாதி முகத்தை நீ இரசித்துக் கொண்டிருந்தாய். ஏதோ ஒரு உணர்வு அவளைத் தட்டி இழுத்திருக்க வேண்டும். வெடுக்கென்று திரும்பினாள். நீ திடுக்கிட்டுப் பார்வையை எங்கோ செலுத்த முயன்று தோற்றதைப் பார்த்து சிரித்தாள். நீ வெட்கப்பட்டு சிரித்ததை அவள் இரசித்துப் பார்த்தாள். அவள் தலையை மறுபக்கம் திருப்ப உன்னால் கட்டுப்படுத்த முடியாமல் மறுபடியும் பார்த்தாய்.

அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும். தானாகவே உன்னை நோக்கி சற்று நெருங்கி வந்தாள். இன்னும் அதிகமாகவே வாசனை உன் நாசியைப் பதம் பார்த்தது. முகத்தில் வெற்றிச் சிரிப்பு படர்ந்து வளரும் நிலையில் "ஹாய் நான் எஸ்வி. நீங்கள் என்னுடன் பேச விரும்புகிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்றாள்.

நீ உன்னை அறிமுகப்படுத்தி பரஸ்பரம் தனிப்பட்ட விபரங்களை பகிர்ந்தும் எஸ்வியை அதிகம் நெருங்கிவிட்டாய். பிறகு பல வார இறுதி நாட்கள் இந்தக் கடற்கரையில் அவளுடன் கழித்த மாலைகள் உனக்கு என்றும் மறவாத நினைவுகள்தானே.

திடீரென்று வேகமாக தென்சீனக் கடற்காற்று முகத்தில் அறைந்தும் நீ நினைவுலகை விட்டு திரும்புகிறாய். தென்சீனக் கடலை ஒட்டித்தான் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஒரு தீவில் எஸ்வி பிறந்தவள். அதனால் உனது துரோகத்திற்குக் கிடைத்த அறையை அதன் மூலம் தந்ததாக நினைப்பது அதீதமான கற்பனை.

நேரம் ஆறரை ஆகிவிட்டது. இரண்டு மணித்தியாலங்களாகக் கடலைப் பார்த்தபடி சலனம் இல்லாமல் இருந்ததால் உனது முகத்தில் மெல்லிய ஈரலிப்பு. உப்புக் காற்றால் அப்படிப் படிந்து கிடக்கிறது. அதைத் துடைத்தெறியும் எண்ணமும் இல்லாமல் இருக்கிறாய்.

எஸ்வி இல்லாமல் இன்று இந்தக் கடற்கரை உன்னை அன்னியமாக்கி விட்டது. நீ அமைதியான ஆர்ப்பாட்டம் இல்லாத அலைகளை இரசிக்கவில்லை. செந்நிற தீப்பந்தம் போல மறையத் துடிக்கும் கதிரவனை இரசிக்கவில்லை. இரணியனின் இரத்தத்தில் தோய்ந்தது போல சிந்திக் கிடக்கும் மேல் வானத்து கீற்று முகில்களையும் இரசிக்கவில்லை. தூரத்தில் தெரியும் கப்பல்கள் குறுக்காகச் சீறிப்பாயும் படகுகள் பெரிய கப்பல்கள் ஊதும் சங்கோலிகள் இவற்றை அவதானிக்காமலேயே இருக்கிறாய்.

இணைந்திருந்துதான் இயற்கையையும் மற்றவற்றையும் இவ்வளவு நாளும் இரசித்திருப்பாய் போலும். கடைசி சனிக்கிழமை இதே இடத்தில் உனக்கு அவள் சொன்னதையும் அதற்காக அவளுடன் வாக்குவாதம் செய்ததும் இந்தக் கிழமை முழுதும் உன்னை தூங்க விடாமல் செய்தது. காதலில் ஊடல் இருக்கும்தான் அதற்காக நீ எஸ்வியின் தொலைபேசி எண்ணை முடக்கி வைத்தது அவளை எவ்வளவு பாதித்திருக்கும். என்ன அப்படி பெரிதாக சொல்லி விட்டாள்? தன்னை திருமணம் செய்யக் கேட்டாள். அதற்கு நீ சொன்னது நாகரிகம் இல்லாத பதில் என்பதில் ஐயம் இல்லை. அதாவது இந்த மாதிரி உறவு திருமணம் வரை தொடர்வது சாத்தியம் இல்லை. நீ அவளுக்குச் செய்யும் செலவுக்குத்தான் உன்னோடு சேர்ந்து பொழுதைக் கழித்து மகிழ்விக்கும் பணியில் இருப்பதாக சண்டையிட்டாய். இது மாதிரி எண்ணங்கள் உன்னைச் சுற்றியுள்ள நண்பர்கள் விதைத்தது. ஆனால், அனுபவம் நண்பர்களை விட சிறந்த பாடத்தைப் புகட்டி விட்டது.

இதுவரை காலம் எஸ்வியின் உறவு என்பது உடலையும் மீறி உள் மனதை விழுங்கி விட்டிருந்ததை உணர்கிறாய். இப்போது மறுபடியும் எஸ்வியின் தொடர்பு எண்ணை முடக்கி விடும் போது பல நூறு அழைப்புகள் வந்து தடைப்பட்டது தெரிகிறது. வாட்ஸ்அப்குறும்தகவல்கள்சில கவலைக் குறிகளுடன் வந்து விழுகிறது. கடைசித் தகவல் "நான் எப்போதும் உனக்காக காத்திருப்பேன் அன்பே" என்று ஒரு சொல்லை அனுப்பு அது போதும். உன்னை வந்தடைய காத்திருக்கும் எஸ்வி. பனித்திருந்த உன் கண்கள் உருகத்தொடங்கியது. ■

# பாத்திமா ரிம்ஸா முஹம்மத் எழுதிய “எரிந்த சிறகுகள்”

இக்பால் அலி

வெலிகம பாத்திமா ரிம்ஸா முஹம்மத் எழுதிய “எரிந்த சிறகுகள்” என்ற நூலை நுகர்ந்து சுவைத்துப் பார்க்கக் கிடைத்தது. பெண்ணினம் அனுபவித்து வரும் சொல்லொண்ணாத் துயரங்களை வெளிப்படுத்தக் கூடிய மிக அருமையான கவிதைத் தொகுதியாகும். ஆணைக் கருவாகச் சுமந்து பெற்றெடுக்கும் பெண்கள் அந்த ஆண்களின் மூலம் பெண்கள் ஈவு இரக்கமில்லாமல் கொடுமைப்படுத்தப்பட்டு வரும் ஈனச் செயலையும் சமூகம் முழுவதும் பரவிக் கிடக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் கவிஞை பாத்திமா ரிம்ஸா முஹம்மத் இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

உளவியல் ரீதியான கருத்துகளையும் பெண்கள் அனுபவிக்கின்ற கொடூரமான சீதனப் பிரச்சினைகளையும் ஆண்களினால் ஏமாற்றப்படுதல், அடக்குமுறைகளையும் அவர்களது ஏக்கங்களையும், நம்பிக்கைகளையும் காதல் உணர்வுகளையும் தமது கவிதைகளின் மூலம் தன்னைப் படைத்து நேசிக்கும் இறைவனிடம் ஒரு முறையீடாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

மனித வாழ்விலிருந்து பெண்களது வாழ்க்கை நிலையில் மாற்றம் ஏற்பட்டு வந்தாலும் சிலவேளை நல்லவர் போல் நடித்து ஏமாற்றும் ஆண்களிடம் சூழ்ச்சி நிறைந்த சதிவலையில் சிக்குண்டு பெண்கள் சிதைந்து சீரழிந்து சின்னா பின்னமாகிப் போய் விடுகிறார்கள். இன்னும் பெண்கள் ஆண்களின் போகப் பொருளாகவும் விளம்பரக் காட்சிப் பொருளாக மட்டுமே பார்க்கப்படுகிறார்கள். இத்தகைய நிலையில் இருந்து பெண்கள் விடுதலையும் சுகமும் பெற வேண்டும் என்பதைப் பாடுபொருளாகக் கொண்ட இக்கவிதைத் தொகுதியிலுள்ள பல சிறப்பான கவிதைகள் அவரது உணர்ச்சிகளின் வெளிப்பாட்டை தரிசிக்கச் செய்கின்றது.

அதேவேளையில் கவிஞையுடைய சில கவிதைகள் சமகாலத்தையும் படம் பிடித்துக் காட்டக் கூடிய கவிதைகளும் அமைந்துள்ளன.

**செழிப்புடன் வாழ்ந்தோர்**
**முகத்திலெல்லாம்**
**பட்டினித் துயர்தான்**
**படர்கிறதே**
**சூழ்ந்தது துன்பம் எமைச்சூற்றி**
**சுகமது உண்டோ வாழ்க்கையிலே?**

“என்ன வாழ்க்கை” என்னும் தலைப்பில் அமைந்த கவிதையாகும்.

மனிதநேயம் என்பது தாம் வாழும் சூழலில் வெறும் கண் துடைப்பாகவே காட்டப்படுகிறது. மனிதர்களுக்கிடையே காருண்யம், அன்பு, பிரியம், சிநேகம் இருத்தல் அவசியமாகும் எனவும் மிருகங்களைப் பலியிடுவது கூடாது எனவும் மேடை போட்டுப் பேசுபவர்கள்தான் மறுபுறத்தில் மனிதநேயத்திற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். குறிப்பாக, மறைமுகமான முறையில் மனிதக் கொலை வெறியாட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். மனிதர்களிடையே பகை உணர்வுகளை ஊட்டுபவர்களாகவும் உள்ளனர். மனிதநேயம் என்பது முக்கியத்துவமானது. ஆனால், அது தற்காலத்தில் மனிதர்களிடையே வீழ்ச்சியின் விளிம்பில் தத்தளிக்கிறது. கொடூரமான சிந்தனைப் போக்குடையவர்களால் திட்டமிட்ட விதத்தில் மனிதநேயம் மனிதச் சமூகத்தில் இருந்து ஓரங்கட்டுதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியுள்ளன. “மனிதநேயம்” என்கின்ற சொல் மிக உயர்வானதும் புனித தன்மைவாய்ந்ததும் ஆகும். மனிதநேயம் ஒவ்வொருவருடைய மனதைவிட்டு காணாமற் போகும் அபாயம் உள்ளது. அப்படி நடக்காமல் பாதுகாத்துக் கொள்வது நமது கடமையே. எனவே நாம் இந்த அவலநிலையில் இருந்து மீண்டெழுதல் மிக அவசியம் என்று கவிஞை ரிம்ஸா முஹம்மத் மனம் பதறிக் கொண்டு அவலக் குரல் எழுப்புகின்றார்.

**மனித நேயம்**
**துளியும் அற்றவர்களெல்லாம்**
**அதைப் பற்றி**
**கதை கதையாகப்**
**பேசுகிறார்கள்.**

இது “ஒப்பனைகள்” என்னும் தலைப்பில் எழுதிய கவிவரிகளாகும். கவிஞை ரிம்ஸா தம் கவிதையின் மூலம் தம் ஆளுமையை எந்தளவுக்கு ஆழமாகப் பதிவு செய்ய முடியுமோ அந்தளவு ஆழத்திற்குப் பதிவு செய்து உயர் நிலையை அடையலாம் என்று சொல்லுமளவுக்கு அவரது கவிதை வரிகளில் யதார்த்தவாதமும் கவித்துவமும் கற்பனை அழகும், உணர்ச்சிச் செறிவும் தனித்துவ முத்திரையும் காணப்படுகின்றன.



**இருளின்**
**போர்வைக்குள்**
**சிக்குப் பட்டுப்**
**போன**
**சூரியனுக்கே**
**விலாசம் வருது.**
**போரின்**
**வடுக்களுக்குள்**
**அகப்பட்டுப் போனவர்களுக்கு**
**எப்போது விலாசம் வரும்.**

கவிஞை ரிம்ஸா “காலத்தின் ஓலம்” தலைப்பில் எழுதிய கவிதை வரிகள் மிகக் கொடிய போர்க்கால யுகத்தை மீளவும் திரும்பிப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றன. போர்க்காலத் தடங்கள் கவிதையில் ஊடாடி நிற்பதைப் பார்க்கின்ற போது நெஞ்சோடு அணைத்துக் கொள்ள முடிகின்றது. வாசித்த உடனே நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகிறது. ஆரம்பத்திற்கு முடிவொன்று இருப்பது போல இருட்டுக்கு வெளிச்சம் இருப்பது போல போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நெஞ்சோடு உள்ள வடுக்களை இல்லாமற் செய்வதற்கு என்னதான் வரப்பிரசாதங்களையோ அவர்களுக்கு அள்ளி அள்ளிக் கொட்டினாலும் அவை ஒரு போதும் மறக்க முடியாத வடுக்களே!




கையில் சூரியனைவிடப் பெறுமதியான செல்வத்தைக் கொண்டு வந்து கொடுத்தாலும் போரினால் காயப்பட்ட மக்கள் எந்தவொரு வரப்பிரசாதத்தையும் பெற்றுக் கொள்ளத் தயாரில்லை. தனக்கே உரிய பாணியில் திரும்பத் திரும்ப வாசித்து நினைவில் மறக்காமல் வைத்திருக்கின்ற கவிவரிகளைத் தந்துள்ளார் கவிஞை ரிம்ஸா.

**பச்சையணி தேயிலை**
**மலையில்**
**இச்சையோடு**
**துரையிருப்பான்**
**கொழுந்தை**
**பெண்கள் பறித்தாலும்**
**கொடும் பேச்சால்**
**துளைத்திடுவான்.**

“முகவரி தேடும் மலையகம்” என்னும் தலைப்பில் எழுதிய மிக அருமையான கவிதையாகும்.

மலையகப் பெண்கள் தம் உடலின் வியர்வைத் துளியை உதிரமாக நீர்பாய்ச்சி தேயிலை கொழுந்துகளைப் பறிப்பவர்கள். சிலவேளைகளில் துரைமார்களுடைய பார்வையில் போகப் பொருளாகப் பார்க்கப்படுபவள். அவள் உடல் அட்டை கடிக்கும் கடுமையான வேலைப்பணிக்கும் கடுமையான வெயிலுக்கும் கடுமையான குளிருக்கும் உள்ளாகித் தம் உடல் அமைப்பிலும் வேறுபடுத்திக் காட்டக் கூடியவர்கள். கங்காணிமார் அல்லது துரைமார்களுடைய சினச்சொற்கள் தினசரி காதுகளில் உள்வாங்கப்பட்டு அவ்விசக் கருத்துகள் எவ்வளவுதான் மனதில் தைத்துக் கொண்டிருந்தாலும் சரி தம் உடலில் எவ்வளவுதான் அதிர்வுகளை ஏற்படுத்தினாலும் சரி அதற்கு மாறாக அவர்கள் அந்த வலிகளை உதிர்த்து விட்டு மனம் நொந்து வெந்து பழக்கப்பட்ட மலையகப் பெண்கள்தான் இந்நாட்டுக்கு தேயிலையின் மூலம் அந்நியச் செலாவணியை அதிகம் பெற்றுத் தருபவர்கள். இப்பெண்கள்தான் இந்நாட்டின் விலையும் மதிப்பும் அழகும் மிக்கவர்கள் என்பதன் காட்சிகளைத் தம் கவிதைகளில் கவிஞை மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

ஆக, இக்கவிதைத் தொகுதி பெண்களது சமூக முன்னேற்றத்துக்கும் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமனாகப் பயணம் செய்ய வேண்டும் என்று துடிக்கும் இளம் சந்ததியினர்களுக்கு இந்தக் கவிதைத் தொகுதியில் நல்ல பாடுபொருள்கள் உள்ளன.

கலாநிதி துரை மனோகரன் எழுதிய முன்னுரையில் “ இக்கவிதைத் தொகுதியில் 54 கவிதைகளும் 7 மெல்லிசைப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இவை பல்வேறு விடயங்கள் பற்றிப் பேசுகின்றன. ஆன்மிகம், சமுதாய விமர்சனம், நாட்டு நிலைமை, காதல் உணர்வுகள், தனிமனித உணர்வுகள், தனிமனித மேம்பாடு, பெண்ணியம், தொழிலாளர் நிலைமை, ஏழ்மை, அறிவுரை முதலான பல விடயங்கள் ரம்ஸாவின் கவிதைகள் தொட்டு நிற்கின்றன.” என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் பற்றி கவிமணி என் நஜ்முல் ஹஸைன் குறிப்பிடுகையில் “வாசிப்போர் இலகுவில் புரிந்து கொள்ளும் வகையில் கவிதை படைப்போர் தமது முயற்சிகளிலே வெற்றி காணுகின்றனர். தமக்கும் புரியாது வாசிப்போரையும் குழப்பம் கவிதை நூல்கள் வாசகர்களால் புறந்தள்ளப்படுகின்றன. அதேவேளையில் மிகவும் இலகுவான சொற்களினால் தனது கவிதைகளை ஆக்கியுள்ளார் என்று கவிதாயினி ரிம்ஸா முஹம்மத் என்று தமது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்த்துரையினைத் தேசிய கல்வி நிறுவகத்தின் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முதன்மை ஆசிரியரும் கண்டி கல்வி வலய ஆசிரியர் ஆலோசகருமான திருமதி ரதி.தேவசுந்தரம் வழங்கியுள்ளார். இக்கவிஞை பணி தொடர வாழ்த்துகள்.

■

# இலங்கையில் வெவ்வேறு காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வறுமைத்தணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றியளித்துள்ளதா?

சி.குகதாசன்
அரசறிவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்




இலங்கையில் வறுமையைக் குறைப்பதனைக் குறிக்கோளாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்டு நோக்கும் போது இவை குறிப்பாக கிராமிய விவசாயத் துறையினையும் கைத்தொழில் துறையினையும் மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. இவ் நிகழ்ச்சித்திட்டங்களின் உள்நோக்கு சமூக அபிவிருத்தியே தவிர நாட்டின் பொருளாதாரத் துறையினை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்டு காணப்படவில்லை. இதனடிப்படையில் நோக்கும் போது இலங்கை பொருளாதார அபிவிருத்தியை விடவும் சமூக அபிவிருத்தியே அதிகமாகக் கவனத்தில் எடுக்கின்றது. ஆகவே, இவ்வகையில் ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் வறுமையினை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்காகப் பின்வரும் தணிப்புத்திட்டங்களை முன்வைத்தனர்.

1948 : உணவுமானியத் திட்டம்
1927 : உணவுமுத்திரைத் திட்டம்
ஜனசவிய நிகழ்ச்சித்திட்டம்
1994 : சமுர்த்தித் திட்டம்
2011 : நிவிநெகும

இத்திட்டங்களின் பலம் மற்றும் பலவீனம் ஆகியவற்றை ஆராய்வோமாயின் முதலில் பலம் தொடர்பில் நோக்குகையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் குறிப்பாக, ஜனசவிய திட்டங்களால் வறிய மக்களின் தொழில் திறனை மேம்படுத்தல், வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், வருமானத்தை அதிகரிக்கச் செய்தல். சேமிப்பினை ஊக்கப்படுத்தல் என்கிறதான நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு ஜனசவியத் திட்டம் செயற்படுத்தப்பட்டமை இத்திட்டத்தின் ஒரு பலமாகக் காணப்படுகின்றது. அடுத்து, சமுர்த்தித் திட்டம் தொடர்பில் நோக்குகையில் சுயதொழில் ஊக்குவிப்பு வருமான மார்க்கங்களை உருவாக்குதல், பெண்கள் மற்றும் இளைஞர்களை அபிவிருத்தி செயற்பாடுகளில் இணைத்தல், அவர்களின் தீர்மானம் எடுக்கும் திறனை விருத்தி செய்தல், கூட்டாகத் தொழிலில் ஈடுபடுவதன் மூலம் வருமானத்தை அதிகரித்தல், மக்களிற்கான கடன்வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற வழிகளில் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதாக காணப்படுதல் இதன் சிறப்பம்சமாகும்.

நிவிநெகுமத் திட்டம் 2011 கொண்டு வருகையில் வாழ்வின் எழுச்சித்திட்டமான நிவிநெகுமத் திட்டத்தின் மூலமாக மரக்கன்றுகள், பழக்கன்றுகள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள், மருத்துவ தாவரங்கள் மற்றும் மாதிரி வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தல், அத்துடன் கால்நடை அபிவிருத்தி மீன்பிடி வீட்டுத்தோட்டம் என மூன்று கட்டங்களாகப் பிரித்து இத்திட்டத்தின் செயற்பாடு அமைந்ததுடன் வறுமைத் தணிப்பிற்கு இவை ஓரளவு துணை புரிந்துள்ளது எனக் குறிப்பிடலாம்.

வறுமை ஒழிப்பதற்கான திட்டங்களும் தீர்வு முன்மொழிவுகளும் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்டாலும் வறுமைத் தணிப்பென்பது முற்றாக இடம் பெறவில்லை என்று குறிப்பிடலாம்.

இலக்குகள் அடையப்படாமையும் வினைத்திறன் அற்ற தன்மையும் காணப்படல்.

ஜனசவிய, சமுர்த்தித் திட்டங்கள் போன்றன வறியவர்களை இலக்காகக் கொண்டு தொழில் திறனை மேம்படுத்தல், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சேமிப்பினை வளர்த்தல் ஆகிய விடயங்களை இலக்காகக் கொண்டிருந்தாலும் ஏழைகள் மிகச்சரியாக அடையாளம் காணப்படாது பணக்காரர்களும் அத்திட்டங்களிற்குள் உள்வாங்கப்பட்டமை இத்திட்டத்தின் மிக முக்கியமான பலவீனமாகும்.

சுயதொழில் வாய்ப்பினை அறிமுகப்படுத்தல், வருமான மார்க்கங்களை உருவாக்குதல் பெண்கள் மற்றும் இளையவர்களை வலுவூட்டல் செயற்பாடுகள் போன்றவற்றில் போதிய திட்டமிடல் பங்கேற்பு இன்மை காரணமாக இத்திட்டம் தோல்வியடைந்து காணப்படுகின்றது.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள் தமது அதிகாரத்தினைப் பயன்படுத்தி வறுமைத் தணிப்புத் திட்டங்களை மிகச் சிறப்பாக மக்களிற்கு வழங்காமல் சில இடங்களில் தமக்குச் சார்பானவர்களிற்கு வழங்குகின்ற நிலை காணப்படுகின்றது. இத்திட்டங்களில் காணப்படுகின்ற அரசியல் மயமாக்கலின் காரணமாக அரசியல் தலைமைப் பதவிகளில் உள்ள ஒருவர் தாம் சார்ந்த பகுதிகளை விருத்தி செய்வதில் கவனம் செலுத்துகின்றனர். ஏனைய பகுதியினர் இவ்வறுமை ஒழிப்புத் திட்டங்கள் கிடைக்கப் பொறமையால் பாதிக்கப்படுகின்றனர். வறுமை ஒழிப்புத் திட்டம் காலத்திற்குக் காலம் அறிமுகம் செய்யப்பட்டாலும் தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான எவ்வித உறுதிப்பாட்டுத் தன்மையும் காணப்படவில்லை காலத்திற்குக் காலம் அறிமுகம் செய்யப்பட்ட அனைத்து வறுமை ஒழிப்புச் செயற்றிட்டங்களும் அரசாங்கத்தின் சுயநலத்திற்காக மேற்கொள்ளப்பட்டவையே தவிர பொதுமக்களின் நலன்களினைக் கருத்திற் கொள்ளப்படவில்லை




தற்போதைய அரசாங்கமானது வறுமையை ஒழிப்பதற்காகக் குறைந்த வருமானமுடையவர்களுக்குத் தொழில் வழங்கும் திட்டம் இலங்கையில் செப்ரெம்பர் 2 ஆம் திகதி தொடங்கியது அரசாங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பல்துறை அபிவிருத்தி செயலணி மூலமாகக் குறைந்த வருமானமுடைய மற்றும் தேர்ச்சி பெறாதவர்களை பொருளாதார ரீதியாகப் பலப்படுத்துவதே இந்நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகக் காணப்பட்டது. இன்று உலகம் முழுவதிலும் வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்குமிடையிலான இடைவெளியானது அதிகரித்துச் செல்கின்ற 80% மான சொத்துக்கள் உலகில் 20%மான செல்வந்தர்களிடமே காணப்படுகின்றது. உலக வங்கியின் கருத்துப்படி இலங்கைத்தீவில் தீவிர வறுமையை அனுபவிப்பவர்கள் 0.73%எனக் கூறுகின்றது. இதனடிப்படையில் நிலையான அபிவிருத்திக்கான இலக்குகளில் ஒன்றாக வறுமையினை 2030 ஆம் ஆண்டில் 0% என்ற அளவுக்குக் குறைக்க இலக்கு வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தென்னாசிய நாடுகளில் மிகக் குறைந்த வறிய மக்களை (4.1%) கொண்ட நாடாக இலங்கை இருப்பதுடன் நேபாளத்தில் (25.2%) பங்களாதேஷில் (24.3%), இந்தியாவில் (21.9) என வறுமை உயர்ந்த நிலையில் இருப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கித் தரவுகள் கூறுகின்றன.

இவ்வாறு இலங்கையில் வறுமையைத் தணிப்பதற்காக அரசு முன்னெடுத்த உணவு மானிய முத்திரைத் திட்டம், உரமானியத் திட்டம், ஜனசக்தி உதவித் திட்டம், சமுர்த்தி நிவிநெகும கம்பரேலிய என்ர பிறைசஸ் ஸ்ரீலங்கா போன்ற குறுங்கால மற்றும் மகாவலி கல்லோயா போன்ற நீண்டகால பலநோக்கு அபிவிருத்தித் திட்டங்கள் எனப்பல காரணங்கள் தென்னாசியாவுடன் ஒப்பிடுகின்ற போது வறுமையைத் தணித்துள்ளன.

■

# சினிமாப் பாடல்களும் சிறு தவறுகளும்

தமிழ் சாலினி

பாடல்கள் இசையின் ஊடாகப் புத்துணர்வை உண்டாக்குகின்றன. சங்கப்பாடல்களின் இறுக்கம் பல்லவர் காலத்திலே தளர்ந்தது. இனிய சந்தங்களோடு பக்தியிசை பெருக்கெடுத்தது. இன்னொரு பக்கத்தில் பாமர மக்களும் தாலாட்டுப் பாடல், மருத்துவிச்சிப் பாடல், காதற்பாடல் என இசையால் அனைவரையும் இழுத்தனர். செவ்வியல் இசையின் தொடர்ச்சியாகவே சினிமாப்பாடல்கள் தோன்றின. திரையிசைப் பாடல்கள் படித்தவர்கள் முதல் பாமர மக்கள் வரையும் அனைவரையும் கவர்ந்தன. எனினும் உயர் தரத்தைக் கட்டிக்காக்கத் தவறியதால் இலக்கியத்திற்கு சமனாகும் தகுதியை இழந்தன. பாடலாசிரியர்கள் இன்றுவரை கவிஞர்கள் என்றே தம்மை அடையாளப்படுத்தி வருகின்றனர். இத்தகைய சூழலில் எழுதப்படுகின்ற சினிமாப் பாடல்களில் சில தவறுகளையும் காண முடிகின்றது.

"ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே" என்ற பாடலில் 'ஒவ்வொரு' என்ற ஒருமைச் சொல்லினை அடுத்து 'பூக்கள்' என்னும் பன்மைச் சொல் இடம் பெறுகின்றது. அதே போல " பூவும் காற்றும் சேரும் போது" என்ற பாடலானது குங்குமப் பொட்டுக் கவுண்டர் திரைப்படத்தில் உள்ளது. அந்தப் பாடலில்

**"நினைத்தது நடக்கிறது என்**
**நெஞ்சம் இனிக்கிறது**
**ஆனந்த மழையினிலே என்**
**கண்கள்  நனைகிறது"**

என்ற வரிகள் இடம் பெறுகின்றன. கண்கள் பன்மைச் சொல்லாகையால் நனைகிறது என்று முடிவது தவறானது. நனைகின்றன எனப் பன்மையிலே தான் அமைய வேண்டும். ஓசை அமைப்பினைக் கருத்திற் கொண்டு ஒருமைச் சொல்லினைக் கையாண்டாலும் தவறானதே! "வில்லு" என்ற திரைப்படத்திலே "வாடா மாப்பிள்ளை வாழைப் பழத் தோப்புல" என்ற பாடல் காணப்படுகின்றது. வாழைப்பழத் தோப்பு என்பது பிழையான வடிவமாகும். வாழைத் தோப்பு என அமைவதே தமிழுக்கான மரபு ஆகும்.




"ஏழாம் அறிவு" திரைப் படத்திலே வரும் "இன்னும் என்ன தோழா எத்தனையோ நாளா" பாடலில் கூடச் சிறு தவறுள்ளது.

**"கழுத்தோடு**
**ஒரு ஆயுதத்தை**
**தினம் களங்களில் சுமக்கிறோம்**
**எழுத்தோடும் ஒரு ஆயுதத்தை**
**எங்கள் மொழியினில் சுவைக்கிறோம்"**

ஆயுதம், ஆய்தம் என்ற இரண்டு சொற்களையும் ஒன்றெனப்பாடலாசிரியர் குறிப்பிடுகின்றார். ஆயுதம் என்பது போர்க் கருவியாகும். ஆய்தம் என்பதே ஆய்த எழுத் தினைக் குறிக்கும். இரண்டையும் ஒன்றெனக் கருதிய மயக்கத்தினாலேயே தவறு நிகழ்ந்துள்ளது.

"உசுரே போகுதே உசுரே போகுதே" என்ற பாடல் ராவணன் திரைப்படத்தில் இடம் பெற் றுள்ளது. "சின்னத் தீக்குச்சி உசரம் சிறுசுதான்" என்று அந்தப் பாடலில் ஒரு வரியினைக் காணலாம். சின்னத் தீக்குச்சி என்று கூறிவிட்டுத் திரும்பவும் சிறுசுதான் எனக் குறிப்பிடுகின்றார். சின்ன என்பது சிறுசு என்ற பொருளை முன்னரே தந்துவிட்டது. மீண்டும் கூறியது கூறல் தவறானதாகும். "வெற்றிக் கொடி கட்டு" என்ற சினிமாவில் இடம்பெறும் "கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு" பாடலானது பலரின் மனதைக் கவர்ந்ததாகும். இப் பாடலில் "பூக்கடையில் தேடினேன். பூவிலில்லைக் கறுப்புதான்" என்னும் வரி இடம் பெறுகின்றது. ஆனால், ரோஜாப் பூ உட்படப் சில பூக்கள் கறுப்பு நிறத்தில் உள்ளன.



"டைட்டானிக் காதல் போல என் காதல் மூழ்காதப்பா" என்ற பாடலானது 'ஆனந்தப் பூங்காற்றே' என்ற படத்திலே வருகின்றது. உண்மையில் டைட்டானிக் படத்திலே மூழ்கியது கப்பல்தான். அந்தக் காதல் காலம் கடந்தும் வாழ்கிறது.

ஆனால் பாடலாசிரியரோ காதல் மூழ்கியதாகத் தவறாக உவமிக்கின்றார். அமர்க் களம் திரைப்படத்திலே இடம்பெறும் "சத்தம் இல்லாத தனிமை கேட்டேன் யுத்தம் இல்லாத உலகம் கேட்டேன்" என்ற பாடலில் நயக்கத்தக்க பல வரிகள் உள்ளன. எனினும் யுத்தம்  இல்லாத உலகைக் கேட்ட பாடலாசிரியர் ஒரு கட்டத்திலே அதனை மறந்து விடுகின்றார். "ராஜராஜனின் வாளைக் கேட்டேன்", "பார்த்தீபன் தொடுத்த வில்லைக் கேட்டேன்" என்ற வரிகள் பின் தொடர்கின்றன. யுத்தத்தை வெறுப்பவன் போர்க் கருவிகளை விரும்பமாட்டான். பலரது குருதியைக் குடித்துப் பேரரசை நிறுவிய ராஜராஜனின் வாளைக் கேட்பவன், ஒருபோதும் யுத்தம் இல்லாத உலகினை விரும்பமாட்டான். இத்தகைய வரிகள் பாடலின் கருவினைச் சிதைத்து விடுகின்றன. இதே போன்ற தர்க்கரீதியான முரணை காதல் தேசம் பாடலிலும் காணமுடியும். என்னைக் காணவில்லையே நேற்றோடு என்ற பாடலில்



**"மெய்யாக நீ**
**என்னை விரும்பாத**
**போதும்**
**பொய்**
**ஒன்று சொல்**
**கண்ணே என்**
**ஜீவன் வாழும்**
**நிஜம்**
**உந்த காதல்**
**என்றால்"**

என்னும் வரிகள் இடம் பெறுகின்றன. முதலிருவரிகளும் இரசனைக்கு உரியனவாகவே உள்ளன. எனினும் மூன்றாவது வரி தர்க்கமுரணாகவே அமைகின்றது. மெய்யாக விரும்பாதபோது காதல் நிஜமாக இருக்க முடியாது. முதல்வரியும் மூன்றாவது வரியும் தர்க்கரீதியாக முரண்பாடென்பதை இலகுவில் உணரமுடிகிறது. "யூத்" படத்தில் இடம்பெறும் சர்க்கரை நிலவே பெண் நிலவே பாடலில் நாயகன், இருவருக்கும் பிடித்த விடயங்களைப் பட்டியலிடுகின்றான். நவம்பர் மாத மழை, மொட்டை மாடி நிலவு, சுசீலாவின் குரல், கண்கள் மூடிய புத்தர்சிலைக் கனவு என்பன இருவருக்கும் பிடித்தனவாக அமைகின்றன.

"அடி உனக்கும் உனக்கும் எல்லாம் பிடிக்கும் என்னை ஏன் பிடிக்காதென்றாய்?" என்ற வினா தர்க்க முரணாகவே உள்ளது.

திரைபடங்களை வெற்றியடைச் செய்வதில் பாடல்களுக்குக் கணிசமான பங்குண்டு. தமிழர்களின் வாழ்வோடு சினிமாப் பாடல்கள் பின்னிப் பிணைந்துள்ளன. குழந்தைகள் தொடங்கிப் பெரியவர்கள் வரை சினிமாப் பாடல்களை முணுமுணுப்பதுண்டு. எனவே இத்தகைய பாடல்களைத் தவறின்றி எழுதினால் மேலும் சிறப்பாக அமையும் என்று எண்ணுகிறேன். ■





பைஷல் இஸ்மாயில்

## தாதிய உத்தியோகத்தர்களுக்கு நியமனக்  கடிதம் வழங்கி வைப்பு!

மத்திய சுகாதார அமைச்சினால் புதிதாக நியமனம் வழங்கப்பட்ட 148 தாதிய உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த வியாழக்கிழமை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சில் வழங்கப்பட்டது. மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திவாகார சர்மா, நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீவானி, சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி எஸ்.விஜயகுமார் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# "சுடரொளி" பரவிச் சென்ற ஐ.தி.சம்பந்தன் எனும் பெருமகன்

என்.செல்வராஜா
நூலகவியலாளர், லண்டன்



ஈழத்தமிழர்களின் வாழ்வில் வரலாற்று நாயகர்களாக அறியப்பெற்ற பல கதாபாத்திரங்களைப் பற்றி அன்றாடம் பேசியும் கேட்டும் வருகின்றோம். ஆனால், இந்த வரலாற்று நாயகர்கள் சமூகத்தில் உருவாகுவதற்கான தளமிட்டு, உரமிட்டு, நீரூற்றி வளர்த்த தமிழ்ப் பெருமக்களை நாம் கண்டுகொள்ளாமல் இலகுவில் மறந்துவிடுகின்றோம். இதற்கான காரணம் ஒன்றுண்டு. நிழலாகவே வாழ்ந்த இப்பெருமக்கள் ஆற்றிவந்த கடினமான பணிகளை, வெளி உலகிற்குத் தெரியப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளில் அவையடக்கம் கருதி அவர்கள் ஈடுபடுவதில்லை. வேராக வாழ்ந்து விருட்சங்களை வளர்த்துவிட்டவர்கள். இத்தகையவர்களுள் ஒருவரே அமரர் ஐ.தி.சம்பந்தன் (26.06.1935- 03.04.2022)

ஈழத்தமிழர்களின் சமூக, அரசியல், தொழிற்சங்க வரலாற்றுச் சுவடுகளைத் தேடிச் செல்லும் ஒரு ஆய்வாளனின் பார்வையில் ஐ.தி.சம்பந்தன் என்ற பெயர் இடைக்கிடையே சிக்கிக்கொள்ளும். தமிழரசுக் கட்சியின் அரசியல் களமாகட்டும், இனக் கலவரம் தொடர்பான சன்சோனி கமிஷன் மற்றும் இனப் பிரச்சினை தொடர்பான பல்வேறு ஆணைக் குழுக்களின் அறிக்கைகளாகட்டும், எரிந்துபோன யாழ்ப்பாணப் பொது நூலகத்தை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் தொடக்கப்பட்ட கொடித்தினப் பணிகளாகட்டும், ஆறுமுகநாவலர் நினைவெழுச்சிப் பணிகளாகட்டும், ஆங்காங்கே திரு ஐ.தி.சம்பந்தனின் பெயர் எங்கோ ஒரு கட்டத்தில் எட்டிப் பார்க்கவே செய்யும்.

தன்னை முன்னிலைப்படுத்தியே சமூகவாழ்வைச் சிந்திக்கும் எமது தலைமைத்துவக் கலாசாரத்தில் இருந்து வழுவி, தமிழ் மக்களின் மத்தியில் வேராக மறைந்து நின்று பெருவிருட்சங்களையெல்லாம் வளர்த்துவிட்ட பெருமை மிக்கவர் ஐ.தி.சம்பந்தன். தன்னைத் தானே இனங்கண்டு முன்னிலைப்படுத்தத் தவறியவரென்பதால் தமிழறிஞர்களில் பலரும் இவரைக் கண்டுகொள்ளவில்லை என்பதென்னவோ கசப்பானதொரு உண்மையாகும்.

இவர் சுயநலம் கருதாது, பொதுநலத்தை மட்டுமே முன்னிலைப்படுத்தியதால் எழும் இவரது ஆதங்கங்களையும் பலர் ஆழமாகப் புரிந்துகொள்வதில்லை. இவரது உடல் உழைப்பைப் பெற்று தமது செயற்றிட்டங்களை ஒப்பேற்றி தமது பெயரைப் பொறித்துக்கொண்ட பலர் அதில் திரு சம்பந்தனுக்குச் சிறு வரியொதுக்கி நன்றிதெரிவிப்பதை வைத்தே இவரது விரிந்த தொடர்பினையும் பங்களிப்பினையும் நாங்கள் வரிகளுக்கிடையேயான செய்திகளாக மாத்திரம் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

அமரர் சம்பந்தனின் வெளியீட்டுப் பின்புலம் பற்றி இங்கு சற்றே எடுத்துக்கூற விரும்புகின்றேன். "தமிழ் தந்த தாதாக்கள்" என்ற தலைப்பில் தமிழறிஞர் க.சி.குலரத்தினம் அவர்களது நூலொன்றை சம்பந்தன் யாழ்ப்பாணத்திலிருந்தபோது, தனது சுடரொளி வெளியீட்டுக்கழக வெளியீடாக 1987 இல் வெளியிட்டிருந்தார். ஈழநாடு வாரமலரில் வெளிவந்த க.சி.குலரத்தினத்தின் கட்டுரைகள் இவை. எவ்வெப் புலவர்கள் எந்தெந்தத் துறைகளில் எத்தகைய காலங்களில் எவ்வாறெல்லாம் தமிழ்த்தாயை அணி செய்தார்கள் என்பதை இலகு நடையில் இலக்கியச் சுவையுடன் அன்று க.சி.கு. இக்கட்டுரைகளின் வழியாகத் தந்திருந்தார். இலைமறைகாயாக வாழ்ந்திருந்த அப்பெரியாரை தமிழ் உலகில் நீண்டகாலம் வாழவைக்க திரு சம்பந்தன் மேற்கொண்ட கன்னி முயற்சி இது.

அதனைத் தொடர்ந்து தனது பதிப்பகத்தின் வாயிலாக க.சி.குலரத்தினத்தின் மற்றொரு நூலான "செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்" என்ற நூலின் முதலாம் பாகத்தை 1989 இல் வெளியிட்டுவைத்தார். தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலமாகத் திகழ்கின்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழநாட்டுப் புலவர்களின் ஆக்கங்களில் காணப்படும் சிறப்புக்களைத் தமக்கேயுரிய முறையில் க.சி.குலரத்தினம் இந்நூலில் தந்திருந்தார்.

சம்பந்தன் லண்டனில் வாழத் தொடங்கிய பின்னர் இந்நூலின் மீள்பதிப்பை 2005 இல் செம்மைப்படுத்தி வெளியிட்டிருந்தார். புலமையா ஆழம் பொருந்திய ஈழத்துத் தமிழ்ப்புலவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியன. இத்தகைய சிறப்புமிக்க ஈழத்தவர்கள் பதினெண்மரின் பணிகள்பற்றி, எம்மவரால் மறக்கப்பட்ட அவர்களின் வாழ்வுபற்றி தேடித்தொகுத்த தகவல்கள் இந்நூலில் கோர்க்கப்பட்டிருந்தன. லண்டன் வாழ் தமிழர்கள் இப்பெரியார்களை அறிந்து வைத்திருக்கவேண்டும் என்ற உயரிய நோக்கமே சம்பந்தன் மீள்பதிப்பாக இந்நூலைத் தன் சொந்தச் செலவில் லண்டனில் வெளியிட வைத்திருக்கின்றது.

"தமிழ் அகதிகளின் சோக வரலாறு" என்ற நூலை ஐ.தி.சம்பந்தனின் லண்டனிலுள்ள தனது சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினூடாக ஜூன் 1996 இல் வெளியிட்டிருந்தார். இலங்கையில் இடம்பெற்ற 1983 ஜூலை இனக்கலவரச் சம்பவங்களின் போது பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட வாக்கு மூலங்களின் தொகுப்பாக இந்நூல் உருவாக்கப்பட்டிருந்தது. தனது ஆவணச் சேர்க்கையில் தூசுதட்டியிருந்ததொரு வரலாற்றுப் பொக்கிஷத்தை இவர் 1996இல் உலகிற்கு வழங்கிப் பெருமை பெற்றார்.

ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றில் புதிய பாதையைக் காட்டி வழிநடத்தி மறைந்த தலைவர் சா.ஜே.வே.செல்வநாயகத்தின் வாழ்வும் பணியும் பற்றிய பல்வேறு அரசியல் ஆர்வலர்களின் மலரும் நினைவுகளைத் தொகுத்து "ஒப்பற்ற தலைவர் தந்தை செல்வா" என்ற தலைப்பில் ஒரு நூலை, ஜேர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் வெ.செ.குணரத்தினத்தின் உதவியுடன் 2004 இல் வெளியிட்டிருந்தார். இத்தொகுப்பினை பல்வேறு அரிய ஆவணப் படங்களுடனும், இலங்கைப் பாராளுமன்றத்திலும், அரசியல் கூட்டங்களிலும் தந்தை செல்வா ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரைகளுடனும் திரு.சம்பந்தனின் அன்று வெளியிட்டிருந்தார்.

"புதுயுகத் தமிழர்" என்ற தலைப்பில் உலகத் தமிழர்களிடையே கவிதைப் போட்டி ஒன்றை மில்லெனியம் ஆண்டையொட்டி நடத்தியதுடன் அதற்காகப் பெறப்பட்ட கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாக "புது யுகத் தமிழர்" என்ற நூலை திரு. பொன் பாலசுந்தரத்தின் துணையுடன் 2005 இல் வெளியிட்டு மகிழ்ந்தார்.

தமிழ் அரசியல்வாதி தி.மகேஸ்வரனின் அரசியல் சமூக வாழ்வை வரலாற்றுப்பதிவாக்கும் முயற்சியில், தான் முன்னர் பிரத்தியேக செயலாளராகச் சிலகாலம் அவருடன் பணியாற்றிய நினைவுகளை அடியொற்றி ஒரு ஆவண நூலாக "மகேஸ்வரன்-அரசியல்வாழ்வும் தமிழர் பிரச்சினையும்" என்ற பெயரில் வெளியிட்டு அமரர் மகேஸ்வரனின் அறியப்படாத சில பக்கங்களை 2008 இல் ஆவணமாக்கித் தன் செஞ்சோற்றுக்கடனைத் தீர்த்துக் கொண்டார். பிரத்தியேக செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் அமரர் மகேஸ்வரனின் நிழலாக விருந்து தனது பிறந்த மண்ணான காரைநகருக்கு சம்பந்தன் ஆற்றிய பல சேவைகள் பற்றி எவருமே கதைப்பதில்லை. எதிர்காலத்தில் இவரது பணிகள் தனியொரு ஆவணமாக்காதவரை அது பரந்து விரிந்த ஈழத்தமிழ்உலகைச் சென்றடைவதற்கு வாய்ப்பேயில்லை. அதற்கொரு வழிகாண்போம். ■

# அன்பு செய்தல் பாவம்!



என் மனதின் தேவைகளை அவர்கள்
ஒருபோதும் அறிந்திருக்கவில்லை-
ஆர்ப்பரித்து நிற்கும் கடலை - சிறு
அணைகட்டி அடக்க நினைக்கிறார்கள்
அன்பு ஏன் அத்தியாவசியம் என்பதை
எவ்வாறு அவர்களுக்கு
எடுத்துரைப்பேன்???
அணைப்பதும் அரட்டையடிப்பதும்
அபத்தம் என்று சொல்கிறார்கள்
அதையும் மீறி அன்பு செய்தால்...
அருவருப்பாய் பார்க்கிறார்கள்
ஆழமாய் ஒன்றின் மேல்
அன்பு செய்ய விழையும் வேளை
அன்பின் அர்த்தம் விளங்கிடாத
அதுவோ அத்துமீறிட நினைக்கிறது
அன்பு செய்தல் பாவம்!!!
மீண்டும் மீண்டும் சொல்கிறார்கள்
மீறிச் செய்தல் அசிங்கம்!!!
மீளவே முடியாது என்கிறார்கள்
அன்பு என்று பொய்மை புனைந்து -
என்னை அடக்க நினைத்த
அன்பர்களை நான்
கடந்து வந்த கணங்களை - இன்று
கற்பனை செய்து பார்க்கும் வேளை
ஆர்ப்பரிக்கும் என்மனமும் கூட-
நல்ல பாடம் கற்றுக் கொள்கிறது
அன்பு செய்தல் பாவம்!!!

**சரண்யா**

# பௌத்த தேசியத்தைக் காப்பாற்ற மற்றுமொரு...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை முற்றாக ஒழிக்க வேண்டுமென ஜே.வி.பி விரும்பினாலும் ரணில், சஜித் ஆகியோருடைய அரசியல் பின்னணியைக் கடந்து அவர்களால் எதுவுமே செய்ய முடியாத நிலை. ஜே.வி.பியால் அரசியல் கோஷங்களை மாத்திரமே பலமாக எழுப்ப முடியும்.

ஆகவே, பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுக்கு எதிராக மக்கள் நடத்தும் போராட்டங்களைப் பயன்படுத்தி பிரதான சிங்கள அரசியல் கட்சிகளின் அதிகாரங்களைப் பரிமாறும் சதுரங்க விளையாட்டாக மாறியுள்ளதே தவிர, மக்களின் பட்டினியைப் போக்குவதற்கானதாக இல்லை என்பது பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பு நிரூபித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்த்து ரணில்- மைத்திரி அரசாங்கம் பதவியேற்ற பின்னரும், இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றிய பேச்சுக்களை விட, ஜெனீவா மனித உரிமைச் சபையில் இருந்து இலங்கையை எப்படிக் காப்பாற்றுவது என்பதிலேயே கவனம் செலுத்தப்பட்டது.

19 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்ப்படுத்தி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதைத் தவிர மைத்திரி- ரணில் அரசாங்கம் எதனையுமே செய்யவில்லை. மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்த்தால் மாத்திரமே இனப்பிரச்சினைக்கு தீர்வை ஏற்படுத்தலாமென பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அப்போது கூறியிருந்தது.

கொழும்பில் இருந்த வெளிநாட்டுத் தூதரகங்களும் அவ்வாறுதான் பொதுமக்களுக்கு குறிப்பாகத் தமிழ் மக்களுக்குக் கூறியிருந்தன. இதனை நம்பி 2015 ஆம் ஆண்டு தை மாதம் எட்டாம் திகதி நடைபெற்ற தேர்தலில் வடக்குக் கிழக்குத் தமிழர்கள், அப்போது ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தனர்.

ஆனால், வெற்றிபெற்று ஆட்சியமைத்ததும். நடந்ததென்ன? பிரதமராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றினார். மகிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்ப உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவான அமைச்சர்கள் மேற்கொண்ட ஊழல் மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற குற்றச் செயல்களை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு உரிய முறையில் விசாரணைகளை நடத்தவுமில்லை.

ஜெனீவா மனித உரிமைச் சபையில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணையின் வீரியம் குறைக்கப்பட்டு போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல் பற்றிய விசாரணைகள் எல்லாமே உள்ளகப் பொறிமுறைக்குள் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதாவது இனப்பிரச்சினை விவகாரத்தை இலங்கையின் உள்ளக விவகாரமாக மாற்றுவதிலேயே மைத்திரி- ரணில் அரசு கவனம் செலுத்தியிருந்தது.

2015 இல் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி எதற்காகக் கவிழ்க்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற்றப்படாமல் இலங்கையின் இறைமை மற்றும் ஒற்றையாட்சி அரசியல் யாப்பை பாதுகாக்கும் நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன. மாறாக முப்பது ஆண்டுகால போரினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குரிய தீர்வை ஏற்படுத்துவதோ, அல்லது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குரிய நீதியைப் பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டங்களோ எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை.

ஆகவே, சிங்கள மக்கள் பாதிக்கப்படும்போது ஏற்படுத்தப்படும் ஆட்சி மாற்றங்களில் சிங்கள மக்களுக்குச் சாதகமான வேலைகள் நடைபெறுமேதவிர தமிழ் மக்கள் சார்ந்த எந்தவொரு நலன்களும் கவனிக்கப்படுவதில்லை என்பது இங்கே கண்கூடு.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுகளினால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடுகின்றனர். கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகுமாறும் கோருகின்றனர். இந்தப் போராட்டங்களின்போது ஆரம்பத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் நியாயப்படுத்தி வீதிக்கு இறங்கிய சிங்கள மக்கள், பின்னர் அது பற்றி எதுவுமே பேசவில்லை.




சிங்கள அரசியல் கட்சிகளின் பின்புலங்கள் எதுவுமேயின்றி வீதிக்கு இறங்கிப் போராடிய மக்கள், பின்னர் கொழும்பு காலிமுகத்திடலில் ஒன்றுகூடித் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர்.

ஆனால், கோட்டபாய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவியில் இருந்துவிலகினால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்ற கோஷம் மாத்திரமே தற்போது போராட்டக்காரர்கள் முன்வைக்கும் வாதமாகும். ஊழல்மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் ராஜபக்ஷ அரசாங்கத்தில் அதிகரித்ததனாலேயே தற்போதைய அந்நியச் செலாவணிக் கையிருப்புக் குறைவடைந்து பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதாகச் சிங்கள அரசியல் கட்சிகள் சித்திரிக்கின்றன.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களின்போது இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. சிங்கள, ஆங்கில ஊடகங்களும் இவ்வாறுதான் காண்பிக்கின்றன.

ஆனால், கோட்டபாய ராஜபக்ஷ அரசாங்கத்தினால் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் எதுவுமே சிங்கள அரசியல் கட்சிகளினாலோ அல்லது சிங்கள ஊடகங்களினாலோ முன்வைக்கப்படவேயில்லை.

கோட்டபாயவினால் பாதிக்கப்பட்ட சிங்கள ஊடகவியலாளர்களின் பெயர்கள் இளம் ஊடகவியலாளர் அமைப்பினால் பட்டியலிடப்பட்டுள்ளன. ஆனால், தமிழ் ஊடகவியலாளர்களின் விபரங்கள் எதுவுமே அந்தப் பட்டியலில் இல்லை.

ஆகவே, கோட்டபாய ராஜபக்ஷவின் ஆட்சியில் பாதிக்கப்பட்டது சிங்கள மக்கள் மாத்திரமே என்ற தொனி கூடுதலாகச் சித்திரிக்கப்படுகின்றது. அவருடைய இரண்டு வருட ஆட்சியில் எற்பட்ட பிரச்சினைகள் மாத்திரமே பிரதானப்படுத்தப்படுகின்றன

கோட்டா பதவி விலகி விட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற கருத்துகளை சிங்கள அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல. சிங்கள முற்போக்காளர்கள், சிங்கள இடதுசாரிகள் அனைவருமே முன்வைக்கின்றனர்.

ஏனெனில் இலங்கை ஒற்றையாட்சியின் இறைமையைப் பாதுகாப்பது மாத்திரமே அவர்களின் நோக்கம். 2015 ஆம் ஆண்டு மகிந்தவைக் கவிழ்த்ததுபோன்று 2022 இல் கோட்டபாய ராஜபக்ஷவைக் கவிழ்த்துப் புதிய ஆட்சியைக் கொண்டுவந்தால், சர்வதேச அரங்கில் தற்போது பேசுபொருளாக இருக்கும் ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் முற்றாகவே இரத்துச் செய்துவிடலாமென சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள முற்போக்கு வாதிகளும் நம்புகின்றனர்.

இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் மாற்றங்களைச் செய்து தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியல் அதிகாரங்களை உறுதிப்படுத்தும் நிலையான தீர்வுக்குரிய எண்ணக் கருக்களைக் கோட்டாவுக்கு எதிராகத் தற்போது போராட்டத்தில் ஈடுபடும் சிங்கள மக்கள் கொண்டிருக்கவில்லை என்பதும் பகிரங்கம்.

ஆகவே எரிபொருட்கள் கிடைத்ததும் வீதியில் நின்று போராடும் சிங்கள மக்கள் வீட்டுக்குச் சென்றுவிடுவார்கள். இந்தப் போராட்டத்தில் வடக்குக் கிழக்குத் தமிழர்களும் இணைந்து பங்களிக்க வேண்டுமெனக் கூறுவோர் சிங்கள மக்களின் இந்த மன நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

போராட்டத்திற்குத் தமிழர்கள் ஆதரவு கொடுக்கலாமே தவிர நேரடியாகப் பங்குகொள்ளக்கூடிய சூழல் இல்லை என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

அதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். ஒன்று- எரிபொருள் பிரச்சினைகள் மாத்திரமே சிங்கள மக்களின் போராட்டத்தில் முன்வைக்கப்படுகின்றன. கோட்டபாய வீட்டுக்குச் சென்றுவிட்டால் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்ற கருத்து ஏற்புடையதல்ல.

இரண்டாவது- சிங்கள அரசியல் கட்சிகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை மாற்றியமைப்பது மற்றும் 19 ஆவது திருத்தத்தை அல்லது 20 ஐ ரத்துச் செய்து 21 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர மாத்திரமே முற்படுகின்றனர்.

பிரதானப்படுத்தப்படும் இந்த இரு காரணங்களும் சிங்கள மக்களுக்கு மாத்திரமே உரியவை. ஆனால், எழுபது ஆண்டுகால அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஈழத்தமிழர்களுக்கு அது தீர்வாக அமையாது. இந்தவொரு நிலையிலேதான் சிங்கள மக்களின் தொடர் போராட்டத்தில் ஈழத் தமிழ் மக்கள் பங்கெடுப்பதில் ஆர்வம் காண்பிக்கவில்லை என்பது வெளிப்படையானது.

இந்தப் போராட்டம் தொடர்பாக அவதானம் செலுத்திவரும் கொழும்பில் உள்ள அமெரிக்க, இந்தியத் தூதரகங்கள்கூட ஈழத்தமிழ் மக்கள் இந்தப் போராட்டத்தில் பங்கெடுக்கிறார்களா இல்லையா என்பதை உற்றுநோக்குகின்றனர். போராட்டத்தில் ஏன் பங்குகொள்ளவில்லை என்றெல்லாம் வேறு நபர்கள் மூலமாக அறிந்து வருகின்றனர்.

அதற்கான உரிய காரணங்கள் சொல்லப்படும்போது, கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் அதனை மறுக்கவில்லை.

ஆனால், இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறை மற்றும் 20 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்து 19 ஐ நடைமுறைப்படுத்துவதற்காக 21 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில் ஆர்வமாகவுள்ளமைக்கு வெளிநாட்டுத் தூதரகங்களும் ஒரு காரணம்.

இலங்கையில் யார் ஆட்சி செய்தாலும் பிரச்சினையில்லை. தமக்குரியவாறான ஆட்சியும், புவிசார் அரசியல் போட்டியில் இலங்கை சீனாவின் பக்கம் சென்றுவிடக் கூடாது என்ற கோணத்திலுமே அமெரிக்க, இந்திய அரசுகள் சிந்திக்கின்றன.

சீனாவும் தனக்குரிய ஆட்சியை அமைக்க இலங்கையின் தற்போதைய நெருக்கடியைப் பயன்படுத்துகின்றது என்பதும் உண்மையே. ஆகவே சிங்கள மக்களின் போராட்டத்தில் புவிசார் அரசியல் போட்டிகளும் உள்நுழைந்து விளையாடுவதை அவதானிக்க முடிகின்றது.

இந்த இடத்திலேதான் ஈழத்தமிழர்கள் விவகாரம் மேலும் பின்னோக்கியுள்ளது. சிங்கள மக்களினால் தற்போது முன்னெடுக்கப்படும் போராட்டம் இலங்கை ஒற்றையாட்சியைப் புதுப்பிப்பதற்கான மற்றொரு சிறிய ஏற்பாடு மாத்திரமே என்பதைச் சிங்களக் கட்சிகளின் கருத்துகள் எடுத்துக் காண்பிக்கின்றன.

■








# 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்த வீரர்கள்

ஐ. பி.எல் போட்டியில் 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதத்தைத் தவறவிட்ட வீரர்கள் வரிசையில் ருதுராஜ் கைக்வாட் இணைந்துள்ளார்.

90 ஓட்டங்களைக் கூட அவர்கள் எளிதாக அடித்து விடுவார்கள். ஆனால், 90 என்ற இலக்கைத் தொட்டதும் அடுத்த 10 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் இயற்கையாகவே தோன்றும் பதற்றத்தால் கைகால் நடுங்குவதைப் போன்றதொரு உணர்வைப் பெற்று தடுமாறுவார்கள்.

99 ஓட்டங்களைத் தொட்டு விட்டால் சச்சின் போன்ற எந்த ஒரு உலகத்தரம் வாய்ந்த வீரராக இருந்தாலும் ஒரு நிமிடம் பதற்றம் அடையாமல் இருக்க முடியாது. அந்தப் பதற்றத்தைத் தாண்டி விட்டால் அது சாதனையாகும். ஆனால், அந்தச் சமயத்தில் அதிரஷ்டமும் சற்று கைகொடுக்கத் தவறினால் அதுவே வேதனையாக மாறிவிடும். ஐ.பி.எல் வரலாற்றில் 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்த வீரர்களின் பட்டியல்,

**1. விராட் கோலி:**

ஐ.பி.எல் வரலாற்றில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர் என்ற சாதனை படைத்துள்ள விராட் கோலி கடந்த 2013 இல் பெங்களூரின் கப்டனாகப் பதவியேற்ற போது டெல்லிக்கு எதிராக நடைபெற்ற ஒரு போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தனது அணிக்கு அற்புதமாக விளையாடிய அவர் 10 பவுண்டரி, 4 சிக்சர்களுடன் சதத்தை நெருங்கி 99 (58) ஓட்டங்கள் எடுத்த போது துரதிஷ்டவசமாக ரன் அவுட்டானார். அதன் வாயிலாக ஐ.பி.எல் வரலாற்றில் 99 ஓட்டங்களில் ரன் அவுட்டான முதல் வீரர் மற்றும் ஒரே பேட்ஸ்மேன் என்ற பரிதாபத்துடன் பெவிலியன் திரும்பினாலும் அவரின் 99 ஓட்டங்களால் பெங்களூர் 183/4 ஓட்டங்கள் சேர்த்து பின்னர் 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

**2. பிரிதிவி ஷா:**

குட்டி சேவாக் என ரசிகர்களால் கொண்டாடப்படும் இளம் வீரர் பிரிதிவி ஷா கடந்த 2019 இல் கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் அந்த அணி நிர்ணயித்த 186 ஓட்டங்கள் இலக்கைத் துரத்திய போது தொடக்க வீரராகக் களமிறங்கி சரவெடியாக பேட்டிங் செய்தார். ஆனால், இளம் வீரரான அவர் 12 பவுண்டரி, 3 சிக்சருடன் 99 (55) ஓட்டங்கள் எடுத்திருந்த போது விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக்கிடம் கேட்ச் கொடுத்து வெளியேறினார். இறுதியில் அந்த பரபரப்பான போட்டி டையில் முடிவடைந்தாலும் சூப்பர் ஓவரில் டெல்லி வென்றது. ஆனால், அன்றைய நாளில் துரதிஷ்டவசமாக சதத்தைத் தவறவிட்ட பிரிதிவி ஷா அதன்பின் இதுவரை முதல் சதத்தைப் பதிவு செய்யவில்லை என்பது அவருக்கு நிச்சயம் இன்றும் உறுத்தலைக் கொடுத்துக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**3. இஷான் கிசான்:**

2019 ஐ.பி.எல் தொடரில் பெங்களூருக்கு எதிரான ஒரு போட்டியில் அந்த அணி நிர்ணயித்த 202 ஓட்டங்கள் இலக்கைத் துரத்திய மும்பைக்கு ரோகித் சர்மா போன்ற டாப் ஆர்டர் வீரர்கள் சொற்ப ஓட்டங்களிளல் அவுட்டான நிலையில் மிடில் ஆர்டரில் களமிறங்கி பட்டாசாக வெடித்து வெறும் 2 பவுண்டரி, 9 மெகா சிக்சர் உட்பட 99 (58) எடுத்து சதத்தை எட்ட முயற்சித்த போது இளம் வீரர் இஷான் கிசான் ஆட்டமிழந்தார். அந்தப் போட்டியும் டையில் முடிவடைய பெங்களூர் சூப்பர் ஓவரில் வென்றது. பிரிதிவி ஷா போலவே அன்றைய நாளில் சதத்தைக் கோட்டை விட்ட இஷான் கிசான் இன்றுவரை முதல் சதத்தை அடிக்க முடியாமல் தவித்து வருகிறார்.

**4. கிறிஸ் கெயில்:**

ஐ.பி.எல் வரலாற்றில் 6 சதங்களை அசால்ட்டாக அடித்து அதிக சதங்கள் அடித்த பேட்ஸ்மேன் என்ற சாதனை படைத்த சூறாவளி புயல் கிறிஸ் கெயிலையும் இந்த 99 என்ற பதற்றம் விட்டு வைக்கவில்லை. ஆம், 2020 ஐ.பி.எல் தொடரில் ராஜஸ்தானுக்கு எதிரான ஒரு போட்டியில் முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப்பிற்கு 3 ஆவது வீரராகக் களமிறங்கிய கிறிஸ் கெயில் வழக்கம்போல 6 பவுண்டரி, 8 சிக்சருடன் சூறாவளி ஆட்டத்தை வெளிப்படுத்தி 99 (63) ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஜோப்ரா ஆர்ச்சர் வீசிய பந்தில் கிளீன் போல்டாகி கோபத்துடன் பேட்டை வீசி எறிந்து ஏமாற்றத்துடன் வெளியேறினார். இதன் காரணமாக இப்பட்டியலில் கிரிஸ் கெயிலும் இடம் பெற நேர்ந்தது.

**5. ருதுராஜ் கைக்வாட்:**

இந்த வருட ஐ.பி.எல் தொடரில் ஹைதராபாத்துக்கு எதிராக நடந்த போட்டியில் டேவோன் கான்வேயுடன் ஜோடி சேர்ந்த இளம் சென்னையின் தொடக்க வீரர் ருதுராஜ் முதல் ஓவரிலிருந்தே அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி 6 பவுண்டரி, 6 சிக்சர்களுடன் 99 (57) ஓட்டங்கள் எடுத்திருந்தபோது பவுண்டரி அடிக்க முயன்று துரதிஷ்டவசமாகத் தமிழக வீரர் நடராஜன் வீசிய பந்தில் கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார். இருப்பினும் கான்வேயுடன் 182 ஓட்டங்கள் முரட்டுத்தனமான பார்ட்னர்ஷிப் அமைத்த அவர் ஐ.பி.எல் வரலாற்றில் அதிகபட்ச பார்ட்னர்ஷிப் அமைத்த சென்னை ஜோடி என்ற வரலாற்றைப் படைத்து சென்னையின் வெற்றிக்கும் பங்காற்றி ஆட்டநாயகன் விருதை வென்றார்.





